
பக். 06

பக். 07

பக். 24

பக். 25



கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை


# உதயன்

பக்கம் : 34
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 092 வள்ளுவர் ஆண்டு: 2045 மாசி 14, புதன் 26.02.2014


26 FEB 2014

# டக்ளஸ், கருணா, பிள்ளையான் மீது குற்றச்சாட்டுக்கள் ஆயினும் அரசு பாராமுகம் என்கின்றார் நவிப்பிள்ளை

★ துணை ஆயுதக்குழுத் தலைவர்களான டக்ளஸ் தேவானந்தா, கருணா , பிள்ளையான் மீது மோசமான குற்றச்சாட்டுகள் உள்ள போதிலும், அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

★ இலங்கை இராணுவத்தினர், விடுதலைப் புலிகளால் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

★ உள்நாட்டு விசாரணைகள் கண்டறியத் தவறிய உண்மைகளை கண்டறியும் வகையில், சுதந்திரமான சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவேண்டும். அதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தயார்.

★ 2006 இல் திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை, மூதூரில் 17 தொண்டுப் பணியாளர்கள் படுகொலை உள்ளிட்ட போர்க் குற்றங்கள் குறித்த, பொறுப்புக்கூறும் விசாரணைகளில் பெரியளவில் எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

(நவநீதம்பிள்ளையின் அறிக்கை முழுவிவரம் 15 ஆம் பக்கத்தில்)



## நவியின் அறிக்கையில் உதயன் மீதான தாக்குதல்

ஜெனிவா, பெப். 26
இலங்கையில் நடைபெற்று முடிந்த போரின் இறுதி நாள்களில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மனித உரிமை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜெனிவா மனித உரிமைகள் சபைக்கு நேற்றுமுன்தினம் வழங்கியுள்ள 24 பக்கங்களைக்

23 ஆம் பக்கம் பார்க்க

## நாட்டை பிளவுபடுத்துவற்கு முயற்சிக்கிறது சர்வதேசம்

*பிரதியமைச்சர் யாழில் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம்,பெப்.26
மனித உரிமைகள் விடயத்தை முன்னிறுத்திச் சர்வதேச சமூகம் நாட்டுக்குள் மீண்டும் பிளவை ஏற்படுத்த முயற்சிப்பதாக குற்றஞ்சாட்டியுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு பிரதியமைச்சர் சந்திரசிறி முத்துக்குமார, கடந்த

23 ஆம் பக்கம் பார்க்க

## ஏற்கவேமாட்டோம்

*நவிப்பிள்ளைக்கு இலங்கை பதில்*

கொழும்பு,பெப்.26
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் பரிந்துரைகளை இலங்கை ஒருபோதும் ஏற்கமாட்டாதென இலங்கை அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சர்வதேச மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து விசாரிக்க, சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்கவேண்

23 ஆம் பக்கம் பார்க்க

# தனித் தமிழீழத்துக்கு பொது வாக்கெடுப்பு

*தேர்தல் விஞ்ஞாபனத்தில் முதல்வர் ஜெயலலிதா அதிரடி*

சென்னை,பெப்.26
தமிழீழம் மலர்ந்திட இலங்கை வாழ் தமிழர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ளது முதல்வர் ஜெயலலிதா அ.தி.மு.க அரசு. தனது நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபன அறிக்கையிலேயே அது இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான அ.தி.மு.கவின் வேட்பாளர் பட்டியலை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிரடியாக வெளியிட்ட முதல்வர் ஜெயலலிதா, நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்தார்.
அந்த அறிக்கையில் இலங்



தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் ஜெயலலிதா

23 ஆம் பக்கம் பார்க்க

## ஐரோப்பாவில் புலித் தடையை நீக்குமாறு போர்

கொழும்பு,பெப்.25
ஐரோப்பாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி தொடுக்கப்பட்

25 ஆம் பக்கம் பார்க்க

## கோபிராஜின் சாவில் சந்தேகம்

*உடல் இன்று யாழ்ப்பாணத்துக்கு*

யாழ்ப்பாணம்,பெப்.26
மகஸின் சிறைச்சாலையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியான கோபிராஜின் உடல் யாழ்ப்பாணத்துக்கு இன்று புதன்கிழமை எடுத்து வரப்படவுள்ளது. அவரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அவரது சொந்த இடமான வடமராட்சியில் இடம் பெறவுள்ளன. உயிரிழந்த கோபிராஜின் மனைவி, பிள்ளைகள் ஆகியோர் பிரிட்டனிலிருந்து நேற்றுக் கொழும்பு வந்தடைந்தனர்.
இந்த மரணம் தொடர்பில் தமக்குச் சந்தேகம் நிலவுவதாக உறவினர்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.
கோபிதாஸின் சகோதரர் இது குறித்துக் குறிப்பிடுகையில், நீண்ட திட்டத்துடன் இதனைச் செய்துள்ளனர். எமக்கு இது தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது. இதற்கு முன்னரும் இவரைக் கொலை செய்ய இரண்டு தடவைகள் முயற்சி செய்தனர். அது வெற்றியளிக்கவில்லை. இதன் பின்புலத்திலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்தக் கொலை தொடர்பில் எமக்குச் சந்தேகம் இருக்கிறது.
கோபிதாஸின் தந்தை தெரிவிக்கையில், சம்பவம் அறிந்தவுடன் நான் அங்கு சென்

23 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச விசாரணைக்கு கூட்டமைப்பு முழு ஆதரவு

*நவிப்பிள்ளையின் அறிக்கைக்கு வரவேற்பு*

கொழும்பு,பெப் 26
போரின்போது இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டுமென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கைக்குப் பூரண ஆதரவளிக்கப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க .

## வடக்கு மாகாண சபையை முடக்கி வருகின்றது அரசு

*முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம்,பெப்.26
வடக்கு மாகாண சபையை கொழும்பு அரசு ஜனநாயக நடைமுறைகளுக்குப் புறம்பாக முடக்கி வருகின்றது என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.
நாம் எவ்வளவு பணம் செலவு செய்து தெருக்கள் போட்டோம். ரயில் வரச் செய்தோம். கட்டடங்கள் கட்டினோம். பலவேலைத் திட்டங்களில் ஈடுபட்டோம்.



25 ஆம் பக்கம் பார்க்க

## குர்ஷித்துடன் பீரிஸ் பேச்சு

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

23 ஆம் பக்கம் பார்க்க

## நவநீதம்பிள்ளை வழங்கியுள்ள அறிக்கைப்படி செயற்படுங்கள்

*சர்வதேசத்துக்கு மன்னிப்புச்சபை அழைப்பு*

கொழும்பு,பெப்.26
இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 5 ஆண்டுகளுக்குப் பின்னரும், அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காதிருப்பது முற்றிலும் வெட்

23 ஆம் பக்கம் பார்க்க

# வல்வெட்டித்துறை பட்ஜெட்; இடைக்கால தடை நிராகரிப்பு

யாழ்ப்பாணம், பெப் 26

வல்வெட்டித்துறை நகரசபையின் இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இடைக்காலத் தடைக் கோரிக்கையை நிராகரித்த யாழ்.மேல்நீதிமன்றம், அந்த மனுவில் உள்ள ஏனைய விடயங்கள் தொடர்பில் எதிர்மனுதாரர் ஆட்சேபனை தெரிவிப்பதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு வழக்கை ஒத்திவைத்தது.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

வல்வெட்டித்துறை நகரசபையில் இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சட்ட விரோதமான முறையில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்து அதனை வலுவிழக்கச் செய்யுமாறு கோரியும்,சபை அங்கத்தவர்களான எதிர் மனுதாரர்கள் வருமானங்கள், செலவீனங்களுடன் தொடர்புபடுவதனைத் தடைசெய்யுமாறு கோரியும் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சபையின் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்ட 5 உறுப்பினர்களால் கடந்த 24 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் வடக்கு மாகாண முதலமைச்சர், சட்டமா அதிபர், சபை உறுப்பினர்கள் உட்பட 17 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சபை நடவடிக்கைகளில் தவிசாளர் உட்பட சபை உறுப்பினர்கள் அனைவரும் பங்குபற்றுவதற்கு உரித்துடையவர்கள்.வரவு - செலவுத் திட்டம் பரிசீலிக்கப்படும் போது சகல உறுப்பினர்களின் சுயாதீனமானதும் முழு உரிமையுடனுமான பங்குபற்றுதலுடன் வாக்கெடுப்பு இடம்பெற வேண்டும்.

தவிசாளர் இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தைக் கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி சமர்ப்பித்தார். அது 5:2 எனும் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. பின்னர் கடந்த டிசம்பர் 27 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனுதாரர்கள் தமது மனுவில், அன்றையதினம் நாம் உரிய நேரத்துக்குச் சென்றிருந்தபோதும் சபை அமர்வு இடம்பெறும் பகுதிக்குள் செல்ல அங்கு நின்றிருந்தவர்களால் அனுமதிக்கப்படவில்லை. கூட்டத்தில் பங்கு பற்றுவதனையும், திட்டத்தைப் பரிசீலிப்பதனையும், வாக்கெடுப்பில் பங்குபற்றுவதனையும் வாசலில் நின்றிருந்தவர்கள் தடுத்துவிட்டனர். பொலிஸாரின் உதவியைக் கோரியிருந்த நிலையில் பொலிஸார் அங்கு வந்தும் தாம் சபைக்குச் செல்ல முடியவில்லை.பின்னர் சபை அமர்வுக்குள் இருந்து வெளியே வந்த சபைத் தவிசாளர் வரவு -செலவுத் திட்டம் நிறை வேற்றப்பட்டதாகத் தெரிவித்தார்.

சபை அமர்வை இடைநிறுத்துமாறு அல்லது பிற்போடுமாறு நாம் கோரியபோதும் அதுவும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. எனவே எமது கோரிக்கையை மீறிக் கூட்டத்தை ஆரம்பித்தமை, தொடர்ந்து நடத்தியமை, திட்டத்தைப் பரிசீலனைக்கு உட்படுத்தியமை, வாக்கெடுப்புக்கு விட்டமை, தீர்மானம் மேற்கொண்டமை அனைத்தும் சட்டவிரோதமானவையும் தவறானவையும் நியாயமற்றவையும் செல்லுபடியற்றதுமான செயற்பாடுகளுமாகும். அத்துடன் தமது அடிப்படை உரிமைகளை மீறும் செயலுமாகும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

எனவே இவற்றைப் புறந்தள்ளி நீக்குவதற்கான உறுதிகேள் எழுத்தாணை ஒன்றையும் வரவு - செலவுத் திட்டம் சபைக்குச் சட்டப்படி சமர்ப்பிக்கப்படவில்லை என்பதனால் அதனைச் சபைக்கு முறையாகச் சமர்ப்பிப்பதற்கு ஒரு பொதுக் கடப்பாடு எனும் அடிப்படையில் அதனை நிறைவேற்றுமாறு சபைத் தவிசாளருக்குப் பணிப்பதான ஏவுஎழுத்தாணை ஒன்றையும், திட்டம் தொடர்பாக எந்தவித வருமான அல்லது செலவின அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட வகையில் எந்த நடவடிக்கைகளையும் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்படும் சபையின் உறுப்பினர்கள் தனித்தோ கூட்டுச் சேர்ந்தோ எடுக்கக் கூடாது எனத் தடை செய்வதான ஒரு தடை எழுத்தாணையையும், அவர்கள் நிதி யாண்டுக்கான வருமானங்கள், செலவீனங்களைக் கையாள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது எனத்தடை செய்வதற்கான தடையுத்தரவு ஒன்றையும் வழங்குமாறும் இந்த வழக்கில் மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

இந்நிலையிலேயே இடைக்காலத் தடை உத்தரவு மேல் நீதிமன்றினால் நேற்று நிராகரிக்கப்பட்டது. மனு தாரர்களால் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் எதிர் மனுதாரர்களால் ஆட்சேபனை தெரிவிப்பதற்காக வழக்கு ஏப்ரல் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-4)

## உலக வங்கிக் குழு இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், பெப்.26

வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கிராமங்கள் மற்றும் சிறு நகர மேம்பாட்டு திட்ட (புறநெகும) வேலைத் திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு உலக வங்கியின் நிபுணத்துவக் குழு இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இந்தக் குழு இத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய உள்ளூராட்சிச் சபைகளின் தொடர்புடைய உத்தியோகத்தர்களுடன் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலிருந்தும் தவிசாளர், செயலாளர், தொழில்நுட்ப அலுவலர் பெறுகை நிதி உதவியாளர் திட்டம் தொடர்பான உத்தியோகத்தர் சமூக கண்காணிப்புக் குழு ஆகியோரில் ஐந்து பேரை கலந்து கொள்ளுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ அறிவித்துள்ளார்.

கலந்துரையாடலில் பங்குபற்றுவோர் 'புறநெகும' திட்டம் தொடர்பான பூரண அறிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். (த-9)

## முதியவரை ஏமாற்றி பணம் பறித்த இளைஞர்

தென்மராட்சி, பெப்.26

நோயாளரைப் பார்வையிட வந்த முதியவரை ஏமாற்றிப் பணம் பறித்துச் சென்ற 'டிப் டொப்' இளைஞர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி மருத்துவமனையில் இடம் பெற்றது.

மருத்துவமனை விடுதியில் தங்கியுள்ள ஒருவரைப் பார்வையிடப் பாலாவியைச் சேர்ந்த 73 வயது வயோதிபரை அணுகிய இளைஞர்தான் பாலாவியைச் சேர்ந்த ஒருவரின் மகனென அறிமுகப்படுத்தி பிரதேச செயலகத்தில் தனக்கு வழங்கப்படவுள்ள கொடுப்பனவு பெறுவதற்கு முத்திரை வாங்கப் பணம் கொண்டு வராததால் 250 ரூபா பணம் தருமாறும், பிரதேச செயலகத்தில் பணத்தைப் பெற்றதும் கொண்டு வந்து தருவதாகவும் கூறியுள்ளார்.

இதனை நம்பிய வயோதிபர் விடுதியில் தங்கியுள்ளவரின் மருத்துவச் செலவுக்கென கொண்டு வந்த 500 ரூபாவினைக் கொடுத்துவிட்டு 3 மணி நேரம் அவரின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்து ஏமாந்தார்.

காசை எதிர்பார்த்துக் காத்திருந்ததால் நோயாளரைப் பார்வையிடும் நேரத்தில் விடுதிக்கு செல்லாமல் மருத்துவமனைக்கு வெளியே காத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)



*நாவாந்துறைக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையில் கடலில் அமைந்துள்ள குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயம் கடந்த முப்பது வருடங்களின் பின்னர் பூஜை வழிபாடுகளுக்காக கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை ஆலயத்தை திறந்து வைத்தார். (ஐ-20-21)*

## தமிழர் கலாசார நாடகங்களை மேடையேற்ற பொலிஸார் தடை

***தம்பாட்டியில் பிரதிகளையும் பறித்தெடுத்தனர் நேற்று***

யாழ்ப்பாணம், பெப்.26

தமிழரின் பண்பாட்டுக் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் நாடகங்களை மேடை ஏற்ற அனுமதிக்க முடியாது என்று கூறி நாடகக் கலைஞர்களை கடுமையாக எச்சரிக்கை செய்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் நாடகப் பிரதிகளையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஊர்காவற்றுறை தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை காந்திஜி நாடகக் கலைஞர்களால் காத்தவராயன் சிந்து நடைக் கூத்து, பண்டார வன்னியன் தென்மோடி நாடகக் கூத்து என்பன மேடை ஏற்றப்பட விருந்தன.

இவற்றை மேடையேற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் தம்பாட்டி காந்திஜி நாடக மன்றக் கலைஞர்கள் ஈடு பட்டிருந்தனர். இதன்போது நேற்று மாலை அந்தப் பகுதிக்கு வந்த பொலிஸார் கடுந்தொனியில் கலைஞர்களை எச்சரித்துள்ளனர்.

அத்தோடு தமிழர்களின் பண்பாட்டு கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் இத்தகைய நாடகங்களை மேடை ஏற்ற அனுமதிக்க முடியாது என்றும், இந்த நாடகங்கள் விடுதலைப் புலிகளுக்குச் சார்பானவை என்றும் தெரிவித்து நாடகக் கலைஞர்களிடம் இருந்த நாடகப் பிரதிகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

பொலிஸாரின் நடவடிக்கையால் ஆத்திரமடைந்த அந்தப் பகுதி மக்கள் பொலிஸாருக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-400)

## உணவகங்களுக்கு தரச் சான்றிதழ்

**இந்த வருடத்துக்கான தரச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.**

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் காணப்படும் உணவகங்களுக்கான தரச் சான்றிதழ் இன்று புதன்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது என யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா அறிவித்துள்ளார்.

நேற்று மாநகர சபையில் இடம் பெற்ற கூட்டத் தீர்மானத்தின் அடிப்படையில் உணவு கையாளும் நிலையங்களுக்கான இந்த வருடத்துக்கான தரச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் உணவகங்கள் தேனீர்ச் சாலைகள், உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களுக்கான தரச் சான்றிதழ்கள் இன்றிலிருந்து ஒரு வார காலத்திற்குள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்தின் பிரகாரம் உணவு கையாளும் நிலையங்களின் தரத்தினை மதிப்பீடு செய்து அதற்கு அமைவாக முறையே 'ஏ' (பச்சை நிற சான்றிதழ்), 'பி' (நீல நிறச் சான்றிதழ்), 'சி' (றோஸ் நிறச் சான்றிதழ்) என்ற அடிப்படையில் தரச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. இச் சான்றிதழ் வழமை போல் இல்லாது இந்த வருடம் இலவசமாக வழங்குவதற்கு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

மாநகர சபைக்குட்பட்ட உணவகங்களின் சுகாதாரத் தன்மையை மேம்படுத்தவே இத் தரச் சான்றிதழ்கள் வருடந் தோறும் வழங்கப்படுகின்றன. பொதுமக்களின் நன்மை கருதி வழங்கப்படும் இச் சான்றிதழ்கள் மக்கள் சுத்தமான தரமான உணவகங்களைத் தெரிவுசெய்து ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். இச் சான்றிதழ் வழங்கப்பட்ட பின் அவ் உணவகங்களின் சுகாதாரத்தில் குறைபாடுகள் காணப்படுவதாக மாநகர சபையினால் மதிப்பிடப்படுமாயின் அத்தரச் சான்றிதழ்கள் பறிமுதல் செய்யப்படும் என மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைவாக இன்று முதல் சுகாதாரப் பரிசோதகர்கள் உணவகங்களுக்குச் சென்று பார்வையிட்டு உணவகம் தொடர்பான தரவுகளைச் சேகரித்து மதிப்பீடு செய்வதன் ஊடாக இத் தரச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என மாநகர சபை அறிவித்துள்ளது. (த-400)

## பாலத்தில் சடலமாக மீட்கப்பட்டவர் வயிற்றில் காயம் ஏற்பட்டே சாவு

தென்மராட்சி, பெப்.26

மட்டுவில் புத்தூர் வீதியில் வண்ணாத்திப் பாலத்திற்கு அண்மித்த பகுதியில் வீதியில் இறந்து காணப்பட்டவரின் சடலம் கூரற்ற ஆயுதம் ஒன்றின் தாக்கத்தினால் வயிற்றைக் கிழித்து இரண்டு இரத்தக்குழாய்களைச் சேதப்படுத்தியதால் அதிகளவு இரத்தம் வெளியேறி மரணம் சம்பவித்திருக்கலாமென உடற் கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

இவர் அச்சுவேலியிலிருந்து மடட்டுவில் கிழக்கில் உள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளின் முன்பக்கத்தில் வீட்டுக்குரிய உணவுப் பொருள்களை வைத்துக் கொண்டுவந்துள்ளார்.

வண்ணாத்திப் பாலத்திற்கு அண்மித்து வந்தபோது எதிரே வந்த வாகனம் வெளிச்சத்தைக் குறைக்காமல் வந்ததால் வீதியின் ஓரத்திற்கு மோட்டார் சைக்கிளை செலுத்த முற்பட்ட போது கால்களுக்கு இடையில் வைக்கப்பட்டிருந்த பொருள்கள் சரியவே அதனை சீர் செய்ய முற்பட்ட வேளையில் வீதியோர மின்கம்பத்துடன் மோட்டார்சைக்கிள் மோதியிருக்கலாமெனவும் அவ்வேளையில் மோட்டார் சைக்கிள் கான்ரில் பிடி வயிற்றில் ஆழமாக குத்தி காயத்தை ஏற்படுத்தியிருக்கலாமெனவும் நம்பப்படுகின்றது.

காயம் ஏற்பட்ட போதிலும் எழுந்து சுமார் 20 மீற்றர் தூரம் நடந்து வந்த நிலையில் அதிகளவு இரத்தம் வெளியேறியதால் அவர் மயங்கி வீழ்ந்து மரணமடைந் திருக்கலா மெனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்தினை பார்வையிட்ட போது மோட்டார் சைக்கிள் காணப்பட்ட இடத்திலிருந்து இரண்டு மீற்றர் தூரத்துக்கு அப்பால் இவர் கொண்டு வந்த பருப்பு சிந்திய நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் உள்ள தோட்டத்திற்குச் சென்று விட்டு மட்டுவில் கிழக்கில் உள்ள வீட்டுக்கு வந்த போதே சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆண்டி உதயகுமார் (வயது 43) என்பவரே மரணமானவராவார்.

இவர் மட்டுவிலில் திருமணம் செய்து ஒரு வருடமென தெரிவிக்கப்பட்டது. (த-9)

## வண்ணை சிவன் ஆலய கொடியேற்றம் நாளை

யாழ்ப்பாணம், பெப்.26
யாழ்.திருவண்ணை நகர் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர ஆலய (சிவன் திருவிழா) பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை சிவராத்திரி தினம் ஆரம்பமாகிறது. முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் கொடியேற்றத்தைத் தொடர்ந்து இரண்டாம் நாளிலிருந்து மூன்று நாள்கள் விநாயகர் திருவிழாவும், ஐந்தாம் நாளிலிருந்து மூன்று நாள்கள் சுப்பிரமணியர் திருவிழாவும் எட்டாம் நாளிலிருந்து பக்தோற்சவமும் நடைபெற்று பத்தாம் நாள் இரவுத் திருவிழாவிலிருந்து பஞ்சமூர்த்திகள் உற்சவம் நடைபெறுவதுடன் 18ஆம் திருவிழாவான மார்ச் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சமூர்த்திகளும் பஞ்சரதங்களில் ஆரோகணித்து பவனி வருதலும் நடைபெற்று முற்பகல் 1 மணிக்கு ரத அவரோகணம் இடம்பெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடேசர் அபிஷேகம் இடம்பெறுவதுடன் காலை 10 மணிக்கு பஞ்சமூர்த்திகள் தீர்த்தவாரிக்கு எழுந்தருளி தீர்த்தம் நடைபெறும். மாலை கொடியிறக்கம் இடம்பெறும்.

கொடியேற்றம், தேர், தீர்த்தம், திருக்கல்யாணம் தவிர்ந்த ஏனைய திருவிழாக்களில் தினமும் வசந்த மண்டபப் பூசைகள் காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடம்பெற்று திருவிழாக்கள் ஆரம்பமாகும். (ஓ)



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கிணங்க நேற்று யாழ்.நூலகத்தில் நடைபெற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் பிரதி புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி முத்துக்குமாரவிடம் வன்செயல் பாதிப்புக்கான நட்டஈட்டுக் காசோலையைப் பெற்றுக்கொண்டு பெண் ஒருவர் கண்ணீர்விட்ட காட்சி. (ஓ-21)

## ஆனந்தபுரம் மக்களுக்கு மீண்டும் குடிதண்ணீர்

**ஆனந்தபுரம் கிராம மக்களுக்கு 12 மாதங்களும் குடிதண்ணீர் வழங்க வேண் டிய தேவை ஏற்பட்டுள்ளதால் பிரதேச சபையால் தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டுக் குடி தண்ணீர் விநியோகம் இடம் பெற்று வருகிறது.**

வலி.தென்மேற்கு, பெப்.26
குடி தண்ணீர்த் தாங்கிகளுக்குப் பாதுகாப்பு வழங்க கிராம முன்னேற்றச் சங்கம் முன்வந்ததைத் தொடர்ந்து ஆனந்தபுரம் மக்களுக்குப் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் குடிதண்ணீர் மீண்டும் வழங்கப்பட்டு வருகின்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ள ஆனந்தபுரம் கிராம மக்களுக்கு 12 மாதங்களும் குடிதண்ணீர் வழங்க வேண் டிய தேவைஏற்பட்டுள்ளதால்பிரதேச சபையால் தண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டுக் குடி தண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

அங்கு வைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர் தாங்கிகளில் இரு தாங்கிகள் மாயமாய் மறைந்ததுடன் ஒரு தாங்கி சேதப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் பிரதேச சபையால் நிறுத்தி வைக் கப்பட்டது.

இதை அடுத்து குடி தண்ணீர் தாங்கிகளுக்கான பாதுகாப்பை கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து தாங்கிகள் வைக்கப்பட்டு மீண்டும் பிரதேச சபையி னால் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகச் செயலாளர் தெரிவித்துள்ளார். (வ-115)

# ரூ.80 லட்சம் செலவில் ஐஸ் தொழிற்சாலை

### *யூ.என்.எச்.சி.ஆர் நிதி உதவியுடன் கண்டாவளை, புன்னைநீராவியில்*

கண்டாவளை, பெப்.26
கிளிநொச்சி மாவட்டத்தில் மீனவர்களின் நலன்கருதி முதன் முதலாக யு.என்.எச்.சி .ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் ஐஸ் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது.

கண்டாவளைப் பிரதேசத்தில் புன்னைநீராவி என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட விருக் கும் இந்தத் தொழிற்சாலையினால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரத்து இருநூறுக்கும் அதிகமான மீனவர்கள் நன்மையடைவார்கள்.

கண்டாவளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மீனவர்கள் ஐஸ்கட்டி பெற்றுக்கொள்ள வசதியில்லாததனால் பிடிக்கும் கடலுணவுகளைப் பாதுகாக்க முடியாமையாலும் அவற்றை அதிக விலைக்குச் சந்தைப்படுத்த முடியாமையாலும் பொருளாதார ரீதியில் நட்டமடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களின் நிலைப்பாடு குறித்துக் கண்டாவளை கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் கிளிநொச்சி மாவட்ட கடற் றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து ஐஸ் தொழிற்சாலையை அமைக்க முன்வந்துள்ள மேற்படி நிறுவனம் அதற்கென 80 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (ஓ-115)



ஒட்டோ சங்கக் கிளைத் திறப்பு விழாவில் அதனைத் திறந்து வைத்த சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் திருமதி செல்வகுமாரியும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களும்.

## போக்குவரத்துக்கு இடையூறின்றி ஒட்டோ தரிப்பிட வசதி

### *மானிப்பாயில் ஒட்டோ சங்கக் கிளை திறப்பு விழாவில் உப தவிசாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப்.26
போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத விதத்தில் தரிப்பிட வசதிகள் மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட ஒட்டோ சாரதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று வலி. தென்மேற்கு பிரதேச சபையின் உதவித்தவிசாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒட்டோ சங்கத்தின் ஏற்பாட்டில் மானிப்பாய் கிளைச்சங்கத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் மானிப்பாயில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது, மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒட்டோக்களுக்கு பிரதேச சபையால் வழங்கப்படும் 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படும் நடைமுறை கொண்டு வரப்படவுள்ளது. இதற்கமைவாக பொது மக்களது போக்கு வரத்துக்கு இடையூறு ஏற் படுத்தாத விதத்தில் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்கும். ஒட்டோ சாரதிகளும் மக்களுக்கான போக்குவரத்து தேவைகளை சிறந்த முறையில் வழங்க வேண்டும் என்றார்.

இதேவேளை திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் திருமதி செல்வக்குமாரி கிளை அலுவலகத்தை திறந்து வைத்தார். யாழ்.மாவட்ட ஒட்டோ சங்கத் தலைவர் மனோகர ராஜு, மானிப்பாய் பொலிஸ் அதிகாரி சமன்திலக ,மானிப்பாய் கிராம சேவகர் எஸ்.தனபாலசிங்கம், சுன்னாகம் கிளைச் சங்கத் தலைவர் எஸ்.பிரதீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஓ-14)

## கொளுத்தும் வெய்யிலில் வெறுப்புடன் காத்து நிற்கும் பார்வையாளர்கள்

### *யாழ்.வைத்தியசாலை முன்பாக நாளாந்த அவலம்*

யாழ்ப்பாணம், பெப்.26
யாழ்.போதனா வைத்திய சாலையின் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளைப் பார்வையிட வரும் உறவினர்கள் பார்வையிட அனுமதிக்கும் நேரம்வரை வீதிகளில் காத்திருந்து பல்வேறு அசௌகரியங்களையும், ஆபத்துக்களையும் எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையின் முன் பக்க வாயில் ஊடாகச் செல்லும் பார்வையாளர்கள் ஆஸ்பத்திரி வீதியில் நண்பகல் 12 மணி வரை தகிக்கும் வெய்யிலில் ஒதுங்கி நிற்க இடமின்றி வீதியை ஆக்கிரமித்து காத்திருக்க வேண்டியுள்ளது.

போக்குவரத்து மிகுந்த இந்த வீதியில் மக்கள் குழுமி நிற்பதனாலும் அவர்கள் பயணித்து வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களும் அவ்விடத்தில் நிறுத்தி வைக்கப்படுவதாலும் அந்த வீதியால் பயணிக்கும் வாகனச் சாரதிகளும் பொது மக்களும் பல அசௌகரியங்களுக்கு ஆளாக நேரிடுகிறது. அத்துடன் விபத்துக்களையும் சந்திக்க வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.



வெயிலில் காத்திருக்கும் பார்வையாளர்கள்


தற்போது வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதிக்கு கிழக்குப் புறமாகவுள்ள சிறிய வாயிலூடாகவே பார்வையாளர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். 'பாஸ்' நடைமுறை இருப்பதால் அவ் விடத்தில் வைத்து பாதுகாப்பு ஊழியர்கள் 'பாஸ்' அனுமதிச் சிட்டையை பரிசோதித்த பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான நடைமுறைகளினால் நீண்ட நேரம் காலை, மதியம்,மாலை என வெய் யிலையும் வாகனங்களால் ஏற் படும் பாதிப்புகளையும்சகித்துக்கொண்டு காத்திருக்க வேண்டி யுள்ளதாக மக்கள்கவலைதெரிவிக்கின்றனர்.

இந்த அசௌகரியங்களை நீக்குவதற்கு வைத்தியசாலையின் உட்பகுதி முற்றத்தின் 'ஒரு பகுதியில் தடுப்பு வேலி ஏற்படுத்தி அதற்கு முன்பாக பார்வையாளர்கள் கூடி நிற்க அனுமதிக்கலாம். அனுமதிக் கப்படும் உரிய நேரம் வந்ததும் உட் செல்லும் நடை முறையைப் பின்பற்றுவது சுலபமாக இருக்கும் எனப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். இதே குறைபாடுகள் வைத்திய சாலையின் பின் பகுதி நுழைவாயிலான விக்ரோறியா வீதிப் பகுதியிலும் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. (ஓ-135)

# ஏழு பேரை விடுவிப்பது இறையாண்மைக்கு எதிரானது

*சுதர்சன நாச்சியப்பன் கூறுகிறார்*


*சுதர்சன நாச்சியப்பன்*

சென்னை, பெப்.26
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வருகின்ற ஏழு பேரையும் விடுதலை செய்வதற்கு தமிழக அரசு எடுத்திருக்கும் முடிவானது இறையாண்மைக்கு எதிரானது என்று மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் வைத்து அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:-

"காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தி பிரதமர்களாக இருந்த போது மட்டுமல்ல, தற்போது காங்கிரஸ் தலைவராக உள்ள சோனியா காந்தியும் கூட தமிழர் களுக்கும் தமிழகத்துக்கும் எண்ணற்ற உதவிகளை செய்து வருகிறார்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் அங்கு தமிழை ஆட்சி மொழியாக்கியவர் ராஜீவ் காந்தி என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழருக்காக உணர்வு பூர்வமாக குரல் கொடுப்பது காங்கிரஸ் மட்டுமே. ஏனைய தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் குரல் கொடுப்பதோடு சரி, வேறு எதுவும் செய்ததில்லை. ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவம் தமிழகத்தில் நடந்தமை தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழிவு. இச்சம்பவத்தில் வெளிநாட்டினர் செய்த சதிச் செயலுக்குத் துணையாகச் செயல்பட்டவர்களுக்குத் தான் நீதி மன்றம் தண்டனை வழங்கியது.

இது இந்திய இறையாண்மையைக் காப்பதாகும். அதே நேரம் அவர்களை விடுதலை செய்யக் கோருவது இந்திய இறையாண்மைக்கு எதிரானதாகும். 7 பேரையும் விடுவிக்க தமிழக அரசு முடிவெடுத்திருப்பது சரியல்ல"- என்றார். (வ)

# கொலைக் குற்றச்சாட்டுகளில் கைதான மூவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், பெப் 26
வட்டக்கச்சியில் அடுத்தடுத்து இரண்டு நாள்கள் இடம்பெற்ற இரண்டு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒரு வருடத்துக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 3 பேர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த இரண்டு வழக்குகளும் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டன.

கிளிநொச்சி வட்டக்கச்சியில் ஹட்சன் வீதியில் 2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8 ஆம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த யஹலின்மேரி திரேசா (வயது-60) என்பவர் அவரது வீட்டில் வைத்து அவரது கழுத்தில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களில் ஒரு வருடத்துக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முதலாவது சந்தேகநபர் சார்பாகச் சட்டத்தரணி ரி.அர்ஜுனா யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார். அதனைப் பரிசீலித்த நீதிபதி பிணை அனுமதி வழங்கினார்.

அதன்படி 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டதோடு மாதாந்தம் இறுதிச் சனிக்கிழமைகளில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது நீதிமன்றம்.

இது தவிர அதே இடத்தில் 2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி தம்பிராசா சௌந்தரராசா (வயது-51) என்பவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். அவரது கொலைக் குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் ஒரு வருடத்துக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் இரண்டு பேர் சார்பிலும் சட்டத்தரணி ரி.அர்ஜுனா யாழ். மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தார். அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்று பிணை அனுமதி வழங்கியது. அதன்படி இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ்விரண்டு ஆள்பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். (த-4)


நாராயணசாமி

## ஈழத்தமிழர் பிரச்சினையில் அரசியல் நடத்தும் கட்சிகள்

*சாடுகிறார் நாராயணசாமி*

சென்னை, பெப்.26
இலங்கைத் தமிழர் பிரச்சினையை வைத்து தமிழக கட்சிகள் அரசியல் நடத்துகின்றன என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி சாடியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அவர் பேட்டி அளித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

"ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வருகிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழக கட்சிகள் அரசியல் நடத்துகின்றன.

தமிழகம், புதுவையில் வேட்பாளர்கள் பெயரை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அறிவிப்பார். தனித் தெலுங்கானா மாநிலம் அமைப்பதில் காங்கிரஸ் கட்சி உறுதியாக உள்ளது"- என்றார். (வ)

# 7 தமிழரையும் விடுவிக்கக்கோரி மார்ச் 3 இல் வகுப்பு புறக்கணிப்பு

*கல்லூரி மாணவர் கூட்டமைப்பு அறிவிப்பு*

சென்னை, பெப்.26
ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாந்தன், முருகன் பேரறிவாளன், நளினி உள்ளிட்ட 7 பேரையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரி மார்ச் 3 ஆம் திகதி வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் நடத்தப்படும் என்று கல்லூரி மாணவர் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.


*தமிழீழ விடுதலைக்கான கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் சென்னையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேட்டியளித்தனர்.*

இது தொடர்பாக தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் கார்த்திக், பிரபாகர், ஜோ பிரிட்டோ, செம்பியன், இளையராஜா ஆகியோர் சென்னை செய்தியாளர்களைச் சந்தித்து கடந்த திங்கட்கிழமை பேட்டி அளித்தனர். அதன்போது அவர்கள் கூறியதாவது:

"மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைய கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக இந்தியா தீர்மானம் கொண்டு வர வேண்டும். இலங்கையிலும் இந்தியாவிலும் உலக நாடுகளிலும் வாழும் ஈழத் தமிழர்களிடம் தமிழீழம் குறித்துப் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன் ஆகிய 7 பேரும் 23 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து வருகிறார்கள். உச்ச நீதிமன்ற முடிவின்படி அவர்கள் 7 பேரையும் விடுவிக்க முன்வந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிப்பதுடன் உச்ச நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராகச் செயற்படுவோரை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகே அரசியல் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். அத்துடன் மார்ச் 3 ஆம் திகதி மாநிலம் தழுவிய அளவில் ஒருநாள் வகுப்பு புறக்கணிப்புப் போராட்டம் நடத்தவும் முடிவு செய்துள்ளோம். இதற்கு அனைத்துக் கல்லூரி மாணவர்களும் ஆதரவு தர வேண்டும்" இவ்வாறு அவர்கள் கூறினார்கள். (வ)

## மத்திய கிழக்கிலிருந்து 200 பணிப்பெண்கள் திருப்பி அழைப்பு

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக தொழிலுக்குச் சென்ற சுமார் 200 பெண்கள் கடந்தாண்டு நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவதற்கு பெருமளவிலான பணம் அரசால் செலவிடப்பட்டுள்ளதாக பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதி இணைப்பதிகாரியுமான மங்கள ரன்தெனிய கூறினார். கடந்தாண்டு அதிகளவானோர் இவ்வாறு நாட்டுக்கு அழைத்துவரப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (வ)

# நாடகமும் அரங்கியலும் செயலமர்வு இன்று

யாழ்ப்பாணம், பெப், 26
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டத்துக்கான செயலமர்வு இன்று நடைபெறுவுள்ளது. பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலத்தில் நடைபெறும் இந்த செயலமர்வில் சாதாரண தரத்தைச் சேர்ந்த நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு கழகத்தின் செயலாளர் எஸ்.வி.தயாநிதி கேட்டுள்ளார். (ஜ-10)

# 6 இன மிளகாய் வகைகள் யாழ் மாவட்டத்தில் செய்கை

யாழ்ப்பாணம்.பெப்.26
யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடத்தில் 6 இன மிளகாய் பயிர்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளன. இவை 386 ஹெக்ரெயரில் பயிரிடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள புள்ளி விவர தகவல்கள் தெரிவித்துள்ளன.

எம்ஜ-1எம்ஜ-2கேஎ-2செமிஉள்ர, எம்.ஐ.கிறீன் ஆகிய 6 இன மிளகாய் இனங்களே இவ்வாறு பயிரிடப்பட்டுள்ளன.

இதில் எம்.ஐ-1 இன மிளகாய் 172.5 ஹெக்ரெயரிலும், எம்.ஐ-2 இன மிளகாய் 49 ஹெக்ரெயரிலும், கே.எ-2 இன மிளகாய் 57.5 ஹெக்ரெயரிலும்,செமி இன மிளகாய் 2 ஹெக்ரெயரிலும், உள்ர இன மிளகாய் 16 ஹெக்ரெயரிலும், எம்.ஐ.கிறீன் இன மிளகாய் 89ஹெக்ரெய்ரிலும் பயிரிடப்பட்டுள்ளன. (ஜ-14)

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து பொன்னையா (கணேஸ்)



சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கு மானிப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட மாரிமுத்து பொன்னையா (கணேஸ்) (22.02.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மாரிமுத்து - லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகனும் தம்பு - தங்கம் தம்பதியரின் மருமகனும் செல்லம்மாவின் (கதிரமலை) அன்புக் கணவரும் தயேந்திரம் (இராசன் - சுவிஸ்) காலஞ்சென்ற ஜெந்தி (ராசாத்தி) மற்றும் ஜெகதீஸ்வரி (சாந்தா- சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுதுமலை தெற்கு ,
மானிப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
இராசன் (மகன்)

# சிவாலயத் தரிசனம்

யாழ்ப்பாணம், பெப்.26
அகில இலங்கை சிவாலய தரிசன சைக்கிள் யாத்திரை நாளை வியாழக்கிழமை பிற் பகல் 5 மணிக்கு சித்தன் கேணி ஸ்ரீ சிவசிதம் பரேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி நிறைவடையும்.

இதில் முன்னாள் சைக்கிளோட்ட வீரர்களான ஆர் - குணசேகர, வைத்திலிங்கம் கயிலை நாதன் ஆகியோர் பங்கு பற்றுகின்றனர்.

நாளை திருக்கேதீச்சரம் செல் லும் இந்த சைக்கிள் யாத்திரை ஒட்டுசுட்டான் தான் தோன் றீஸ்வரம் - திருகோணச் சரம், மட்டக் களப்பு, கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ் வரம், பொத்துவில் சிவன் கோவில், கதிர்காமம், காலி சிவன் கோயில், இரத்தினபுரிச் சிவன் கோயில், கொழும்பு கதிரேசன் கோயில், சிலாபம் முன்னேஸ்வரம், அனுராதபுரம் சிவன் கோயில், வவுனியா சிவன் கோயில் ஆகிய ஆலயங்களுக்குச் சென்று மீண்டும் சித்தன் கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நிறைவடையவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-400)

# தற்போது புனர்வாழ்வில் 120 போராளிகள் மட்டுமே

யாழ்ப்பாணம்,பெப்.26
இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த 12 ஆயிரம் போராளிகளில் 120 பேர் மாத்திரமே தற்போது புனர்வாழ்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் ஏனையோர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இறுதிக் கட்டப் போரின் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 12 ஆயிரம் பேர் வரை இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். சரணடைந்த முன்னாள் போராளிகளுக்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற் றும் புனர்வாழ்வு அமைச்சின் கீழ் புனர்வாழ்வு வழங்கப்பட்டது. புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகள் கட்டம் கட்டமாக சமூகத்துடன் இணைக்கப்பட்டனர். இன்னமும் 120 போராளிகள் மாத்திரம் தடுத்து வைக்கப்பட்டுப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும், அவர்களும் விரைவில் சமூகத்துடன் இணைக்கப்படுவர் என்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-5)

## 'வசந்தம்' வீசி மின்சாரம் வருமென முழு நம்பிக்கையுடன் காத்திருப்பு

### பளை, கச்சார் வெளி, செல்வபுரம் மக்கள்

பளை, பெப்.26

பளைப் பகுதியின் கச்சார் வெளி, செல்வபு ரம் கிராமங்களுக்கு 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் மின்சாரம் கிடைக்குமா என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

2012 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் விநியோக வழங்க நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் இந்தக் கிராமங்களுக்குச் செல்லும் ஏ-9 வீதியுடன் இணைந்த ஆனைவிழுந்தான் சந்தியில் முதலாவது மின்கம்பம் நடப்பட்டு அதற்கான திட்டப் பெயர்ப் பலகையும் நட்டு வைக்கப்பட்டது.

அந்தத் திட்டம் பற்றிய குறிப்பிட்ட பெயர்ப்பலகை ரயில் பாதை அமைப்போரால் பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரு கிராமங்களிலும் சுமார் 90 நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு மின்சாரம் பெறக் கூடிய நிலையில் உள்ளன.

மின்சாரம் விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இரண்டு வருடங்களாக நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஓ-9)

# பாதீனியத்தை அழித்தொழிக்க தவறினால் சட்ட நடவடிக்கை

### வடமாகாண விவசாய அமைச்சு எச்சரிக்கை அறிவிப்பு

அச்சுவேலி, பெப்.26

வடக்கு மாகாணத்தில் பாதீனியத்தை அழிக்கத் தவறும் காணி உரிமையாளர்களுக்கு சட்டப்படி தண்டனை வழங்கப்படும் என்று வடக்கு மாகாண விவசாய கமநல சேவை கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளது.

பாதீனியம் ஒழிப்பு மற்றும் அதனை ஒழிக்கத் தவறுவதால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள், அதனோடு கூடிய பக்க விளைவுகள் என்பனவற்றைச் சுட்டிக்காட்டி பாதீனியத்தை ஒழிக்கத் தவறும் மற்றும் வளர வழி ஏற்படுத்தும் காணி உரிமையாளர்களுக்கான தண்டனை விவரம் என்பனவற்றை குறிப்பிட்டு பெரிய அளவிலான (10 அடி X7 அடி) வர்ண விளம்பரப்பலகை நடப்பட்டுள்ளது.

இராசவீதி மருதனார்மடம் -கோப்பாய் வீதி நாற்சந்தியில் வீதியோரமாக நடுகை செய்யப்பட்டிருக்கும் விளம்பரப் பலகையில் "படையெடுக்கும் பாதீனியத்துக்கு விடை கொடுப்போம் வாரீர்" என்ற தலைப்பில் பாதீனியத்தின் பூர்வீகம் அதன் இயல்பு, அதன் பரம்பல், பெருக்கத்தால் சமூகத்துக்கும், சூழலுக்கும் ஏற்படக் கூடிய தீமை, அதனை ஒழிக்க வேண்டிய தன் அவசியம், பாதீனியத்தை அழிக்கத் தவறும் காணி உரிமையாளர்களுக்கு "ஒரு லட்சம் ரூபா வரை தண்டம் 6 மாத சிறை வாசம்" சட்டப்படி தண் டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பன போன்ற விவரங்கள் உள்ளடக்கப்பட் டுள்ளன.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் பாதீனிய ஒழிப்பு மாதமாக பிரகடனம் செய்யப்பட்டு பாதீனிய ஒழிப்பு வேலைத் திட்டம் வடக்கு மாகாண முதலமைச்சரால் புத்தூர் நிலாவரையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி யாழ். மாவட்டத்தில் 750 ஏக்கர் நிலப் பரப்பை பாதீனியம் ஆக்கிரமித்து இருப்பதாகவும் அதில் 10 வீதம் மட்டும் டிசெம்பர் மாதத்தில் பிடுங்கப்பட்டி ருக்க லாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் பாதீனியம் ஒழிக்கப்படாமைக்கு தண்டனை வழங்கினால் 75 வீதமான காணி உரிமையாளர்கள் தண்டனைக்கு உள்ளாகலாம் - எனக் கூறப்படுகின்றது. (வ-11)

## முகமாலை, இத்தாவில், கிளாலியில் மீளக்குடியமர பதிவு செய்யுங்கள்

### கண்ணிகள் அகற்றப்பட்ட பின்னர் அங்கு செல்லலாம் என்கிறார் பிரதேச செயலர்

பளை, பெப் .26

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி, கிளாலி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏற்கெனவே மீள்குடியமர்வு செய்யப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களைச் சேர்ந்த மீளக்குடியமர விரும்பும் மக்களின் விவரங்கள் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் பதிவு செய்யப்பட்டு வருவதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இதுவரை மக்கள் மீள்குடியமராத பகுதிகளில் கண்ணிகள் மற்றும் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. அந்தப் பகுதிகள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படும் பொழுது குடியமர விரும்பும் குடும்பங்கள் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ள வேண் டும்.

" - "

**இதுவரை மக்கள் மீள்குடியமராத பகுதிகளில் கண்ணிகள் மற்றும் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.**

தற்போது வசிக்கும் பிரதேசத்திலிருந்து எந்தவிதமான பதிவுகளையும் நீக்கி வர வேண்டிய அவசியமில்லை என்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ப.ஜெயராணி அறிவித்துள்ளார். (ஓ-9)

## சைவர்களின் நந்திக் கொடியேற்றி சிவராத்திரியன்று வழிபடுவோம்

### சைவப் புலவர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.26

சிவராத்திரி விரத நன்நாளில் ஆலயங்கள், அற நெறிப் பாடசாலைகள், வீடுகள் தோறும் சிவனது வாகனமான நந்தி பொறித்த சைவர்களின் நந்திக் கொடியை ஏற்றி வழிபாடு செய்யுங்கள். இவ்வாறு அகில இலங்கை சைவப் புலர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக சைவப் புலவர் சங்கச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை சிவபூமியாகும். இதற்கு ஆதாரமாக இன்றும் பல பழைமை வாய்ந்த சிவாலயங்களைக் காண்கின்றோம். சிவ வழிபாட்டில் விரதங்கள் இன்றியமையாதவை. சைவசமயத்தவரின் வாழ்வில் முக்கியமான விரதங்களில் ஒன்று சிவராத்திரியாகும். ஒரு நாள் முழுவதையும் இரவு பகலாக சிவவழிபாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் நாம் வேண்டிய பல பலன்களைப் பெற்றுக் கொள்ளலாம். சிவனைக் குறிக்கும் அடையாளங்கள் நமக்கு சிவசிந்தனையை ஏற்படுத்தும். மாலற நேயம் மலிந்தவர் வேடம் ஆலயம் தானும் அரன் எனத் தொழுங்கள் என மெய்கண்ட தேவர் எம்மை வழிப்படுத்துகின்றார். எனவே சிவராத்திரி விரத நன்நாளில் ஆலயங்கள், அற நெறிப்பாடசாலைகள், வீடுகள் தோறும் சிவனது வாகனமான நந்தி பொறித்த் சைவர்களின் நந்திக் கொடியை ஏற்றி வழிபாடு செய்யுமாறு வேண்டுகின்றோம். இடபங்கள், பசுக்கள் தரும தேவதையின் வடிவமாகும். இந்த நாட்டில் தருமம் நிலைக்க, நாம் ஒற்றுமையாக, சந்தோஷமாக வாழ இந்தச் சிவராத்திரி தினத்தை நந்திக் கொடி ஏற்றியும் பிரார்த்திக்குமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினர் எல்லோரையும் வேண்டுகின்றார்கள் - என்றுள்ளது. (ஓ)

## சுகாதாரமும் போஷாக்கும் பயிற்சிநெறி ஆரம்பம்

தென்மராட்சி, பெப்.26

'வேள்ட் விஷன்' நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொண்டு வரும் செயற்றிட்டங்களின் அங்கமான நான்கு நாள்கள் சுகாதாரமும் போஷாக்கும் என்னும் பயிற்சி நெறியை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பயிற்சி நெறியில் பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த அன்னையர் கழகப் பிரதிநிதிகளும், சுகாதாரத் தொண்டர்களுமாக 50 பேர் பங்குபற்றுகின்றனர்.

நிறுவனத்தால் தென்மராட்சி பிரதேசத்தில் சுகாதாரம், கல்வி, சமூக மேம்பாடு ஆகிய செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வேள்ட் விஷன் நிறுவனமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்தும் பயிற்சி நெறியில் நிறுவனப் பிரதிநிதிகளும் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களும் வளவாளராகக் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். (வ-9)



நாவாந்துறைக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையில் கடலில் அமைந்துள்ள குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயம் கடந்த முப்பது வருடங்களின் பின்னர் கடந்த சனிக்கிழமை யாழ். ஆயர் தோமஸ் சசவுந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயம் கடலின் மத்தியில் உள்ளதால் படகுச் சேவைகளை நாவாந்துறை பங்குத்தந்தை வண. பிதா இராஜசிங்கம் ஒழுங்கு செய்திருந்தார். நூற்றுக் கணக்கான மக்கள் ஆலயத் திறப்பு விழாவில் கலந்துகொண்டனர். அன்றைய தினம் விசேட திருப்பலி பூஜைகள் இடம்பெற்றன. (ஓ-20)

# கொள்வனவை நிறுத்தியது சதொச; உ.கிழங்கு செய்கையாளர் பாதிப்பு

### குறைந்த விலையில் தனியாருக்கு விற்பனை

அச்சுவேலி, பெப் .26

சதொச நிறுவனம் வாக்குறுதி அளித்தபடி உருளைக்கிழங்கை கொள்வனவு செய்ய முன்வரவில்லை. கடந்த சனிக்கிழமை உருளைக்கிழங்கை அறுவடை செய்து ஏற்றுவதற்கு யாழ். விவசாயிகள் தயாராக இருந்த போதிலும் கொள் வனவு செய்யப்படாமையால் ஏமாற்றமடைந்த நிலையில் தனியாருக்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்தனர்.

சதொச நிறுவனம் உருளைக் கிழங்கு கொள்வனவில் மீண்டும் தாமதம் செய்தமையினால் அமைச்சர்கள் அரசியல் பிரமுகர்கள், உயர் அதிகாரிகள் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்து களநிலைமையை நேரில் பார்வையிட்டு கடந்த சனிக்கிழமை மீண்டும் கொள்வனவு செய்வதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் வாக்குறுதியின்படி கொள்வனவு ஆரம்பமாகவில்லை.

சதொச நிறுவனம் கிலோ 70 ரூபா விலையில் ஏழு லொறி கிழங்கை கொள்வனவு செய்திருந்தது. ஒரு லொறியில் 12500-13000 கிலோ வரையில் ஏற்றிச் செல்லப்பட்டது. ஆனால் கடந்த 10 தினங்களுக்கு மேலாக கிழங்கு கொள்வனவு நடைபெறவில்லை.

யாழ். மாவட்டத்தில் நடுகை செய்யப்பட்ட உருளைக் கிழங்கில் பெரும்பகுதி அறுவடை செய்யப்பட்ட போதிலும், 35 வீதத்துக்கு குறையாத அளவு அறுவடை செய்யப்படாமல் உள்ளது. தற்பொழுது யாழ்ப்பாணத்தில் வெப்பநிலை வீச்சு அதிகரிப்பும் வறண்ட கால நிலையும் காணப்படுவதால் அறுவடைக்குத் தயாராக இருக்கும் உருளைக்கிழங்கு பழுதடையக்கூடிய ஏதுநிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ். மாவட்ட உருளைக் கிழங்கு கொள்வனவு தொடர்பாக பொருத்தமான பதிலைக் கூட உரிய நேரத்துக்கு தெரிவிக்காமல் சதொச நிறுவனம் உருளைக்கிழங்கு விடயத்தில் இழுத்தடித்து வருவதாகவும், கடந்த பத்து தினங்களுக்கு மேலாக உருளைக் கிழங்கு கொள்வனவில் சதொச நிறுவனம் ஈடுபடவில்லை எனவும் யாழ். மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட உருளைக் கிழங்கு கொள்வனவு தொடர்பாக சதொச நிறுவன அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில்;

கொழும்பு மற்றும் தம்புள்ளை மத்திய சந்தையில் உருளைக் கிழங்கின் சில்லறை விலை கிலோ 70 ரூபாவுக்கு குறைவாக உள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் 70 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. அத்துடன் விவசாயிகள் இயல்பு நிலையில் விற் பனை செய்ய முடியாத சிறிய அளவு கிழங்குகளையும் வெட்டுப்பட்ட கிழங்குகளையும் மூடையில் போட்டதோடு சில சந்தர்ப்பங்களில் ஈரமண்ணோடு கூடிய நிலையிலும் கிழங்கை மூடைகளில் நிரப்பியுள்ளனர்.

கொள்வனவு செய்யப்பட்ட ஏழு லொறி கிழங்கி னாலும் ஐந்து லட்சம் ரூபா வுக்கு மேற்பட்ட நட்டம் ஏற்பட்டுள்ளது. மேலிடத்து அனுமதி கிடைக்கப்பெற்றால் தான் கொள்வனவு மீண்டும் ஆரம்பிக்கப் படும் எனத் தெரிவித்தார். (ஓ-11)

# குஜராத் வன்முறைக்காக மன்னிப்புக் கோருவோம்

## பா.ஜ.க. திடீர் அறிவிப்பு

புதுடில்லி, பெப்.26
குஜராத்தில் 2002ஆம் ஆண்டு கலவரத்தின்போது நாம் ஏதாவது தவறிழைத்திருந்தால் தலைகுனிந்து மன்னிப்புக் கோருவோம் என்று தெரிவித்துள்ளார் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங்.
பாரதிய ஜனதா பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நரேந்திர மோடிக்கு தொடர்ந்து பின்னடைவாக இருப்பது குஜராத் கலவரம் ஒன்றுதான். கலவரத்தின்போது அதனைக் கட்டுப்படுத்த தவறிவிட்டார் என்பது தான் அவர் மீதான குற்றச்சாட்டு. அதன் காரணமாக இஸ்லாமிய சமூகத்தினர் அவரை அச்ச உணர்வுடன் பார்ப்பதாக


நரேந்திர மோடி மற்றும் ராஜ்நாத் சிங்

கூறப்படும் நிலையில், காங்கிரஸ் உள்ளிட்ட பிற கட்சிகளும் மோடியை மதவாதி என்று குற்றஞ்சாட்டி வருகின்றன.
இந்த நிலையில் இஸ்லாமியர்களிடத்தில் பா.ஜனதா குறித்து ஏற்பட்டுள்ளஅபிப்பிராயத்தை மாற்றும் நோக்குடன் குஜராத் கலவரத்திற்கு மன்னிப்பு கோரப்படும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங்.
இதுகுறித்து அவர் கூறுகையில், "நாங்கள் எப்பொழுதாவது ஏதாவது தவறு செய்திருந்தால், அதற்காக நிச்சயம் நாங்கள் தலைகுனிந்து மன்னிப்புக் கேட்போம். இந்த நாடு பிளவுபடுவதை ஏற்றுக்கொள்பவர்கள்தான் உண்மையான மதவாதிகளே தவிர நாங்கள் அல்ல. ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக நாங்கள் அரசியல் செய்யவில்லை. இந்தத் தேசத்தைக் கட்டமைக்கவே நாங்கள் அரசியல் செய்கிறோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)


மும்பையில் நாகர் ரயில் நிலையம் அருகே உள்ள 'ரயர்' தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. தீயணைப்பு வீரர்கள் விரைவாகச் செயற்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோதும் தொழிற் சாலையின் பெரும்பாலான பகுதிகள் தீயினால் நாசமா கியுள்ளன. இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். எனினும் விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (ற)

# ஜெயலலிதா பிரதமராவதற்கு ஆதரவு வழங்குவோம்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு

விழுப்புரம், பெப்.26
எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் ஜெயலலிதாவை பிரதமராக தேர்ந்து எடுக்க ஆதரவு கொடுப்போம் என்று தெரிவித்துள்ளார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக் கண்ணு.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"மத்தியில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்து வரும் காங்கிரஸ், புதிய பொருளாதார கொள்கை என்ற அடிப்படையில் அன்னிய மூலதனத்தை அனுமதித்துள்ளது. சிறு தொழில்களிலும், இராணுவ தளபாடங்களிலும் அன்னிய மூலதனத்திற்கு அனுமதித்துள்ளனர். இது இந்திய இறையாண்மைக்கு ஆபத்தை விளைவிக்கும். எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் ஆட்சியை அகற்றுவதற்கு இடதுசாரிக் கட்சிகளும் ஏனைய மாநிலக் கட்சிகளும் சேர்ந்து மாற்று அணியை அமைத்து வருகிறோம்.
இந்தியா மிகப்பெரிய ஜனநாயக நாடு. மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு அதிக எண்ணிக்கையில் உள்ள கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்று கூடி தங்கள் தலைவராக யாரைத் தேர்ந்து எடுக்கிறார்களோ அவர் தான் பிரதமராக முடியும். ஆனால், பா.ஜ.க. நரேந்திர மோடியையும், காங்கிரஸ் ராகுல் காந்தியையும் அடுத்த பிரதமர் என்று கூறிப் பிரசாரம் செய்து வருவது ஜனநாயக விரோத செயலாகும்.
காங்கிரஸ், பா.ஜ.கவுக்கு எதிராக இடதுசாரிக் கட்சிகள், 11 மாநில கட்சிகளுடன் இணைந்து மாற்று அணியை உருவாக்கி வருகிறோம். இந்த அணி வலுப் பெற்று வருகிறது. மத்தியில் காங்கிரஸ், பா.ஜ.க. அல்லாத ஆட்சிஅமைய வேண்டும். இந்த 2 கட்சிகளும் இல்லாத மாற்று அணி வெற்றி பெற்றால் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை பிரதமராகத் தேர்ந் தெடுக்க நாங்கள் ஆதரவு கொடுப்போம். தேர்தல் முடிந்த பிறகு அதற்குவாய்ப்புவரும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மின்னணு ஊடகங்களைநான் மிரட்டவே இல்லை

## சுஷில்குமார் ஷிண்டே விளக்கம்

மின்னணு ஊடகங்களுக்கு எதிராகத் தாம் கருத்து தெரிவிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே.
மகாராஷ்டிர மாநிலம் ஷோலாப்பூரில் இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"மின்னணு ஊடகம் என்று நான் குறிப்பிட்டது சமூக வலைதளங்களைத் தானே தவிர, தொலைக்காட்சி அல்லது பத்திரிகை ஊடகத்தை அல்ல. சுற்றாடாவிலும், ஹைதராபாத்திலும் வடகிழக்கு மாநில மாணவர்கள் மீது வெறுப் புணர்வைத்தூண்டும் வகையில் செய்திகள் பரப்பப்படுவதைக் குறிப்பிட்டே நான் இவ்வாறு தெரிவித்தேன். பத்திரிகையாளர்களுக்கு எதிராக எதுவும் பேசவில்லை. எனது உரையின் காணொலி ஆதா ரம் உள்ளது" என்று தெரி வித்துள்ளார் சுஷில் குமார் ஷிண்டே. (ற)

**கடை வாடகைக்கு**
இல.134, ஸ்ரான்லி வீதி மத்தியில் 12 அடி அகலமும், 50 அடி நீளமும் கொண்ட கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:- 077 9239245

'சுடர்ஒளி' இந்த வார இதழில்...



சீரடி சாயி பாபாவின்
அற்புதங்கள்
நிறைந்த
பரவசமூட்டும்
புதிய
ஆன்மீகத் தொடர்
'சாயியே சரணம்'
- வீழ்ந்ததால் எழுந்தவர்கள்
- ஆண்களை அலைய வைத்தல்
- இருளின் கதவைத் திறந்தவன் (தொடர்)



17 வயதுத் தாத்தா
இயற்கையின் வஞ்சிப்பு



கருவை விற்கும் பெண்கள்
திடுக்கிட வைக்கும் உண்மைகள் (C/12304)

# இராணுவத்தின் தாக்குதலில் தீவிரவாதிகள் சாவு

ஸ்ரீநகர், பெப்.26
ஜம்மூகாஷ்மீர் மாநிலம் குப் வாரா மாவட்டத்தில் இராணுவத்தினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 7 தீவிர வாதிகள் உயிரிழந்துள்ளனர்.
தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலைஅடுத்தே இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். (ற)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




யா/ சாவகச்சேரி,
இந்துக்கல்லூரியின் ஆசிரியர்
செல்வராஜா
தினேஸ்குமார்
கடந்த (17.02.2014) அன்று
பருத்தித்துறை நீதிவான்
கெ.கஜநிதிபாலன் முன்னிலையில்
யாழ். மாவட்டத்திற்கான சமாதான
நீதிவானாகச் சத்தியப்பிரமாணம்
மேற்கொண்டதையிட்டு மனதாரப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஆசிரிய சகோதரத்துவம்,
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
(29773)(2.6)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
26.05.1948
மறைவு
26.02.2013
ஆண்டொன்று ஆனதையா
ஆறவில்லை உம் நினைவு
நீ இல்லா எம் வாழ்வு
நீர்க்குமிழி ஆனதையா
வாடுகின்றோம்
உமை நினைத்து
வாராயோ எமை எண்ணி
அமரர்
ஐயம்பிள்ளை
தங்கராசா
1ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா
(45108)(5.6)
குடும்பத்தினர்.



கீவ் நகரில் இடம்பெற்ற போராட்டங்களின் போது உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மக்கள்

உக்ரைன் தலைநகர் கீவில் இருந்து அந்நாட்டு ஜனாதிபதி விக்டர் யானுகோவிச் வெளியேறியதையடுத்து அங்கு இடைக்கால அரசு பதவியேற்றுக் கொண்டுள்ளது. தற்போது யானுகோவிச் எங்குள்ளார் என்று தெரியாத நிலையில், கீவ் நகரில் 82 போராட்டக்காரர்கள் உயிரிழந்தமை தொடர்பாக ஜனாதிபதி யானுகோவிச் மற்றும் பல அதிகாரிகளை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பித்துள்ளது இடைக்கால அரசு. இடைக்கால அரசில் உள்துறை பொறுப்பு வகிக்கும் அர்சென் அவகோவ் இதுகுறித்துக் கூறும்போது, "யானுகோவிச் மற்றும் பல அதிகாரிகளுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள்" என்று தெரி வித்துள்ளார்.(ற)

## ஓரினச் சேர்க்கைக்கு உகண்டாவில் ஆயுள் சிறை

கம்பாலா, பெப்.26

ஓரினச் சேர்க்கை கடும் குற்றமாகக் கருதப்படும் உகண்டாவில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்குஆயுள்தண்டனைவழங்க வகை செய்யும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முதல் முறையாகக் கைது செய்யப்படும் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு 14 ஆண்டுகால சிறைத் தண்டனையும், இரண்டாவது முறையாகக் கைது செய்யப்படும் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு ஆயுள் தண்டனையும் வழங்க வகை செய்யும் சட்டத்திருத்தத்துக்கு உகண்டா ஜனாதிபதி யோவேரி முசெவேனி ஒப்புதல் அளித்து கையொப்பமிட்டார். அதையடுத்து தற்போது அந்தச் சட் டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதேவேளை, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் உகண்டா மீது பொருளாதார தடை விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. (ற)

# சீன விவகாரத்தில் தலையிட முடியாது


### அமெரிக்காவுக்கு சீனா பதிலடி

பீஜிங், பெப்.26

திபெத் பிரச்சினை சீனாவின் உள்நாட்டு விவகாரம். அதில் பிறநாடுகள் தலையிடுவதற்கு உரிமையில்லை என்று தெரிவித்துள்ளது சீன வெளியுறவுத் துறை அமைச்சு.

பீஜிங்கில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார் சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர். அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

"திபெத் விவகாரத்தைப் பேசித் தீர்ப்பதற்காக அமெரிக்கா சிறப்பு ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிப்பதாக அறிவித்திருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. இது சீனாவின் உள்நாட்டு விவகாரம். அதில் பிறநாடுகள் தலையிடுவதற்கு எந்த வித உரிமையும் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.



கடந்த வெள்ளிக்கிழமை தலாய் லாமா - ஒபாமாவுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றது. சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி இந்தச் சந்திப்பு வெள்ளை மாளிகையில் இடம்பெற்றது.

திபெத் ஆன்மிகத் தலைவர் தலாய் லாமாவைச் சந்தித்துப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா," சீனா- திபெத் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காணவேண்டும்" என்று தெரிவித்திருந்தார். அதனை அடுத்து அமெரிக்க வெளியுறவுத்துறை, அமைச்சர் ஜோன் கெரி, திபெத்திய விவகாரங்களுக்கான சிறப்பு ஒருங்கிணைப்பாளராக சாரா சீவால் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறிவித்திருந்தார். (ற)

## பிரதமர் பேசுவது போன்ற ஒலிப்பதிவு பொய்யானது

### துருக்கி அரசு கூறுகின்றது

லண்டன், பெப்.26

துருக்கிப் பிரதமர் தயிப் எர்டோகன் தனது மகனுடன் பேசுவது போன்று வெளியாகியுள்ள ஒலிப்பதிவுகள் பொய்யானவை என்று தெரிவித்துள்ளது அந்நாட்டு அரசு.

பிரதமர் தயிப் எர்டோகன் வீட்டில் உள்ள பணத்தை வேறு இடத்திற்கு மாற்றும்படி அவரது மகனிடம் கூறுவது போன்ற ஒலிப் பதிவுகள் 'யூ டியூப்' இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. அந்த ஒலிப் பதிவுகள் குறித்தே அந்நாட்டு அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது. குறித்த பதிவுகளைத் தரவேற்றம் செய்தவர்கள் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அரச தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


விரைவில் உள்ளாட்சித் தேர்தலுக்கான பரப்புரைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இந்த ஒலிப்பதிவுகள் வெளியாகியுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை, கடந்த டிசெம்பர் மாதம் பிரதமர் எர்டோகனுக்கு நெருக்கமான சில தொழிலதிபர்கள் ஊழல் முறைகேடுகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்தனர். (ற)

## ஆக்கிரமிக்கும் எண்ணம் ஒருபோதும் எமக்கில்லை

### மோடிக்கு சீனா விளக்கம்

பீஜிங், பெப்.26



அயல் நாடுகளின் ஓர் அங்குல நிலத்தைக் கூட நாம் அபகரிக்க நினைக்கவில்லை என்று விளக்கமளித்துள்ளது சீன அரசு.

இந்தியாவின் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் தெரிவித்திருந்த கருத்துக்கே இவ்வாறு விளக்கமளித்துள்ளது சீனா.

"நாட்டின் எல்லையை விஸ்தரிக்கும் எண்ணத்தை, சீனா கைவிட வேண்டும். இந்தியாவுக்கு சொந்தமான அருணாசல பிரதேசத்தை எந்த சக்தியாலும் பறிக்க முடியாது" என்று மோடி தெரிவித்திருந்தார்.

மோடியின் இந்த குற்றச்சாட்டை சீனா முற்றாக மறுத்துள்ளது. இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சக அதிகாரி ஹூவா சுன்யிங் கருத்துத் தெரிவிக்கையில்,

"சீனா - இந்தியா எல்லையில் அண்மைக் காலத்தில் எந்த வித ஆயுதத் தாக்குதல்களும் நடக்கவில்லை. அதன் மூலம் சீனா அயல் நாட்டுடன் அமைதியை விரும்புகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். நாங்கள் அயல் நாடுகளின் ஓர் அங்குல நிலத்தைக் கூட ஆக்கிரமிப்புச் செய்யவில்லை. இரு நாட்டுக்கிடையே ஏற்படும் மோதல், ஆசியப் பகுதி முழுமைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, கடைசி வரை அமைதிப் போக்கைப் பின்பற்றவே சீனா விரும்புகிறது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## அமெ. இராணுவத்தின் எண்ணிக்கை குறைப்பு

வொஷிங்டன், பெப்.26

அமெரிக்க இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைப்பதற்கான திட்டங்களை பாதுகாப்புச் செயலாளர் சக் ஹேகெல் வெளியிட்டுள்ளார்.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் காணப்பட்ட மிகவும் குறைந்தளவிலான எண்ணிக்கைக்கு தற்போதைய இராணுவத்தினர் குறைக்கப்படவுள்ளனர் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய வரவு செலவுத் திட்டத்திற்கு அமைய, தற்போது காணப்படும் இராணுவத்தினரின் அளவை 5,20,000 இல் இருந்து 4,50,000 ஆக குறைக்கவுள்ளதாக பெண்டகன் தெரிவிக்கின்றது. எவ்வாறாயினும் இந்தத் திட்டத்திற்கு காங்கிரஸ் அரசின் அங்கீகாரம் பெறப்படவேண்டியுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஹேகெல்,

"இராணுவத்தினர் குறைக்கப்பட்டாலும், அமெரிக்கா எந்தவொரு எதிரியையும் சமாளிக்கும் வல்லமை கொண்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.(ற)

## பதவியிலிருந்து விலகியது எகிப்தின் இடைக்கால அரசு

கெய்ரோ, பெப்.26

எகிப்தில் இன்னமும் சில மாதங்களில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில் கொண்டு அந்நாட்டு இராணுவத்தின் தலைமையில் பொறுப்பேற்ற இடைக்கால அரசு பதவியிலிருந்து விலகியுள்ளது.

தற்போது பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்து வரும் இராணுவத் தளபதி அப்தெல் ஃபத்தா அல் சிசி, ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தவே அரசு பதவி விலகியுள்ளது என்று கூறப்படுகிறது. எனி னும் பதவி விலகிய பிரதமர் ஹாஜெம் அல் பெப்லவி அதற்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை.

அதேவேளை, எகிப்தின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டே அரசு பதவி விலகுகின்றது என்று அமைச்சரவை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு முபாரக் பதவியில் இருந்து அகற்றப்பட்டபோதும் எகிப்தில் பெரியளவு மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. (ற)

# வட மாகாண சபையின் தலைமைச் செயலகத்தை மாங்குளத்தில் நிறுவுங்கள்

## ரெலோ கட்சியால் தீர்மானம் நிறைவேற்றம்

வடக்கு மாகாண சபையின் தலைமைச் செயலகத்தையும், அமைச்சுக்களையும், பேரவைச் செயலகத்தையும் மாங்குளம் பகுதியில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) நிறைவேற்றியுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்க கட்சியின் தலைமைக் குழுக் கூட்டம் கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கட்சியின் செயலர் ஹென்ரி மகேந்திரன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தின் போது தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் தலைமைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. வடக்கு மாகாண சபையின் தலைமைச் செயலகத்தையும், அமைச்சுக்களையும், பேரவைச் செயலகத்தையும், வடமாகாணத்தின் ஐந்து நிர் வாக மாவட்டங்களுக்கும் மையப் பகுதி யாகவுள்ள மாங்குளம் பகுதியில் நிறுவுவதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வட மாகாண சபை உறுப்பினர் சபையையும் தமிழீழ விடுதலை இயக்கம் இவ்வாறு கோருகின்றது எனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் மேல் மாகாண சபைத் தேர்தலில், தமிழ் பேசும் மக் களின் உரிமைகளுக்காக உறுதியுடன் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் மனோ கணேசனின் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஏனைய நான்கு கட்சிகளையும் ஆதரவுதரக் கோரும் தீர்மானமொன்றும் இந்தத் தலைமைக் குழுக் (ரெலோ வின்) கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் முடிவுகளை அறிவிக்க வேண்டுமெனவும், இதற்கு ஏதுவாக கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டக் கோரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-30)

# மனிதப் புதைகுழி விவகாரம்; சாட்சியங்கள் பதிவு ஆரம்பம்

## மாத்தளை மாவட்டச் செயலகத்தில்

கொழும்பு.பெப்.26

மாத்தளை பொது வைத்தியசாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட மனித புதைகுழி தொடர்பான விசாரணை களுக்காக, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சாட்சியங்கள் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

**மனித புதைகுழி கண்டெடுக்கப்பட்ட பகுதியில் ஆய்வுகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.**

87 பேரிடம் நேற்று செவ்வாய்க்கிழமை சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன என்று ஆணைக்குழுவின் செயலர் எம்.ஏ.சிரில் குறிப்பிட்டார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமான சாட்சிய பதிவுகள் மாலை 5 மணி வரை இடம்பெற்றன என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மனிதப் புதைகுழி காணப்பட்ட பகுதியில் ஆய்வுகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில், மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் 155 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து, மாத்தளை புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# குற்றவாளியை இனங்காண கைவிரல் அடையாளம்

கொழும்பு.பெப்.26

பொலிஸ் திணைக்களம், குற்றவாளிகளை இனங்கண்டு கொள்வதற்காக தானியங்கி கைவிரல் அடையாள முறைமையை நடைமுறைக்குக் கொண்டு வரவுள்ளது.

இதன்மூலம் மனித உரிமை கள் மீறப்படாத வகையில் சந் தேக நபர்களைக் கைது செய்து விசாரணை செய்ய முடி யும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரி வித்தார்.

சுமார் மூன்று நிமிடங்களில் இதற்கான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதனால் வெளிநாடுகளுக்குச் செல்வோர் பொலிஸ் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்காக நாள் கணக்கில் காத்தி ருக்க வேண்டிய நிலை ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

இந்த விசேட மென்பொருளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவு பொலிஸ் திணைக் களத்துக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது என்று அவர் தெரிவித்தார். (ச)

# உயிரை மாய்க்கும் சாதனமானது தகவல் தொழில்நுட்பம்

அறிவாற்றலை அபிவிருத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்ற தகவல் தொழில் நுட்பம் உயிரை மாய்க்கின்ற சாதனமாகவும், கொள்ளை, கொலைக்கான ஆயுதங்களாகவும் பயன்படுத்தப்படுவது கவலை அளிக்கின்றது என்று கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ.ஏ.கப்பார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிள்ளைகளுக்கு கையடக்கத் தொலைபேசியை பெற்றோர்களே வாங்கிக் கொடுக்கின்றனர். அதன் மூலம் பிள்ளைகள் தவறான வழியில் சென்றதன் பின்னர் கவலைபடு வதில் அர்த்த மில்லை. பிள்ளைகளைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு பெற்றோருக்கு இருந்தும் அவர்களைக் கண்டிக்காமல் இருப்பது கவலை தருகிறது-என்றார். (ச)

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட Asia Group இன் யாழ்ப்பாணக் கிளைக்கு
மீண்டும் 15 பதவி வெற்றிடங்கள்
* மேற்பார்வையாளர் * உதவி முகாமையாளர்
* முகாமையாளர்
போன்ற பதவிகளுக்கு
O/L or A/L படித்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
* தொடர்பு: 077 138 6805/077 872 9638
(45036)(45.6.3)

IMMEDIATE VACANCY
ANNAI NAAGA FOOD CITY
POST - BRANCH MANAGER
Basic requirement's
*Age Limit 25-35
*Must have excellent team building and communication skills
*Able to work long hours
*Ability to work calmly under pressure
Please mail your CV to:annainagaa@yahoo.com OR
175, KKS Road, Jaffna
on or before 3 rd of March 2014 (சி/12537)(3.6.4)

பணிப்பெண் தேவை
வீட்டைப் பராமரித்து, சமையலுக்கு உதவிசெய்வதற்கு 40-50 வயதுக்குட்பட்ட பணிப்பெண் உடன் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:077 125 1155 (சி/12546)(3.6.4)

ஆள்கள் தேவை
கொழும்பில் உள்ள எமது நிறுவனத்திற்கு Dish Antenna பிற்றிங் செய்யத் தெரிந்த அல்லது பழகி வேலை செய்யவிருப்பமுள்ளவர்கள் மற்றும் எலக்ரோனிக்ஸ் பொருள்கள் (றிசீவர்கள்) திருத்தம் செய்யத் தெரிந்த Technician ஆகியோர் உடன் தேவை.
தங்குமிடம், உணவு வசதி செய்து தரப்படும்.
திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.
* சிங்கள/ஆங்கில அறிவு
* விற்பனை அனுபவம்
* சாரதி அனுமதிப்பத்திரம் என்பன மேலதிக தகுதியாகக் கருதப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
Sats-Tech Engineer's (Pvt) Ltd
KUMAR- 077 771 0785 (45013)(3.6.4)

மலிவு விற்பனை
TVகள், குளிர்சாதனப் பெட்டிகள்
மிக மலிவு விலையில் Sony, பனசோனிக் TVகள் 21" - 14000/=, 29" - 15000/=, இரட்டைக்கதவு - குளிர்சாதனப் பெட்டிகள் - 25000/= முதல், DVD - 3250/=, அம்பிளிபயர், Box, ரேடியோ கசெற்
தொடர்பு: 021 568 9344/077 044 0570
சோனி ரேட்ற்சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.

வீடு வாடகைக்கு உண்டு



புலோலிச் சந்தி, பருத்தித்துறை வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடனடியாக வாடகைக்குக் கொடுக்கப்படும். மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.021 205 6082.
Mobile : 077 810 2573, 077 218 1342
(33382)(2.6.3)

காணி விற்பனைக்கு
ஒஸ்காலேன் உரும்பிராய் B.O.H சென்ரருக்கருகில் 7½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 134 5572 (45037)(3.6.4)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், அரியாலை கண்டி வீதியில் (புங்கன்குளம் சந்திக்கு அருகில்) ஒரு பரப்பு 14 குழி காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:021 321 1393, 077 687 3150 (45070)(3.6.4)

தேவை
முத்திரைச்சந்திப் பகுதியிலுள்ள சிறுகைத் தொழில் நிறுவனத்துக்கு வேலைக்குப் பெண்கள் தேவை.
தொடர்பு: 0778 - 120 - 190

தேவை
உங்கள் வீடுகளிலுள்ள பழைய காகிதாதிகள், பத்திரிகைகள், புத்தகங்கள், காட்போட், கொப்பிகள் முதலானவற்றைப் பணம் தந்து பெற்றுக்கொள்கின்றோம்.
தொடர்பு: 0774 - 180 - 185

Cambridge Management College
(Your path to successful future)
Graphics & multimedia solution
Now in Jaffna!!
இலவச கருத்தரங்கு
Web development & web based application.
Mobile phone repairing & mobile apps.
Computer programing & language.
Web designing
Social fun page & application
Internet & email
Mobile aps
Microsoft application automation complete
Hardware & networking
Graphics Designing
Video editing & production
Mastering internet
Basic computer training
Music compositing & edting
Advance video editing
3D modeling & animation
2D animation
Web development & web based application.
Mobile phone repairing & mobile apps.
Web designing
Internet & email
Languages
Date : 27.02.2014
Time : 09.00 – 12.00
இன்றே பதிவு செய்யுங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி...
தொடர்பு : 021 222 1818
075 975 1818
No.23, Kachcheri Nallur road, Jaffna.
(45035)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு மரமுந்திரிகைக் கன்றுகள்

## இலவசமாக வழங்கினார் 'டெல்மா' நிறுவன பொறுப்பாளர்

வலி.தென்மேற்கு. பெப். 26

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களின் பொருளாதார வளர்ச்சியை கருத்தில் கொண்டு மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்க முன்வந்துள்ள டெல்மா நிறுவனத்தின் பொறுப்பாளர், அபயக்கோன் பயனாளிகளுக்கு இலவசமாக வழங்குவதற்காக மூவாயிரம் மரமுந்திரிகைக் கன்றுகளைப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையிடம் வழங்கியுள்ளார்.

மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை மண்டபத்தில் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 153 ஆவது படையணியைச் சேர்ந்த கேணல் சுபசிங்க முதற்கட்டமாக நூறு பயனாளிகளுக்கு மரமுந்திரிகைக் கன்றுகளை வழங்கினார். இதேவேளை, மரமுந்திரிகைச் செய்கையில் ஈடுபட விரும்பும் பயனாளிகளைப் பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (வ-115-9)







## தொழிலுக்கு தம்முடன் கூட வராதவரை தாக்கியவர் உயிரை மாய்க்க முயற்சி

வலி.வடக்கு, பெப்.26

தொழிலுக்குச் செல்லும் போது தன்னுடன் சேர்ந்து வரவில்லை என்று கூறி மற்றொருவரின் வீட்டுக்குச் சென்று அவரைப் பொல்லால் தாக்கி காயப்படுத்திய நபரொருவர் விசாரணைக்காக பொலிஸார் அங்கு சென்ற வேளை ஓடி மறைந்ததுடன் நஞ்சு அருந்திய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த 22 ஆம் திகதி கந்தரோடை ஆலடியைச் சேர்ந்த இராசையா ஈஸ்வரன் (வயது -46) என்பவர் வழமையாக தொழிலுக்குச் செல்லும் ஒருவருடன் செல்லாது வேறு ஒருவருடன் தொழிலுக்குச் சென்றுள்ளார்.

இதனால் கோபம் அடைந்த தினமும் அவருடன் சேர்ந்து தொழிலுக்குச் செல்பவர் பொல்லுடன் சென்று அவரைத் தாக்கியதில் அவர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக அடித்து காயப் படுத்தியவரின் வீட்டுக்கு விசாரணைக்காக பொலிஸார் ஞாயிற்றுக் கிழமை சென்ற வேளை அவர் தலை மறைவாகியதுடன் உயிரை மாய்த்துக் கொள்ளவும் முயன்றுள்ளார். அவர் உடனடியாக தெல்லிப்பழை வைத்தியாலையில் சேர்க்கப்பட்டார். சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86-36)

## கட்டுடை சைவ வித்தியாசாலையை புனரமைக்குமாறு கோரிக்கை

### இடிந்து விழும் நிலையிலுள்ள கட்டடங்கள்

வலி.தென்மேற்கு, பெப்.26

நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாகவிருக்கும் கட்டுடை சைவ வித்தியாசாலையின் அவலநிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார், மாணவர்களின் நலன்கருதி வித்தியாசாலையை விரைவாகப் புனரமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ஒறேற்றர் சுப்பிரமணியம் போன்ற பல கல்வி மான்களை உருவாக்கிய குறித்த வித்தியாசாலை ஆரம்ப காலம்தொட்டு8ஆம்வகுப்புவரைஇயங்கிவந்தது. அங்கு 300 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வந்தனர்.

கற்பித்தலில் சிறப்பாக இயங்கி வந்த குறித்த பாடசாலை நாளடைவில் அங்கு நிலவி வந்த பலவிதமான குறைபாடுகள் காரணமாக ஐந்தாம் வகுப்புவரை குறைக்கப்பட்டதுமல்லாமல் தற்போது 50 இற்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்கின்றனர்.

இடம்பெயர்ந்த முகாம்களில் வசிக்கும் மாணவர்களும் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுமே இப் பாடசாலையை நாடி வருகின்றனர். ஆனால் வசதி படைத்த மாணவர்கள் அருகிலுள்ள வசதியான பாடசாலைகளை நாடிச் செல்கின்றனர்.

> கற்பித்தலில் சிறப்பாக இயங்கி வந்த குறித்த பாடசாலை நாளடைவில் அங்கு நிலவி வந்த பலவிதமான குறைபாடுகள் காரணமாக ஐந்தாம் வகுப்பு வரை குறைக்கப் பட்டதுமல்லாமல் தற்போது 50 இற்கும் குறை வான மாணவர்களே கல்வி கற்கின்றனர்.

விளையாட்டு மைதானம் உட்பட பல வளப்பற்றாக் குறைகளுடன் தொடர்ந்து இயங்கி வரும் இந்தப் பாடசாலைக் கட்டடம் எந்த நேரமும் இடிந்து விழலாம் என்ற நிலையிலிருப்பதால் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப பெற்றோர் அஞ்சுகின்றனர்.

எனவே குறித்த பாடசாலையைத் திருத்தியமைக்க முன் வருமாறு கல்வி அதிகாரி களைப் பதில் தவிசாளர் கோரியுள்ளார். (வ-115)

## தியாகராஜா சுவாமிகளின் ஆராதனை விழா



நாதஸ்வர, தவில் கலைஞர்களின் நாத உபாசனை

வலி.வடக்கு, பெப்.25

நல்லூர் இளம் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை விழா இளம் கலைஞர் மண்டபத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் மூத்த கலைஞர்களும் இளம் கலைஞர்க ளும் இணைந்து சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தின கீர்த்தனைகளை இசைத்து ஆராதனை நடைபெற்றது.

தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் மூத்த, இளைய நாதஸ்வர தவில் கலைஞர்கள் இணைந்து நடத்திய நாத உபாசனை நடைபெற்றது (வ-86)

## அரச இலக்கிய விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.26

இலங்கை எழுத்தாளர்களுக்கும் மற்றும் நூல் வெளியீட்டாளர்களுக்கும் அரச இலக்கிய விருது வழங்கல் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட நூல்களை மதிப்பீடு செய்யும்போது அதனை முறையாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் மேற்கொள்ளும் நோக்கில் எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் தமது நூல்களை நேரடியாக ஒப்படைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வெளியிடப்பட்ட சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் என 48 பக்கங்களுக்கு குறையாத நூல்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், அரச இலக்கியக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம் எட்டாம் மாடி செத் சிறிபால பத்திரமுல்ல' என்னும் முகவரிக்கு நூலின் மூன்று பிரதிகளை பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுயநாவல், சுய சிறுகதை, சுய கவிதைப் படைப்பு, சுய இளையோர் இலக்கியப் படைப்பு, சுய பாடலாக்கத் தொகுப்பு, சுய நாடகம், சுய அறிவியல் புனைகதை, சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு, மொழி பெயர்ப்பு நாவல், மொழி பெயர்ப்பு சிறுகதை, மொழி பெயர்ப்பு கவிதை படைப்பு, மொழி பெயர்ப்பு நாடகம், மொழி பெயர்ப்பு புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு , நானா விடய நூல்கள், 16 பக்கங்களுக்கு குறையாத சிறுவர் இலக்கியப் படைப்பு ஆகிய நூல்கள் விருதுக் காக சமர்ப்பிக்கப் படலாம். தென்மராட்சி பிரதேச எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் உரிய விண்ணப்பப் படிவத்தையும் அறிவுறுத்தல்களையும் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச இலக்கிய குழுவினர் ஆகியோர் இணைந்து விருது வழங்குவதற்கான போட்டியை நடத்தவுள்ளனர். (வ-9)

## இரணைமடு குடிதண்ணீர் திட்டம் குறித்து விளக்கக் கூட்டம்

இரணைமடு குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பான விளக்கக் கூட்டங்களை நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினர் பிரதேச செயலக ரீதியாக நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான விளக்கக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்துக்கு பிரதேசத்தில் உள்ள திணைக்களத் தலைவர்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். (ஒ-9)



## மருத்துவ முகாமில் பலர் பயன் பெற்றனர்

வவுனியா, பெப்.26

வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் அப்பிரதேச மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர். தண்டுவான் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த 23 ஆம் திகதி காலையில் இருந்து வைத்திய கலாநிதி சிவமோகனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மருத்துவமுகாமில் நெடுங்கேணி பிரதேசத்திற்குட்பட்ட கரடிப்புலவு, தண்டுவான், பழப்பாசி, இத்திமடு, தட்டையன்மலை, ஓதியமலை, நெடுங்கேணி நகரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்குட்பட்ட பிரதேசங்களில் மக்களின் தேக ஆரோக்கியம் மற்றும் சுகாதார நலன் கருதி வட மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் ஒவ்வொரு வாரமும் இலவச மருத்துவ முகாம்களை பிரதேச ரீதியாக நடத்தி வருகின்றார். அந்த வரிசையில் இது நான்காவது இலவச மருத்துவ முகாம் என்பது குறிப்பிடத்க்கது.

(ஐ-402)

## கலாசார போட்டிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,பெப்.26


மக்களிடையே கலை கலாசாரத்தை கட்டியெழுப்பும் வகையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் கலை இலக்கியப் போட்டிகளுக்கான பிரதேச மட்டப் போட்டிகளுக்கு வவுனியா வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பாலர் பிரிவு, கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, திறந்த பிரிவு என நான்கு பிரிவுகளாக போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் பாடசாலைப் போட்டிகளாக கவிதை, மற்றும் கையெழுத்துப் போட்டிகள் நடைபெறும். திறந்த போட்டி களாக பாடலாக்கம், நாட்டார் கலை கற்றல், இலக்கிய விவரணம், சிறு கதை, சிறுகதையாக்கம், சிறுவர் கதையாக் கம் ஆகிய போட்டிகள் நடை பெறவுள்ளன.

இதில் பங்குகொள்ள விரும்பும் தனிநபர்கள் சுயமாகவோ அல்லது தத்தமது பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், கலா மன்றங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப் பிக்க விரும்புவோர் மார்ச் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண் ணப்பங்களை கலாசார பகுதி, பிரதேச செயலகம், வெண் கலச்செட்டிகுளம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஐ)



மகா சிவாராத்திரியை முன்னிட்டு பக்தர்களின் நன்மை கருதி திருக்கேதீஸ்வரம் பாலாவி புனித தீர்த்தத்தை வவுனியா மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையின் நலன்புரிச் சங்கத்தினர் துப்புரவு செய்தனர்.

## காணாமற்போனோர் குறித்து இனந்தெரியாதோர் பதிவு

*முல்லைத்தீவில் மக்கள் குழப்பம்*

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பான பதிவு மேற்கொள்வதாகக் கூறி வீடுகளுக்கு சென்ற சிலர் அங்கு இருந்தவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு படிவம் ஒன்றையும் நிரப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தாம் கொழும்பிலிருந்து வரும் பொலிஸார் என தெரிவித்த குழுவினரே இவ்வாறு தம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு சென்றதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்போது உங்கள் பிரச்சினைகளை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நாம் உங்களுக்கு உதவ தயராக இருக்கின்றோம் எனவும் அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாகவும் முல்லைத்தீவு பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இவர்கள் உண்மையில் எங்கிருந்து வந்தனர்? எதற்காக வந் தனர் என்பது பற்றி தமக்குச் சந்தேகம் ஏற்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-ரி)

# வவுனியாவில் காடழிப்புகளுக்கு துணை நிற்கின்றனர் வன அதிகாரிகள்

*குற்றம்சாட்டுகிறார் சிவசக்தி ஆனந்தன்*

வவுனியா, பெப்.26

வவுனியா மாவட்டத்தில் இடம்பெறும் சட்ட விரோத காடழிப்பு நடவடிக்கைகளுக்கு வவுனியா வனஇலாகா அதிகாரிகள் துணை போவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சில மாதங்களாக ஓமந்தை அரசமுறிப்பில் தனியார் ஒருவரால் வன இலாகாவின் கட்டுப்பாட்டில் உள்ள 300 ஏக்கருக்கு மேற்பட்ட காடு அழிக்கப்பட்டு அதில், உள்ள பெறுமதி மிக்க பாலை, முதிரை மரங்கள் வியாபாரத்திற்காக வெட்டப்பட்டு வருகின்றன. தனக்குரியது என்று கூறுவதற்கு ஏதுவாக நீதிமன்றினால் ஏற்றுக்கொள்ள முடியாத, சட்ட வலுவற்றயப்பான் உறுதி எனக் கூறப்படும் ஒரு பொய் உறுதியை தயார் செய்து வைத்துக் கொண்டே குறித்த நபர் இந்தக் காடழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

சுற்றாடல் அமைச்சின் 2010 ஆம் ஆண்டு சுற்று நிருபத்தின் படி, காட்டில் உள்ள பாலை, முதிரை, கருங்காலி போன்ற பெறுமதியான மரங்கள் அழிக்கப்படுவதாக இருந்தால் நில அளவைத் திணைக்களம், வனஇலாகா, பிரதேச செயலாளர், சுற்றாடல் அமைச்சு அதிகாரிகள் ஆகிய தரப்புகளிடம் அனுமதிபெற வேண்டும். இதற்குச் சட்ட வலுவற்ற யப்பான் உறுதியைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது.

இது தொடர்பாக கடந்த 21 ஆம்திகதி, மாவட்ட வன இலாகா அலுவலகத்திடம் தான் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவரிடம் யப்பான் உறுதி இருப்பதால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித் தனர். அவர்கள் வழங்கிய தகவலின்படி இக் காடழிப்புக்கு மாவட்ட வனஇலாகா துணை போகின்றது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. குறித்த காடழிப்பைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி சுற்றாடல் அமைச்சுக்கும் தொலை நகல் மூலம் கோரிக் கை விடுத்துள்ளேன்.

இது தவிர வன இலாகாவின் உத்தரவு பெற்று நடத்தப்பட்டு வரும் மரக்காலைகளின் உரிமையாளர்களிடம் வவுனியா வன - இலாகா அதிகாரிகள் இலஞ்சம் கோருவதாகவும், பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன. சில நாள்களுக்கு முன் ஓமந்தையில் ஒருவரிடம் ஐம்பதாயிரம் ரூபாவும், வவுனியா நகரில் ஒருவரிடம் ஐம்பதாயிரம் ரூபாவும் வன இலாகா உத்தியோகத்தர்களால் இலஞ்சமாக பெறப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர் கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட வனஇலாகா உத்தியோகத்தரிடம் தொலைபேசியில் வினவியபோது அவர் எனக்கு அளித்த பதில் திருப்தியாக அமையவில்லை.

அது மட்டுமல்லாமல் வன இலாகா அதிகாரி கடித மூலம் எனக்கு பதில் அளித்துள்ளார். கடிதம் தனிச் சிங்களத்தில் வழங்கப்பட்டுள்ளது. வடமாகாண சபை நிர்வாக எல்லைக்குள் இருக்கும் ஒரு பிரதேசத்தில் உள்ள ஒரு காரியாலயம் அப்பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப் பினருடன் தனிச் சிங்களத்தில் தொடர்பு கொள்ளும்போது பொதுமக்களுடன் எவ்வாறு தொடர்புகொள்ளும் என் பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதாக அரசும், அமைச்சர்களும் கூறி வரும் நிலையில் வன இலகா அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் - என் றுள்ளது. (ஐ-402)



கால்கடுக்கக் காத்திருக்கும் மக்கள்

## பஸ் நிலையம் இன்மையால் பயணிகள் கடும் சிரமம்

கிளிநொச்சி,பெப்.26

கிளிநொச்சி நகரில் பஸ் நிலையம் இன்மையால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர். நீண்ட காலமாக இந்த நிலைமை தொடர்கிறது. எனினும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென பயணிகள் விசனம் வெளியிட்டுள்ள் னர். 1968களில் கிளிநொச்சி நக ரத்தில் இ.போ.ச பஸ் நிலையம் அமைப்பதற்கு 10 ஏக்கர் காணி ஒதுக்கப் பட்டநிலையில் தற்போது 03 ஏக்கர் காணியே மிஞ்சியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தவிர தனியார் பஸ் நிலையமும் நிரந்தர மான இடத்தில் அமைக்கப்படவில்லை.

அத்துடன் கிளிநொச்சி நகரத்தில் எந்த இடத்தில் பஸ் நிலையம் அமைப்பது என்பது தொடர் பில் இழுபறி நிலை தொடர் கிறது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி சார்ந்து நடைபெறும் கூட்டங்களின் போது இது குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டு வந்தாலும் போதும் இறுதியான முடிவு எவையும் எட்டப்படவில்லை.

இ.போ.ச பஸ் நிலையத்தை கனகபுரம் பகுதியில் அமைப்பதற்கு காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக தொவிக்கப்பட்டபோதிலும், இறுதிமுடிவுகள் எவையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அரச, தனியார் பஸ்கள் தற்காலிகமாக கிளி நொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக நிறுத்தப்பட்டு சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் தாம் நீண்ட நேரம் கால் கடுக்க காத்திருக்க வேண்டியதுடன் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது எனவும் பயணிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ-18)

## ஒற்றுமையை கட்டியெழுப்பும் முயற்சியில் சர்வமத பேரவை

*மன்னாரில் ஒன்று கூடி தீர்மானங்களும் நிறைவேற்றம்*

மன்னார், பெப்.26

சமாதானம் நல்லிணக்கத்திற்கான சர்வமத மற்றும் சமூகத் தலைவர்களின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் சர்வமத பேரவையின் இரண்டாவது அமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் சமதானத்திற்கும் மீள் இணக்கத்திற்குமான வழங்கல் நிறுவனத்தில் நடைபெற்றது.

சர்வமதப் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரான சிவஸ்ரீ தர்ம குமாரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதன் அங்கத்தவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இந்த அமர்வில் மதங்களுக்கு இடையிலான ஒற்றுமை, சமூக மேம்பாடு, நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இதன்போது பேரவையின் கட்டமைப்பு மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டன. குறிப்பாக சர்வமதப் பேரவையில் இணைபவர்கள் மக்களுக்காகச் சேவையாற்ற வேண்டும் எனவும், பேரவை மாதந் தோறும் அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை யாவது கூட வேண்டும் எனவும், மாகாண மட்டத்தில் நல்லிணக்கச் செயற்பாடுளை விரிவுபடுத்த பேரவை நடவடிக்கை எடுப்பது குறித்தும் வலியுறுத்தப் பட்டது. அத்துடன் நிர்வாகிகள் தெரிவு குறித்தும் ஆராயப் பட்டது.



சர்வமதப் பேரவை உறுப்பினர்கள்

மன்னாரில் மதுக்கடை அமைத்தல், காணி அபகரிப்பு, மதங்களைப் பிரநிதித்துவப்படுத்தும் சிலைகளை உடைத்தல் போன்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப் பட்டது.

மன்னாரில் பல வருடங்களாக இயங்காமல் இருக்கும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவை இயங்கச் செய்வது, வைத்தியசாலைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது போன்ற தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் அறநெறி வகுப்புக்களுக்கு இடையூறு விளைவிக்கும் தனியார் வகுப்புக்களை நிறுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. சர்வமதப் பேரவையின் அடுத்த ஒன்றுகூடல் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (ஐ-56)

# நிரந்தர நியமனத்தில் தமிழர் புறக்கணிப்பு

## பொன்.செல்வராசா எம்.பி.குற்றச்சாட்டு



மட்டக்களப்பில் நிரந்தர நியமனம் பெறாத நீர்ப்பாசன ஊழியர்களைச் சந்தித்து கலந்துரையாடினார் செல்வராசா எம்.பி.

மட்டக்களப்பு,பெப்.26

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நாடுமுழுவதும் கடமையாற்றும் தொழிலாளர்களை நிரந்தர மாக்கும் நடவடிக்கையில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள் ளமை அநீதியான செயற்பாடு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் தொழிலாளர்கள் தமக்கு இதுவரையில் நிரந்தர நியமனம் வழங்கப்படாமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கும் கொண்டு வந்ததையடுத்து அந்த ஊழியர் களுடன் கலந்துரையாடல் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய அரசுக்குரிய நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நாடு முழுவதும் 650 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. அவர்களில் 640 பேர் பெரும்பான்மை இனத்தைச் சோந்தவர்களாகவும். 8 பேர் முஸ்லிம் இனத்தைச் சோந்தவர்களாகவும் 02 பேர் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர்.

அவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 14 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரைத் தவிர மற்றைய 13 பேரும் மட்டக்களப்பு அல்லாத வெளி மாவட்டங்களைச் சேர்ந் தவர்கள். அதில் பெரும்பாலானோர் பெரும்பான்மை இனத்தைச் சோந்த வர்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மத்திய நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகங்களில் 67 தொழிலாளர்கள் சமயாசமய ஊழியர்களாகப் பல வருடகாலமாக நிரந்தர நியமனம் இன்றி வேலை செய்து கொண் டிருக்கின்றனர். அவர்கள்போர்இடம்பெற்ற காலத்திலும் சிரமங்களுக்கு மத்தியில்பல இடங்களுக்கும்சென்று வேலை செய்துள்ளனர்.

அவர்கள் இந்த நிரந்தர நியமனங்களில்முற்றாகப் புறக்கணிக் கப்பட்டுள்ளனர். நிரந்தர நியமனத்தின் போது இந்த ஊழியர் கள் புறக்கணிக்கப்பட்டமை மிகவும்கவலைக்குரியது -என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் நிரந்தர நியமனம் பெறாத நீர்ப்பாசன சமயாசமய ஊழியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)



உலக ஈர நில தினம் திங்கட்கிழமை பட்டிப்பளையில் இடம் பெற்றது. இந்தநிகழ்வில் பட்டிப்பளை பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம்,மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## உலக ஈர நில தினம்

வேள்ட்விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன்பட்டிப்பளைப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் உலக ஈர நில தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

ஈரநிலங்களும் விவசாயமும், வளர்ச்சிக்கான பங்காளிகள் என்னும் தொனிப்பொருளில் இந்த வருட நிகழ்வு நடைபெற் றது.


பட்டிப்பளை பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரெத் தினம் தலைமையில் இடம் பெற்ற இந்தநிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மத்திய சுற்றாடல் சபையின் நிலைய பொறுப்பாளர் கோகுலன் , பட்டிப்பளை பிராந்திய அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் ஜி.ஜே.அனுராஜ் பட் டிப்பளை பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.தயாசீலன் பட்டிப்பளை பிரதேச பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கிராம உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கொக்கட்டிச் சோலைப்பகுதியில்அமைந்துள் தாழ் நிலங்களில் கண்டல் தாவரங்கள் நடப்பட்டதோடு கண்டல் தாவரங்களைப் பாதுகாப்பது தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன. (ச-32)

## திருச்செந்தூரானுக்கு 1008 சங்காபிஷேகம்

மகாசிவராத்திரியை முன்னிட்டு ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

மகா சிவராத்திரி விரதத்தை பக்தி பூர்வமாக அனுஷ்டிப்பதற்காக கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற முருகன் தலமான மட்டக்களப்பு, ஊறணி ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7 மணிவரை விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ளன. அறநெறி மாணவர்களின் ஆன்மிக கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ச)



கல்முனை கடைகளில் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார்

## கல்முனை கடைகளில் திடீர் சோதனைகள்

கல்முனை,பெப்.26

கல்முனை பொலிஸ் எல்லைக் குட்பட்ட பிரதேசங்களில் பொருள்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களில் பொலிஸார் திடீர் சோதனைகளை மேற் கொண்டனர்.

இந்தச் சோதனையின் போது எடை குறைந்த நிறுவைக்கு பயன் படுத்தப்பட்ட படிக்கற்கள், பழுத டைந்த பழக்கள்,மீன்கள் என் பன கைப்பற்றப்பட்டன.

இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் கூறினர். (ச)

## தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் மீட்கப்பட்டன

மட்டக்களப்பு,பெப்.26

மட்டக்களப்பு ,பாலமீன்மடுவில் திங்கள் மாலை இரண்டு தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் கைப் பற்றப்பட்டன என்று மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலமீன்மடுவில், சுனாமி கடற்பேரலையால் அழிவடைந்த வீடொன்றிலிருந்து இந்தத் தற்கொலைத் தாக்கு தல் அங்கிகளை படை யினர் மீட்டு செயலிழக்கச் செய்துள்ளனர்.

பொலநறுவை, வெலிக்கந்தையிலிருந்து மட்டக்களப்புக்கு வந்த குண்டு செயலிழக்கச் செய்யும் படையினரே நேற்று முன்தினம் 5 மணிக்கு தற்கொலைத் தாக்குதல் அங்கிகளை மீட்டு அவற்றை அந்த இடத்திலேயே செயலிழக்கச் செய்தனர்.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே இந்தத் தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மோ. சைக்கிள் மீது மரம் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழப்பு

கல்முனையிலிருந்து மகியங்கனைக்குச் சென்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது நேற்று முன்தினம் மகியங்கனை சேரன்கட என்ற இடத்தில் வைத்து மரமொன்று வீழ்ந்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் நற்பிட்டிமுனையை வசிப்பிடமாகக் கொண்ட நாகராஜா சதீஸ்குமார் (வயது-35) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

கல்முனையில் இருந்து மகியங் கனை அலுவலகத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது சேரன்கட என்னும் இடத்தில் வீதியில் நின்ற மரம் சரிந்து வீழ்ந்ததில் அவர் உயிரிழந்துள்ளார். (ச)


BA, B.sc,BBA, B.com
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

* மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* A/L முழுமைச் சித்தியடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப் பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
* B.Aஇல் பொருளியல்,வரலாறு, சமூகவிஞ்ஞானம், ஆங்கிலம்,தமிழ், Journalism and Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்யமுடியும்.
* இக் கற்கை நெறிகளின் கால எல்லை 2½ வருடங்களாகும்.
* பதிவுகள் யாவும், எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

குறிப்பு: A/L இல் ஒரு பாடம் சித்தியடைந்தவர்கள் ஒரு வருடக் கற்கைநெறியாக (FOUNDATION COURSE) அடிப்படைநிலைக் கல்வியின் இரண்டாம் வருடத்தைப் பூர்த்தி செய்து பட்டப்படிப்பினை நிறைவு செய்ய முடியும்.

இக் கற்கைநெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்டவையாகும்.

* மேற்குறிப்பிட்ட கற்கைநெறிகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
* பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்குரிய 1st in Com,GAQ இற்குரிய புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

முக்கிய அறிவித்தல்: மேற்குறிப்பிட்ட விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக் கான தங்குமிட வசதி இலவசம்.

யாழ் இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம்.
தொ.பே: 2228148

(சி/12580)(5-6-3)

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.






அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி
சமேத நகுலேஸ்வர சுவாமி
திருக்கோயில்

இன்று 13 ஆம் நாள் சப்பரத்திருவிழா (26.02.2014) புதன்கிழமை

"சங்கரனே நின் தலையில் ஆறு வைத்தீர்
சண்முகனும் ஆறுதலை கொண்டார்
ஐங்கரனுக்கு மாறு தலை ஆயிற்றன்றோ
அடியார்க்கும் ஆறுதலைத் தாருமப்பா!"

அனுசரணை:
பதின்மூன்றாம் திருவிழா உபயகாரர்களும்
கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தாவும்.

(சி/12101)(2-6-3)



புளியம்பொக்கணை-(கரைச்சி)
நாகதம்பிரான் ஆலய மகா சிவராத்திரி விழா

மேற்படி ஆலய கும்பாபிஷேகம்
நிறைவுற்று, இவ்வருடம்

மகா சிவராத்திரி
நாளை (27.02.2014) வியாழக்கிழமை
4 சாமப் பூசை ஆராதனைகளுடன்
சிறப்பாக நடைபெறவுள்ளது.
சகல அடியவர்களும் மகா சிவராத்திரி
விழாவில் கலந்து பரம்பொருளின்
திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம்
வேண்டுகின்றோம்.

(சி/12571)(3.6.4)

ஆலய பரிபாலனசபையினர்.

## ஜயவர்தனபுர பல்கலையில் மாணவர்- ஊழியர் மோதல்

கொழும்பு,பெப்.26
ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மோதல் இடம்பெற்றுள்ளது.

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விடுதியில் தங்கியிருந்த மாணவர்களுக்கும், அந்த விடுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் இடையிலேயே மோதல் இடம் பெற்றுள்ளது.

மோதல் சம்பவத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்து, களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னணி என்ன என்பது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

**பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.**

## அரசுக்கு ஆதரவான கருத்தை வெளியிடும் ஊடகப் பேச்சாளர் பதவி விலக வேண்டும்

### அவரின் கருத்து பொலிஸ்துறைக்கு இழுக்கு என்கிறது ஐ.தே.க.

கொழும்பு,பெப்.26
கொள்ளை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள மேல் மாகாண சபை வேட்பாளர் ரோயிஸ்பெர்னாண்டோ தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வெளியிட்டுள்ள கருத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றம் குற்றவாளி என அறிவிக்கும் வரை கைது செய்யப்பட்டநபர் சந்தேகநபர் என்றே கருதப்பட வேண்டும் என்ற அடிப்படை சட்டம் கூடத் தெரியாமல் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, அரசுக்கு ஆதரவுதிரட்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் என்று ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரோயிஸ்பெர்னாண்டோ தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. எனினும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கருத்து வெளியிடும் முறையை நோக்கின் நியாயமான விசாரணை நடக்காது அரசியல் பழிவாங்கல் இடம்பெறும் என்று சந்தேகிக்கத் தோன்றுவதாக ஐக்கிய தேசியக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

அரசுக்கு ஆதரவாக கருத்து வெளியிடும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹனவால் முழு பொலிஸ் துறைக்கும் அரச ஊழியர்களுக்கும் இழுக்கு. அதனால் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் பதவியில் இருந்து விலக வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. (ச)

**அஜித் ரோஹன, அரசுக்கு ஆதரவு திரட்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.**

## குத்தகை பகிரங்க ஏலத்தில் விடல் - 2014

### கரைச்சிப் பிரதேச சபை - கிளிநொச்சி

**கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் காணும் அட்டவணையில் காட்டப்பட்ட இறைச்சிக் கடை நிலையங்களை 2014ஆம் ஆண்டுக்கு பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு, கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய ஏலம் கோரப்படுகின்றன.**

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்: 26.02.2014 முதல் 05.03.2014 வரை அலுவலக நாள்களில் மு.ப 8.30- பி.ப 3.00 மணி வரை
ஏலம் விடப்படும் திகதி: 06.03.2014 மு.ப 10.30 மணி
ஏலம் விடப்படும் இடம்: கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம்

| இல. | குத்தகையின் பெயர் | கேள்விப்படிவக் கட்டணம் (NBT நீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) |
|---|---|---|---|
| மாட்டிறைச்சிக் கடைப் பெயர் | | | |
| 1 | கல்லாறு | 1,000.00 | 10,000.00 |
| 2 | ஸ்கந்தபுரம் | 1,000.00 | 20,000.00 |
| 3 | ஜெயந்திநகர் | 1,000.00 | 10,000.00 |
| 4 | ஊற்றுப்புலம் | 1,000.00 | 10,000.00 |
| 5 | வன்னேரி | 1,000.00 | 10,000.00 |
| 6 | தர்மபுரம் | 1,000.00 | 10,000.00 |
| 7 | கிளிநொச்சி | 1,000.00 | 40,000.00 |
| கோழி இறைச்சிக் கடை | | | |
| 1 | உருத்திரபுரம் D/10 | 1,000.00 | 10,000.00 |
| ஆட்டிறைச்சிக் கடை | | | |
| 1 | தர்மபுரம் | 1,000.00 | 10,000.00 |

**நிபந்தனைகள்:**

1. ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணமும் அதன் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவம் வழங்கும் காலப் பகுதியில் விண்ணப்பப்படிவத்தை கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பெற்று உடனடியாக பூரணப்படுத்திஒப்படைத்தல் வேண்டும்.
3. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் ஏலத்தில் பஙகுபற்ற தகுதியற்றவர்கள்.
4. ஏலத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
5. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும் . தவறின் அவரின் பெயர் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படுவதுடன் ஏல வைப்புப்பணமும் மீளளிக்கப் படமாட்டாது.
6. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் காலம் முதல் கடையை நடத்த முடியும்.
7. மேலதிக விவரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்திலிங்கம் குகராசா**
**தவிசாளர்,**
**கரைச்சிப் பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(சி/12594)
(7.8.3)

## துப்பாக்கியைக் காட்டி வங்கியில் கொள்ளை

கொழும்பு,பெப்.26
கொஹுவல பிரதேசத்திலுள்ள தனியார் வங்கியொன்றில் ஆயுத முனையில் 15 லட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 10.20 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளொன்றில் வந்த கொள்ளையர்கள் இருவர் துப்பாக்கியைக் காட்டி வங்கி ஊழியர்களை பயமுறுத்தி அங்கிருந்த பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் இடம்பெற்ற வேளை வாடிக்கையாளர்கள் சிலர் அங்கிருந்துள்ளதோடு கொடுக்கல் வாங்கல் செய்வதற்காக வாடிக்கையாளர் ஒருவர் எடுத்து வந்த 55 ஆயிரம் ரூபா பணமும் இதன் போது கொள்ளையிடப்பட்டுள்ளது.

பணத்தைக் கொள்ளையிட்ட கொள்ளையர் குழு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொஹுவல பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)



இலங்கைச் சட்டக்கல்லூரிக்கு சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து இந்த வருடத்துக்கு 177 பேரை மட்டுமே தெரிவு செய்தமைக்கு எதிராக சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள், அளுக்கடை நீதிமன்ற வளாகத்திலுள்ள சட்டக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## விமானசேவை தொடர்பில் இருதரப்பு உடன்படிக்கை

### தென்னாபிரிக்காவில் கைச்சாத்து

கொழும்பு,பெப்.26
இலங்கையும் தென்னாபிரிக்காவும் இருதரப்பு விமான சேவைகளை ஆரம்பிக்க உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

இலங்கையின் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையிலான அமைச்சர்கள் குழு அண்மையில் தென்னாபிரிக்காவுக்கு சென்றிருந்தபோதே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ளது.

இலங்கையின் சார்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவும் தென்னாபிரிக்காவின் சார்பில் அந்த நாட்டின் போக்குவரத்து அமைச்சர் டிப்பூ பீட்டர்ஸும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

தென்னாபிரிக்காவின் பிரச்சினைக்கு காணப்பட்டுள்ள உள்நாட்டு தீர்வை அறிந்து கொள்ளும் முகமாக அமைச்சர்கள் குழு அண்மையில் தென்னாபிரிக்கா சென்று திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (ச)

**உள்நாட்டுத் தீர்வை அறிந்து கொள்ளும் முகமாக அமைச்சர்கள் குழு அண் மையில் தென்னாபிரிக்கா சென்றது.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு விடுமா என்ன....?

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான தென்னாபிரிக்காவின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம். தென்னாபிரிக்காவின் முயற்சிக்கு இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே சாதகமான நிலை உருவாக வாய்ப்பு உருவாகும். அவ்வாறு இருப்பினும் கூட, இப்போதைய நிலையில், அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு நாம் உடன்பட இயலாது.

இனப் பிரச்சினையை தீர்ப்பதில் வெற்றிகண்ட தென்னாபிரிக்காவின் வழிமுறைகளையும் அனுபவங்களையும் கண்டறியும் பொருட்டு, கடந்த வாரம், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையில் அரசாங்கத் தூதுக்குழு ஒன்று அந்நாட்டுக்கு பயணம் செய்திருந்தது. அரசாங்கத் தரப்பின் பயணத்தை அடுத்து, தென்னாபிரிக்க அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத் துள்ளது.

அது குறித்துக் கருத்து வெளியிடும் போதே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவின் சமாதான முயற்சியை நாம் தட்டிக் கழிக்கவில்லை. ஆனால் அரசாங்கம் தனது நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்படுவதனை நாம் அனுமதிக்க இயலாது; தான் எதிர்நோக்கும் நெருக்கடிகளை சமாளிக்கும் நோக்கத்துடனேயே அரசாங்கம் செயற்படுகிறது. அதற்கு நாம் உடந்தையாக இருக்க முடியாது- என்றும் சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்த ஆண்டுக்கான மாநாடு, இன்னும் சில வாரங்களில் நடைபெற உள்ள தருணத்தில்-

இலங்கை அரசுக்கு எதிராகக் காத்திரமான பிரேரணையைக் கொண்டு வருவதற்கு, அமெரிக்காவும் ஏனைய சில நாடுகளும் இணைந்து செயற்படுவதற்குத் தயாராகி வரும் தருணத்தில்-

தன்னைச் சூழ்ந்திருக்கும் பெரும் ஆபத்தை எவ்வாறேனும் தவிர்த்து தடுத்துவிட வேண்டும் என்ற பொங்கும் ஓர்மத்துடன் மஹிந்த அரசு செயற்படுகிறது. அதில் தனக்குச் சாதகமான கள நிலையை உருவாக்குவதற்கான பல வழிமுறைகளையும், உத்திகளையும் அவை சார்ந்த பிரசாரத்தையும் பெருவீச்சில் முன்னெடுத்து வருகிறது.

தான் முகம் கொடுக்க வேண்டிய உடனடி நெருக்கடியில் இருந்து, அதாவது அமெரிக்கா தலைமையிலான பிரேரணையைச் சபைக்கு வராது தடுத்து விடுவதில், தன்னால் இயன்ற அளவு மிக வேகவேகமாகச் செயற்படுகிறது அரசு. அதில் ஓர் அங்கம் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தென்னாபிரிக்க அரசு விடுத்துள்ள அழைப்பு. இது அரசின் கில்லாடித் தனம் தெரிந்த எவருக்கு வெளிச்சமாகப் புலப்படும்.

மறுபக்கத்தால் (கூர்ந்து) நோக்கின், ஜெனிவாப் பிரேரணையை தடுத்து நிறுத்துவதற்கான ஒரு வகைத் தந்திரம் நிறைந்த உத்தியே இது.

தென்னாபிரிக்காவின் அனுசரணையுடன் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை, தென்னாபிரிக்காவின் சாயலில் நியமிப்பதற்கான முயற்சிகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே முன்னெடுக்கப் பட்டிருந்தது. அரசாங்கத்தினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தூதுக் குழுக்கள் அந்நாட்டுக்குச் சென்று வந்த போதிலும், அது விடயத்தில் அரச தரப்பு அக்கறை காட்டவில்லை. அவ்வாறு தொப்பென போட்டுவிட்டு, (வேண்டுமென்றே) மறந்திருந்த அரசு, இப்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை உண்டாக்குவதற்கு ஆலாய்ப் பறக்கிறது!


தான் குற்றமற்றது என்பதனை ஏதோ ஒரு வகையில் வெளிப்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சி முழுவதும், அனைத்துலக விசாரணைக் குழுவை தவிர்க்கும் உள்நோக்கம் கொண்டதே என்பதில் ஐயமில்லை.

பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிப்பது போன்ற இந்தத் தந்திர வழி, பூலோகத்தின் கண்களை ஒருபோதும் மறைத்துவிடாதே.

கட்டுரை

# இலங்கையின் சூகி யார்?

சிங்கள மூலம்:மவ்பிம
தமிழில்:வீஎஸ்ரீ


ஆங்சாங் சூகி

இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து இலங்கை விடயத்தில் நடத்தும் நாடகம், அவ்விரு நாடுகளும் முன்னர் மியன்மார் நாட்டின் அரசியலில் முன்னெடுத்த நாடகத்தை ஒத்ததொன்றே என வெளிநாட்டு ஊடகவியலாளரொருவர் விமர்சித்துள்ளார். அதுபற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவியான ஆங்சாங் சூகி, அந்த நாட்டின் இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப் பட்டிருந்த கால கட்டத்துக்கு நாம் சென்றாக வேண்டும். மியன்மார் நாட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றிய அந்த நாட்டின் இராணுவ ஆட்சியாளர் கள் ஆங்சாங் சூகியை வீட்டுக் காவலில் தடுத்து வைத்ததுடன், நாட்டின் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் நிர்மூலமாக்கி நாட்டை எதேச்சதிகார நிர்வாகத்தின் கீழ் கொண்டு சென்றனர். அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களின் அத்தகைய போக்குக்கு எதிராகப் பல தடவைகள் எச்சரிக்கை விடுத்தும், இராணுவ ஆட்சியாளர்கள் அவை குறித்து சிறிதளவேனும் அலட்டிக் கொள்ளவில்லை. அந்த வேளையில் சீனா மியன்மார் ஆட்சியாளர்களுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்தது. இலங்கையில் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அமைத்து உதவியமைபோன்று சீனா, மியன்மாரிலும் துறைமுகமொன்றை நிர்மாணித்து உதவியது. ஏகாதிபத்திய சதியிலிருந்து மியன்மாரை விடுவித்து உதவுவதாக அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளும் ரஷ்யாவும் மியன்மாருக்கு ஆசை வார்த்தை கூறின. ஆனால் மியன்மார் ஆட்சியாளர்களோ அந்த நாடுகளின் ஆசை வார்த்தைகளை விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டே அந்த நாடுகளுக்கு எதிராக கடும் வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி வந்தனர். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும், மேலும் பொறுமை காக்க இயலாத நிலையில் அமெரிக்கா உட்பட்ட மேற்குல நாடுகள் கடைசியில் மியன்மார் நாட்டுக்கு எதிராகப் பொருளர்தாரத் தடை விதித்தன. பொருளாதாரத் தடை காரணமாக மியன்மார் நாட்டுமக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட முயன்றபோது, தருணம் பார்த்து அமெரிக்கா, இந்தியாவை சமாதானத் தூதுவராக மியன்மாருக்கு அனுப்பி வைத்தது. அவ்விதம் சமாதான அனுசரணையாளராக இந்தியா, மியன்மாருக்குச் சென்ற போது மியன்மார் ஆட்சியாளர்கள் இந்தியாவின் அத்தகைய முயற் சிக்கு ஆதரவு தெரிவித்து இந்தியாவை வரவேற்றனர்.

### பொருளாதாரத் தடையால் சிரமத்தை எதிர்கொண்ட மியன்மார் ஆட்சியாளர்கள்

சரி, நாங்கள் இந்த விடயத்தில் மத்தியஸ்தம் வகித்து உங்களை இந்த இக்கட்டிலிருந்து விடுவித்து உதவுகிறோம் என்று இந்தியா மியன்மார் ஆட்சியாளர்களுக்கு உறுதி வழங்கியது. இந்தியா தலையிட்டிருப்பதால் பிரச்சினைக்கு தீர்வு கிட்டுமென மியன்மார் ஆட்சியாளர்கள் எண்ணி னர். ஆனால் அமெரிக்காவோ மேன் மேலும் மியன்மார் ஆட்சியாளர்களின் கழுத்தை இறுக்கும் விதத்தில், அந்த நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்கும் விதத்தில் பொருளாதாரத் தடையை மேன் மேலும் இறுக்கமாக்கியது. இதனால் வேறு வழியில்லாமல் மியன்மார் ஆட்சியாளர்கள் இந்தியாவின் காலடியில் விழ வேண்டி ஏற்பட்டது. இந்தியாவோ மியன்மார் விடயமாக அமெரிக்காவுடன் தொடர்பு களை ஏற்படுத்திக் கொண்டது. மியன்மார் ஆட்சியாளர்களிடம் கையளிப்பதற்காக பல நிபந்தனைகள் அடங்கிய அறிக்கையை அமெரிக்கா இந்தியாவிடம் வழங்கியது. அமெரிக்கா அவ்விதம் மியன்மார் அரசுக்கு விதித்த நிபந்தனைகளில் முதலாவது நிபந்தனை மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆங்சாங்சூகியை வீட்டுக் காவலிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதாகும். அதேபோன்று, மியன் மாரின் இராணுவத் தலைவர், ஆட்சி அதிகாரத்திலிருந்து விலகிக் கொண்டு பொதுத் தேர்தலொன்றை நடத்தி அந்த நாட்டின் சிவில் நிர்வாகமொன்றை ஏற்படுத்த வேண்டும்என்பது அமெரிக்கா, மியன்மார் ஆட்சியாளர்களுக்கு விதித்த நிபந்தனைகளில் இரண்டாவதாகும். அதேபோன்று ஆங்சாங் சூகிக்கு அப்பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென்பது அமெரிக்காவின் மூன்றாவது நிபந்த னையாக அமைந்தது. மியன்மாரின் இராணுவ ஆட்சித் தலைவர் தான்ஸ்வே முதலில் அமெரிக்காவின் அத்தகைய நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளப் பின்னடித்தார். அந்தக் கால கட்டத்திலேயே தான்ஸ்வே இலங்கைக்கான தமது பயணத்தையும் மேற்கொண்டார். தமது இலங்கைக்கான பயணத்தின் போது திடீரென நோய்வாய்ப்பட்டதால் அவர் தமது இலங்கைக்கான பயணத்தை இடைநடுவில் கைவிட்டு மியன்மாருக்குத் திரும்பிச் செல்ல நேரிட்டது. நாடு திரும்பியதும், அமெரிக்காவால் முன் வைக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதுடன், அதற்கமைய நாட்டின் தலைமைப் பதவியினின்றும் விலகிக் கொண்டார். அவரால் நாட்டின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட அதிகாரி ஆங்சாங்சூகியை வீட்டுக் காவலிலிருந்து விடுவித்ததுடன், நாட்டில் நியாயமான, சுதந்திரமான விதத்தில் பொதுத் தேர்தலொன்றை நடத்தி மியன்மார் நாட்டில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி வைத்தார். பின்னர் இடம்பெற்ற இடைத் தேர்தலொன்றில் போட்டியிட்டதன் மூலம் ஆங்சாங்சூகி வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார். தற்போது அவர் அடுத்த ஆண்டில் இடம் பெறவுள்ள மியன்மார் நாட்டின் ஜனாதிபதித் தேர்தலிலும் வேட்பாளராகப் போட்டியிடத் தயாராகி வருகிறார். அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் மியன்மார் நாட்டின் மீது விதித்திருந்த சகல பொருளாதாரத் தடைகளையும் நீக்கிக் கொண்டதோடு, அந்த நாட்டுக்குப் பெரிய அளவில் நிதி உதவிகளையும், முதலீடுகளையும் மேற்கொண்டு உதவி வருகின்றன. சீனாவும் இந்தியாவும் போட்டி போட்டுக் கொண்டு மியன்மார் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து முன்னெடுத்து வருகின்றன. சீனா, இந்தியாவினதும், அமெரிக்காவினதும் இத்தகைய அரசியல் சித்து விளையாட்டுக்கு ஆரம்ப முதலே எதிர்ப்புத் தெரிவிக்காமைக்கு, மியன்மார் குறித்த சீனாவின் தேவைகளுக்கு தாம் ஒரு போதும் அச்சுறுத்தல் விடுக்கப் போவதில்லை என்று இந்தியாவும் அமெரிக்காவும் சீனாவுக்கு வழங்கியிருந்தஉறுதிமொழியே காரணமாகும்.

### இலங்கை விடயத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் எவ்வாறு செயற்படப் போகின்றன

சரி, இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கை விடயம் தொடர்பாக கைக்கொள்ளப்போகும் அணுகுமுறை கூட இத்தகையதொன்று தானா என்ற கேள்வி மனதில் உதிக்கிறது. போகிற போக்கைப் பார்த்தால், மியன்மார் விடயத்தில் தாம் கைக்கொண்ட அரசியல் அணுகுமுறையையே இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கை விடயத்திலும் கைக்கொள்ளப் போவதாகவே தோன்றுகிறது.

அமெரிக்கா இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தனது இறுக்கமான பிரேரணையை நிறைவேற்றி மஹிந்தவின் அரசை நெருக்கும் போது இந்தியா அதனை நீர்த்துப் போக வைக்கும் விதத்தில் இலகுபடுத்தி வைக்கும். மார்ச் மாத பிரேரணை நிறைவேற்றப்பட்டு இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கப்படுமானால் இந்தியா, மியன்மார் விடயத்தில் சமாதானப் புறாவைக் கொண்டு சென்றமை போன்று, இலங்கையிடமும் சமாதானத் தூதுவராக வரக் கூடும். அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடையை மியன்மார் நாட்டால் தாங்கிக் கொண்டு சமாளிக்க முடிந்த போதிலும், இலங்கையால் அது ஒரு போதும் இயலப் போவதில்லை. ஏனெனில் மியன்மார் நாடு இயற்கை வளங்கள் பெருமளவில் நிறைந்த நாடொன்றாகும். எண்ணெய் மற்றும் இயற்கை வாயு வளங்கள் மூலம் பெருமளவு வருமானம் ஈட்டும் நாடு அது. இலங் கையோ ஏற்றுமதி இறக்குமதி விடயத்தில் தைத்த ஆடை உற்பத்தியையே முக்கியமாக நம்பியிருக்கிறது. இந்த நிலையில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுமானால் இலங்கையால் ஒரு மாதத்துக்குக் கூடத் தாக்குப் பிடிக்க இயலாது. அந்த வகையில் நோக்கும்போது, இந்தியா மற்றும் அமெரிக் காவின் இலங்கை குறித்த தற்போதைய அரசியல் சித்து விளையாட்டு, மியன்மார் நாட்டு விடயத்தில் கொடுத்த வெற்றியை விட இலங்கை விடயத்தில் அவற்றுக்குப் பெரு வெற்றியைக் கொடுக்கக் கூடும். அத்தகையதொரு அரசியல் சித்து விளையாட்டு அரங்கேறும் போது அரங்கத்தில் தலை காட்டப் போகும் இலங்கையின் ஆங்சாங் சூகி யாராக இருக்கக் கூடும் என நாடே ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

*['மவ்பிம' கட்டுரையில் இலங்கையின் ஆங்சாங் சூகி யார் என எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. ஆனால், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, அனோமா சரத் பொன்சேகா ஆகியோரின் படங்கள் காணப்பட்டன.]*



சுதந்திரமான, சர்வதேச விசாரணை ஒன்று இடம்பெற வேண்டுமென ஆணையாளர் பரிந்துரை செய்துள்ளார். அத்துடன் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களில் அக்கறை செலுத்துவதுடன் அவை தொடர்பாக நீதியான விசாரணை நடத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சகல இலங்கைப் பிரசைகளுக்கும் நீதி, நியாயம், உத்தரவாதம், என்பன சமமாகக் கிடைக்கக் கூடிய வகையில் இலங்கை அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் இலங்கை அமைச்சரவையில்

## நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் அம்பலம்

தமிழில்: விகேஆர்

இறுதியாக வெளியிடப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையில் இலங்கை அரசால் மீள் கட்டமைப்பு மற்றும் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியமை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை அரசு கடந்த காலங்களில் சர்வதேச மனித உரிமைகளை மீறியமை மற்றும் மனிதாபிமான சட்டங்களை மீறியமை தொடர்பாக சுதந்திரமானதும் நேர்மையுமான விசாரணைகளை நடத்துவதற்குத் தவறிவிட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் சிறுபான்மை இனத்தவர்களின் வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், சட்டவாளர்கள் எனப் பலரும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை அரசு மனித உரிமைகள் ஆணையாளரால் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவித்த தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதிலும் அக்கறை காட்டவில்லை. இந்த நிலையில் இறுதிப் போரின்போது நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பான புதிய ஆதாரங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் சுதந்திரமான, சர்வதேச விசாரணை ஒன்று இடம்பெற வேண்டுமென ஆணையாளர் பரிந்துரை செய்துள்ளார். அத்துடன் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்களில் அக்கறை செலுத்துவதுடன் அவை தொடர்பாக நீதியான விசாரணை நடத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சகல இலங்கைப் பிரசைகளுக்கும் நீதி, நியாயம், உத்தரவாதம் என்பன சமமாகக் கிடைக்கக் கூடிய வகையில் இலங்கை அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் அழைப்பின் பேரில் மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து நிலைவரங்களை ஆராய்ந்துள்ளார்.

இதன்போது பொதுமக்களின் வதிவிடங்களிலிருந்து படையினரின் பிரசன்னத்தை இல்லாதொழிப்பதற்குக் காலக்கெடு ஒன்று விதிக்கப்பட வேண்டுமென ஆணையாளர் கருத்து வெளியிட்டார். ஆனால் இதுவரை எதுவுமே நடைபெறவில்லை.

மேலும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பாக அந்த அறிக்கையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி கொழும்பின் சிறிய புறநகர்ப் பகுதியான வெலிவேரியாவில் நிராயுதபாணிகளாகத் தமது குடிதண்ணீர் மாசு அடைவது தொடர்பான கோரிக்கையை வலியுறுத்துவதற்காகத் திரண்ட சுமார் 6,000 குடியிருப்பாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்றுபேர் உயிரிழந்ததுடன் வேறு பலர் மோசமான காயங்களுக்கு உள்ளானார்கள்.

இது தொடர்பாக இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொண்டது. விசாரணைகளின் பின்னர் அறிக்கையும் வெளியிடப்பட்டது. அத்துடன் நான்கு சிரேஷ்ட தரத்திலுள்ள படைவீரர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவிகளிலிருந்து அகற்றியதாக படைத் தரப்பினரால் அறிவிக்கப்பட்டது. ஆனால் இது தொடர்பாக நீதி விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் ஆகக் குறைந்தது 27 பேர் கொல்லப்பட்டதாகவும் 43 பேர் காயங்களுக்கு உள்ளானதாகவும் தெரி விக்கப்பட்டது. இது தொடர்பாக ஆராய்ந்த குழு 2014 ஆம் ஆண்டு 15 ஆம் திகதி தனது அறிக்கையை அமைச்சரிடம் கையளித்தது. ஆனால் இந்த அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படவில்லை. ஆனால் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் விசாரணைக் குழுவினரின் அறிக்கையில் கைதிகள் தமக்குள் தாமே சுட்டுக்கொண்டு இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

மேலும் வவுனியா சிறையில் கைதிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களை விடுவிக்கும் பொருட்டு படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கைதிகள் சிலர் உயிரிழந்தமை தொடர்பாக விசாரணைகள் நடைபெறுவதாக அரச தரப்பால் மனித உரிமைகள் ஆணையாளரிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இது வரை அது தொடர்பான அறிக்கைகள் வெளியிடப்படவில்லை.

மேலும் மாத்தளையில் புதைகுழி ஒன்று இருப்பது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது. மன்னாரிலும் புதைகுழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இதில் குழந்தைகளின் உடல் எச்சங்களும் மீட்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன. இந்த நிலையில் இந்தப் புதைகுழியில் காணப்படும் மனித எச்சங்கள் தமது காணாமற்போன உறவுகளுடையதாக இருக்கலாமென்ற ஏக்கமும் இங்குள்ள மக்களிடையே காணப்படுகின்றது. இது தொடர்பாக சர்வதேசத்தின் உதவியுடனான விசார ணைகள் இடம்பெறுவதற்கு மனித உரிமைகள் ஆணையாளர் பரிந்துரை செய்துள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையின் அமைச்சரவை கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கென ஜனாதிபதி செயலணி ஒன்றை நியமித்தது. அதே ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதி செயலணி நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் சிலவற்றை நடைமுறைப்படுத்துவ தற்கான தேசியத் திட்டம் ஒன்றையும் சமர்ப்பித்தது. இது தொடர்பாகவும் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் ஜனாதிபதியின் செயலாளருடன் கலந்துரையாடியுள்ளனர்.

மேலும் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவி னால் பரிந்துரைக்கப்பட்ட சில விடயங்கள் அமுல்படுத்தப்பட்டமையை ஆணையாளர் வரவேற்றுள்ளார். இதில் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து வழங்கப்பட்டமை, வடக்குக் கிழக்கிலுள்ள பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் அடங்கியுள்ளன.

ஆனால் நல்லிணக்க ஆணைக் குழுவினால் தெரிவிக்கப்பட்ட 285 பரிந்துரைகளில் 92ஐ மட்டுமே ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு ஆதரவு நல்கியது. பின்னர் 53 பரிந் துரைகள் மேலதிகமாக உள்ளடக்கப்பட்டன.

இந்த நிலையில் துணை இராணுவப் பிரிவினர் இன்னும் தடைசெய்யப்படாத நிலையிலேயே காணப்படுகின்றனர். இவற்றின் சிரேஷ்ட தலைவர்கள் இரண்டு பேர் இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர். டக்ளஸ் தேவானந்தா, விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) ஆகியோரே அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றனர். மேலும் சிவனேசதுரை சந்திரகாந்தன் என்பவர் கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்துள்ளார். இவர்கள் மூவருக்கும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. கருணா தொடர்பாக கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் அறிக்கையில் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், மூதூரில் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் 17 பணியாளர்கள் கொல்லப்பட்டமை, இறுதிப் போரின்போது சரணடைந்தவர்கள் படையினரின் பாதுகாப்பில் இருந்த போது கொல்லப்பட்டமை, சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட விடயங்கள், பிரபாகரனின் மகனான பாலச்சந்திரனின் கொலை, புலிகளின் தளபதிகளில் ஒருவரான ரமேஷ், இசைப்பிரியாவின் கொலை, வெள்ளைக் கொடியுடன் சரணடையச் சென்றவர்கள் கொல்லப்பட்ட சம்பவம், ஊடகவியலாளர் பிரகீத் எகனலிகொட காணாமற் போனமை மற்றும் பல விடயங்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பழைய பொருள்கள் விற்பனையாகும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை உயரதிகாரிகள் பாராட்டுவார்கள்.



**இடபம்**: பழைய கடன் பிரச்சினையில் ஒன்று தீரும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.



**மிதுனம்**: எதிர்ப்புகள் அடங்கும். நட்பு வட்டம் விரிவடையும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புது வேலை அமையும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.



**கடகம்**: சொத்து வாங்குவது. விற்பது நல்ல விதத்தில் முடியும். உறவுகள் தேடி வருவார்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.



**சிங்கம்**: திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் புதிய தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.



**கன்னி**: நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருத்தப்படுவீர்கள். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் அதிருப்தி அடைவார்கள்.



**துலாம்**: குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்துபோகும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். அசதி, சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.



**விருச்சிகம்**: வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடை யின்றி முடியும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**தனுசு**: எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். உறவினர், நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். சபைகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். பயணங்கள் சிறப்பாக அமையும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைகளைத் தருவார்கள்.



**மகரம்**: எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். யோகா, தியானத்தில் மனம் லயிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.



**கும்பம்**: கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். மற்றவர்கள் விவகாரத்தில் அநாவசியமாகத் தலையிட வேண்டாம். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களைக் குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.



**மீனம்**: உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

## நாளை

**மாசி-15 வியாழக்கிழமை | 27.02.2014**

திதி: திரயோதசி மு.இ.07.03 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.இ.11.17 வரை
சுபநேரம்: 07.59-09.29 வரை
இராகுகாலம்:.01.59-03.29 வரை
மகா சிவராத்திரி விரதம்


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### மெய்யுணர்வே சமயம்

இதுவரை மனிதனால் ஆண்டவனுக்குச் சூட்டப்பட்ட பெயர்களுள் மிகச் சிறந்தது சத்தியம் [உண்மை]. மெய்யுணர்வின் பயனே சத்தியம். எனவே, அதனை உள்ளத்தின் ஊடே தேடுக. எல்லாப் புத்தகங்களையும் உருவங்களையும் விட்டு விலகி உங்களுடைய ஆன்மா தன்னையே காணவேண்டும். "புத்தகங்களில் முழுகி நாம் பித்துப் பிடித்திருக்கிறோம்" என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறார். இயற்கையின் இரட்டை நிலைக்கு (dualities) அப்பால் செல்லுங்கள். மதக்கோட்பாடுகளும் உருவங்களும் சடங்குகளும் தான் எல்லாம் என்று நீங்கள் கருதும் போது, பந்தத்தில் சிக்கிக் கொள்கிறீர்கள். மற்றவர்களுக்கு உதவுவதற்காக நீங்கள் அதில் பங்கு கொள்ளுங்கள். ஆனால், அவை ஒரு பந்தமாகாமல் எச்சரிக்கையுடன் இருங்கள். மதம் ஒன்றே. முறைகள் தான் வெவ்வேறாயிருக்க வேண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் தமது செய்தியைக் கூறட்டும். ஆனால் மற்ற மதங்களில் குறை காணல் வேண்டாம். உண்மையொளி காணவேண்டுமாயின், நீங்கள் உருவங்களை எல்லாம் விட்டு விலகி நிற்க வேண்டும். பிரம்மஞானம் என்னும் அமுதக் கடலில் ஆழ்ந்து அதைப் பருகுக. "நானே அவன்" என்பதை உணர்ந்த ஒருவன், கந்தல் உடுத்திக் கொண்டு இருந்தாலும் மகிழ்ச்சியுடன் இருக்கிறான். நிலையானதின் உள்ளே சென்று எல்லையற்ற சக்தி பெற்று வெளியே வருக. சத்தியத்தைத் தேடிச் செல்லும் அடிமை, சுதந்திர மனிதனாகத் திரும்பி வருகிறான்.

## ராட்சத மாம்பழத்தைக் காணவில்லை தேடுதல் வேட்டை தீவிரம்



ஆஸ்திரேலியாவில் 10 தொன் எடை கொண்ட ராட்சத மாம்பழம் காணாமற் போனதால் தேடுதல் வேட்டை தீவிரமாகியுள்ளது.

கங்காரு நாடு என்று அழைக்கப்படும் ஆஸ்திரேலியாவின் மக்கள், பிரபல சுற்றுலாத் தலங்களில் பிரமாண்ட சிற்பங்களையும், நினைவுச் சின்னங்களையும் நிறுவி பார்வையாளர்களைக் கவரும் கலையில் கைதேர்ந்தவர்கள்.

ராட்சத வாழைப்பழம், ராட்சத இறால் போன்ற கலைநயம் மிக்க பல சிற்பங்களை நாடு முழுவதும் நிறுவியுள்ள ஆஸ்திரேலிய நாட்டின் சுற்றுலாத் துறை, கடந்த 2002 ஆம் ஆண்டு குவீன்ஸ்லாந்து பகுதியில் 10 தொன் எடையில் 30 அடி உயரம்கொண்ட ராட்சத மாம்பழத்தை கண்ணாடி இழை உலோகத்தில் உருவாக்கி காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

சுமார் ஒரு லட்சம் ஆஸ்திரேலிய டொலர்கள் செலவில் 3 மாடி கட்டடத்துக்கு இணையாக கம்பீரமாக நிமிர்ந்து நின்ற அந்த மாம்பழம் இரவோடு இரவாக காணாமற் போய்விட்டது.

இது குறித்த தகவல் அறிந்த சுற்றுலாத்துறை அதிகாரிகள் விரைந்தோடி வந்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களின் பதிவுகளை ஆய்வு செய்தபோது அவர்கள் கண்டகாட்சி திடுக்கிட வைத்தது.

அதிகாலை 2 மணியளவில் ராட்சத கிரேனுடன் அந்தப் பகுதிக்கு வந்த சிலர் அந்த மாங்காய் சிற்பத்தை பீடத்துடன் பெயர்த்து எடுத்துச் சென்ற காட்சி கமராவில் பதிவாகியிருந்தது.

இதுகுறித்து சுற்றுலாத்துறை அதிகாரிகள் கூறுகையில், "இவ்வளவு பெரிய ராட்சத மாம்பழத்தை திருடி சென்றவர்கள் அதை அவ்வளவு சுலபமாக மறைத்து வைக்க முடியாது. விரைவில் அந்தச் சமூக விரோதிகள் பிடிபட்டு விடுவார்கள் என்றும், மாம்பழத்தையும் மீட்டு பழைய இடத்திலேயே நிறுத்தி வைப்போம்" என்றும் கூறியுள்ளனர்.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | 4 | 7 | | 2 | 9 |
| 5 | 9 | | | | | 7 | | |
| | | 8 | | 9 | 2 | | 3 | 5 |
| 6 | | | 4 | | 3 | | | |
| | | 1 | | 7 | | 9 | | |
| | | | 9 | | 5 | | | 1 |
| 7 | 6 | | 8 | 2 | | 5 | | |
| | | 3 | | | | | 8 | 2 |
| 8 | 2 | | 1 | 3 | 4 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 5 | 1 | 6 | 4 | 7 | 8 | 9 |
| 4 | 8 | 9 | 5 | 3 | 7 | 1 | 2 | 6 |
| 1 | 7 | 6 | 9 | 8 | 2 | 3 | 4 | 5 |
| 7 | 9 | 3 | 2 | 1 | 5 | 4 | 6 | 8 |
| 8 | 5 | 1 | 6 | 4 | 3 | 2 | 9 | 7 |
| 6 | 4 | 2 | 8 | 7 | 9 | 5 | 1 | 3 |
| 5 | 2 | 8 | 7 | 9 | 1 | 6 | 3 | 4 |
| 3 | 6 | 7 | 4 | 2 | 8 | 9 | 5 | 1 |
| 9 | 1 | 4 | 3 | 5 | 6 | 8 | 7 | 2 |




கனடாவின் ஒண்டாரியோ நகரில் நவீன வாகனங்களுக்கான கண்காட்சி நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட அதிநவீன லொறியொன்று பார்வையாளர்களை பெரிதும் கவர்ந் துள்ளது.

இந்த லொறியின் உரிமையாளரான நியெல் டார்னெல் என்பவர் 1957 ஆம் ஆண்டில் தயாரிக் கப்பட்ட செவ்ர்லெட் லொறியின் வடிவமைப்பை மாற்றி, அதற்கு அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான 3 பழைய ஜெட் விமான என் ஜின்களைப் பொருத்தி, ஒரு மணி நேரத்தில் 643 கிலோ மீற்றர் அசுர வேகத்தில் ஓடும் வாகனமாக மாற்றியுள்ளார்.

ஷொக்வேவ் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அதி நவீன லொறி ஆறரை வினாடியில் கால் மைல் தூரத்தைக் கடந்து புதிய சாதனையைப் படைத் துள்ளது. ஒரு மணி நேரத்தில் 400 மைல் தூரத்தை இந்த லொறி சுலபமாகக் கடந்து விடும் என்பது தெளிவாகிறது என்று வாகனத் துறை பொறி யியலாளர்கள் வியக்கின்றனர்.




## 'ஜெட்'ட்டின் வேகத்தில் ஓடும் அதிநவீன லொறி

### நடமாட முடியாத

## மாணவனை பாடசாலைக்கு தூக்கிச் செல்லும் நண்பர்கள்




கர்நாடக மாநிலத்தில் ஒரு வகை எலும்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ள 10ஆம் வகுப்பு மாணவரை அவரது நண்பர்கள் பாடசாலைக்குச் தூக்கிச் செல்கின்றனர்.

கர்நாடக மாநிலம் யாத்கிர் மாவட்டத்தில் உள்ள தாவரநாயக் தண்டா பகுதியைச் சேர்ந்த அசோக் சவான்(வயது-16) என்ற மாணவனே இவ்வாறு ஒரு வகை எலும்பு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இவர் தண்டாவில் உள்ள பாடசாலையில் 10ஆம் வகுப்பில் படித்து வருகிறார்.

15 வயது வரை சவான் ஏனைய குழந்தைகளைப் போல ஓடியாடி உற்சாகமாக இருந்துள்ளார். திடீரென்று ஒரு நாள் இடுப்பு வலிக்கிறது என்று தெரிவித்துள்ளார். அந்த வலி அதிகமாகி, அவரால் நடக்கவே முடியாமல் போய்விட்டது. சோலாபூரில் உள்ள தனியார் மருத்துவ மனைக்கு அசோக் சவானை பெற்றோர் அழைத்துச் சென்றனர்.

இவருக்கு மியூகோபாலிசாக்கரைடோசஸ் என்ற அரிய வகை நோய் இருப்பதை மருத்துவர்கள் கண்டுபிடித்தனர். இந்த நோய் வந்தால் எலும்புகள் பலவீனமாகிவிடும். அதிலும் குறிப்பாக, இடுப்பு மற்றும் மூட்டுப் பகுதி எலும்புகள் மிகவும் பலவீனமாகிவிடும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதனையடுத்து சவானின் நண்பர்கள் தங்கள் நண்பனை ஒரு குழந்தையைப் போன்று தினமும் பாடசாலைக்குத் தூக்கிச் சென்று வருகின்றனர்.

மேற்படிப்பு படிக்க வேண்டும் என்பது சவானின் நீண்ட நாள் கனவு ஆகும். அவரது கனவை நனவாக்க நண்பர்கள் பக்கபலமாக உள்ளனர்.




## பிள்ளையாராக காட்சி தந்த யானை

இந்தியாவில் அசாம் மாநிலத்தில் யானைக் குட்டி ஒன்று தடுமாறி சேறும் சகதியுமான குழி ஒன்றினுள் விழுந்துள்ளது.

அந்த யானை விழும்போது ஒருவர் இருப்பது போன்ற நிலையில் விழுந்துள்ள போதிலும் அதனால் மீண்டும் எழுந்து நிற்க முடியவில்லை. இதனால் பார்ப்பவர்களுக்கு பிள் ளையார் காட்சி கொடுத்தது போன்றே யானை தென்பட்டுள்ளது. யானை தவறி விழுந்ததை அறிந்த அந்தக் கிராம மக்கள் அதனைக் காப்பாற்றியுள்ளனர்.





## ஹிட்லர் ஆட்சிக் கால ஓவியங்கள் கண்டுபிடிப்பு

ஜேர்மனியில் நாஜி கால கலைப்படைப்புகளில் 60 ஓவியங்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சி நடைபெற்று வந்த போது, 1930- 40 ஆண்டுக் காலகட்டத்தில் ஹில்டிபிராண்ட் குர்லிட் என்பவர் கலைப்படைப்புகளை விற்பனை செய்து வந்தார்.

அப்போது அரசு அதிகாரிகள், யூதர்களிடமிருந்து திருடிய மற்றும் சிதைந்ததாகக் கருதிய ஓவியங்களை இவரிடம் விற்பனைக்குக் கொடுத்துள்ளனர். ஆனால் காலப்போக்கில் விற்பனையாகாமல் இவரிடமே எஞ்சி இருந்த இந்த ஓவியங்கள் தற்போது இவரது மகன் கோர்னிலியஸ் குர்லிட் வசித்துவரும் மியூனிச் வீட்டில் இருப்பது கலைப்பொருள் முதலீட்டாளர்களின் கவனத்துக்கு வந்தது. அதைத் தொடர்ந்து ஆஸ்திரியாவின் சால்ஸ்பர்க் வீட்டில் பிக்காசோ, ரெனோயர், மோனெட் போன்ற பழம்பெரும் ஓவியர்களின் 60 கலைப்படைப்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று கோர்னிலியசின் தகவல் தொடர்பாளர் ஸ்டீபன் ஹோல்சிங்கர் தெரிவித்துள்ளார்.

இவை யூதர்களிடமிருந்து திருடப்பட்ட கலைப்பொருள்களா என்ற கோணத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு திருடப்பட்டதாக இருந்தால் உரியவர்களிடம் கலைப்பொருள்கள் திருப்பி ஒப்படைக்கப்படும் என்று ஜேர்மனி அரசு குறிப்பிட்டுள்ளது.





# ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும்

யாழ்ப்பாணம்,பெப்.26

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் 59 ஆவது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடை பெறவுள்ளது.

ஆலய மண்டபத்தில் அகில இலங்கைத் திருமுறைமன்ற மாணவர்களின் பண்ணிசையுடன் ஆரம்பமாகும் விழாவில் மன்றத்தின் அமைப்பாளரான சி. கிருஷ்ணமூர்த்தி கௌரவிக்கப்படவுள்ளார். 2013 ஆம் ஆண்டு நடைபெற்றசைவசமயஅறிவுப்பரீட்சை, செயல்முறைப் போட்டி ஆகியவற்றுக்கு 98 வீத மாணவர்களைத் தோற்றச்செய்தமைக்காக மிருசுவில் அ.மி.த.க.பாடசாலை அதிபரும் விசேட கௌரவம் பெறவுள்ளார்.

அதேசமயம் கடந்த ஆண்டு மேற்படி கழகம் தரம் ஒன்று முதல் தரம் 13 வரையான மாணவர்களிடையே நடத்திய சைவசமய அறிவுப் பரீட்சை, நீதிநூல் மனப்போட்டி மற்றும் இரு பிரிவுகளாக நடைபெற்ற கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் பரீட்சைகளில் வெற்றியீட்டியோர்களுக்குப் பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தில் சிவராத்திரி நான்கு சாமப் பூசைகள் இரவு 8 மணி, இரவு 11 மணி, அதிகாலை 3 மணி, அதிகாலை 5 மணிக்கும் நடைபெறவுள்ளதாக சைவ சமய அபிவிருத்திக் கழகம் அறியத் தந்துள்ளது. (ஒ)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் நடத்தும் "தேசிய ஒருமைப்பாடும் வடமாகாணத்தின் மீள் கட்டமைப்பும்" குறித்த கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் சிறப்புப் பேச்சாளர்களாக ஜெயந்தா தனபாலா, பேராசிரியர் சாவித்திரி குணசேகர, முன்னாள் அருட்தந்தை டுலீப் டீ சிக்கியரா, பேராசிரியர் ரஞ்சினி ஒபயசேகர, திஸ்ஸ ஜெயதிலக, கலாநிதி செல்வி திருச்சந்திரன், யாவிட் யுசூப் மற்றும் சந்திரா ஜெயரட்ண ஆகியோர் கலந்து கொள்வர். (வ)

# மெய்வன்மைப் போட்டி

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை ஆலய முன்றிலில் அதிபர் திருமதி கு.அசோக்குமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் சங்கம நிறுவன இயக்குநர் அருட்தந்தை எஸ்.அந்தோனிமுத்து, யாழ். வலய ஆரம்பக் கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் திருமதி ந.அகில தாஸ் ஆகியோரும் கௌரவ விருந் தினராக புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை யின் அதிபர் பொ.வரதகுலசிங்கமும் கலந்து கொள்வர். (ஒ)

♦♦♦

அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வே.குணசீலன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராசமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சு.சற்குணராசாவும் கலந்து கொள்வர். (ஒ-11)

# ஞானச் சுடர் மாசி மாத இதழ் வெளியீடு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான "ஞானச் சுடர்" ஆன்மிகசஞ்சிகையின் மாசி மாத இதழ் வெளியீட்டுவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் எஸ்.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில்வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கமும், மதிப்பீட்டுரையை ஓய்வுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்துவார்கள். (வ-173)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

**ஆறுமுகம் பேரம்பலம்**

[மெக்கானிக்]

கடந்த (27.01.2014) திங்கட்கிழமை சிவபதமெய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் எம்முடன் துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் தந்த உறவினர்கள், நண்பர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (26.02.2014) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மண்ணில் : 29.10.1927 விண்ணில் : 27.01.2014


கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

**குடும்பத்தினர்.**

021 205 0704

(29772)(7.6.3)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 20 . 05 . 1927

மறைவு 27 . 01 . 2014

அமரர்

**சுப்பையா அருமைநாயகம்**

கடந்த 27.01.2014 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் சுப்பையா அருமைநாயகம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று [26.02.2014] புதன்கிழமை மு.ப.09.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து

**கலட்டி எச்சாட்டி மாரியம்மன் மணிமண்டபத்தில்**

நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

41, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(45025)(12.3.6)

### விபத்தில் சிக்கிய சிறுமி

அளவெட்டி, பெப்.26

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய சிறுமியொருவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்ப வம் ஞாயிறன்று இடம் பெற்றது. மல்லாகம், 7 ஆம்கட்டையைச் சேர்ந்த உதய குமார்-கேசிகா (வயது-8) என்ற சிறு மியே விபத்தில் சிக் கியவராவார். பெற்றோருடன் பஸ்ஸிலிருந்து இறங்கி 7 ஆம் கட்டையடியில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் கே.கே.எஸ்.வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் தூக்கி வீசப்பட்டுள்ளார். எனினும் சிறுமிக்குக் காயம் ஏற்படாத போதும் உட்காயம் ஏற்பட்டிருக்கலாம் என்பதால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது. (வ-36)

### பயிற்சி நெறி

உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கான காணிசுவீகரிப்புதொடர்பான பயிற்சி நெறி எதிர் வரும் முதலாம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் கண்டி வீதியில் உள்ள பயிற்சிப் பிரிவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி சுமதி ஜெயநிமலன் அவர்களின் அன்புத் தந்தையும் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி சிவமதி முரளிதாஸ் அவர்களின் அன்பு மாமனாருமாகிய

**கந்தவனம் கிருஸ்ணபிள்ளை**

அவர்கள் 20.02.2014 அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து ஊழியர்களும்,
ஊழியர் நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(சி.12599)
(45.6.3)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.12.1966

மறைவு 26.02.2001

**திருமதி சித்திரா (கலா) மகாலிங்கம்**

ஒளிவிளக்காய் இருந்தெம்மை
வாழ்த்துவீர் என்றிருக்க
தெய்வமாய் மாறி எம்மை
விளக்கேற்ற வைத்தீர்களே அம்மா
வாஞ்சையான அன்பையும், பாசமான முகத்தையும்
பார்க்கத் துடிக்கின்றோம் உம் பிள்ளைகள் நாம்
எப் பிறப்பிலும் நீங்களே எம் தாயாக வேண்டி
இறைவனை வேண்டுகின்றோம் அம்மா.

டச்சு வீதி, கோப்பாய் தெற்கு. **கணவர், பிள்ளைகள்.**

(45038) (2,6,3)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24 ★ 09 ★ 1969

ஆண்டவன் மடியில் 01 ★ 03 ★ 2011

திதி: 26.02.2014

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும்
திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி செல்வநந்தினி (நந்தினி) செல்வநாதன்**

அன்பான கணவனும் அழகான குழந்தையும்
அனைவர்க்கும் வாய்ப்பதில்லை
நன்றான உறவுகள் நட்பான அயலவர்
எல்லோர்க்கும் கிடைப்பதில்லை
எல்லாம் இருந்துமே எமை விட்டுப் பிரியவே
எங்ஙனம் மனது கொண்டாய்
எந்நாளும் உங்கள் நினைவு எம்முள் இருக்குமே
இறவாமல் வாழும் என்றும்

4, கோணேசபுரம், உவர்மலை,
திருகோணமலை. 026 222 5672

**செல்வநாதன் குடும்பத்தினர்.**

(சி/12579)3.6.4)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

வலி. வடக்கு, பெப். 25

வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள அரிமாக் கழக மண்டபத்தில் தலைவர் சி.அருளானந்த சிவம் தலைமையில் நடை பெற்றது. நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக சீ.தவநாதன், உப தலைவராக சி.அருளானந்த சிவம், செயலாளராக சு.ஏழுர்நாயகம், உப செயலாளராக கே.இராமச்சந்திரன், பொருளாளராக எஸ்.சின்னத்தம்பி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக, மா.கதிரமலைப்பிள்ளை, எஸ்.இராதாகிருஷ்ணன், கே.அருளையா, எஸ்.முருகையா, என்.சிவபாலரட்ணம், எம்.நடராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-86)

◆◆◆

கைதடி சனசமூக நிலைய ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நடப்பு ஆண்டுக்கான கைதடி சனசமூக நிலைய ஒன்றியத்தின் தலைவராக இ.கந்தசாமியும், செயலாளராக எஸ்.சுரேஸ்குமாரும், பொருளாளராக தி.சத்தியதீபனும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 13 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

(ஒ-288)

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கான போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். அடைக்கலமாதா ஆலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ-14)

## வர்த்தக ஊழியருக்கு வெள்ளி விடுமுறை வழங்குக

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை விரதமிருக்கும் வர்த்தக ஊழியர்கள் நன்மை கருதி, அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக மறுநாள் வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கி உதவுமாறு யாழ்ப்பாண வர்த்தகர்களை, யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஓ)

## சிவராத்திரி விரதம் நாளை

யாழ்ப்பாணம், பெப்.26

இந்துக்களின் புனித தினங்களில் ஒன்றான மகா சிவராத்திரி விரத தினம் நாளை வியாழக்கிழமையாகும். இத்தினத்தன்று இரவில் நான்கு சாமங்களிலும் இந்து ஆலயங்களில் குறிப்பாக சிவன் ஆலயங்களில் அபிஷேக, ஆராதனைகள் நடைபெறுவதுடன் அன்று இரவு முழுவதும் அடியவர்கள் விழித்திருந்து உபவாசம் இருந்து விரதம் அனுஷ்டிப்பதுடன் மறுநாள் மாசி அமாவாசையன்று பிதிர்களின் மோட்சம் கருதி மேற்கொள்ளும் அமாவாசை விரதத்தை நிறைவு செய்வர்.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தான்தோன்றீஸ்வரம், மாமாங்கேஸ்வரம் மற்றும் புகழ்பெற்ற ஆலயங்கள் பலவற்றிலும் மகா சிவராத்திரி விரதம் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

◆◆◆

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை மாலை 4.30 மணியிலிருந்து பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி அதிகாலை ஆலய பித்தர் கேணியில் தீர்த்தம் நடைபெறும். ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சமய கலை நிகழ்வுகள், நாடகம், வில்லுப் பாட்டு என்பனவும் நடைபெறவுள்ளன.

◆◆◆

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் சிவராத்திரியை முன்னிட்டு நாளை மாலை 5.55 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றமும் பஜனை, நான்கு சாமத்திலும் பஞ்சாட்சர ஜெபத்துடன் வில்வ அர்ச்சனை இடம்பெறுவதுடன் மறுநாள் காலை 6 மணிக்கு நடைபெறும் மங்களாராத்தியுடன் நிகழ்வு நிறைவுபெறும்.

◆◆◆

தம்பாட்டி - ஊர்காவற்றுறை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை நான்கு சாமப் பூசைகள் இடம்பெறும். அதே சமயம் மாணவர்களின் பொது சமய அறிவியல் வினாடிவினாப் போட்டிகளும் இரவு 9.30 மணிக்கு தம்பாட்டி காந்திஜி நாடக மன்றப் பெண் கலைஞர்களின் காத்தவராயன் கூத்தும், அதிகாலை ஒரு மணிக்கு மூத்த இளங்கலைஞரின் பண்டார வன்னியன் கூத்தும் இடம்பெறும். (ஓ)

**கணினி உதிரிப்பாகங்கள் மலிவு விலையில்...**

| | | | |
|---|---|---|---|
| Blank DVD(Banana) | 16/= | CRT Monitor (12 inch) | 500/= |
| Game DVD | 40/= | CRT Monitor (15 inch) | 1000/= |
| Software CD | 40/= | LCD Monitor (15 inch) | 4400/= |
| Memory Card Reader | 50/= | LED Monitor (14 inch) | 5900/= |
| Phone Charger | 75/= | DONGLE STC(6mon war) | 2750/= |
| Multi Charger | 100/= | FLEXBLE KEYBORD | 800/= |
| Power Cable | 100/= | KEYBORD | 450/= |
| Head Phone | 200/= | SPEAKER | 400/= |
| Memory Card 4GB | 420/= | USB SOUND CARD | 300/= |
| PENDRIVE 8GB(6mon w) | 950/= | MOUSE | 300/= |

**Full set of SAMSUNG Branded PC** 12 900/=
Processor 3.0 (3 Mon.War), DDRII 1GB, HD 160GB, Monitor 15", KB & Mouse

**Full set of HP Branded PC** 14 900/=
INTEL (M) 3.20 (6 Mon.War), DDRII 1GB, HD 80 GB, LCD 15", KB & Mouse

**Full set of INTEL Assemble PC**(6 Mon.War) 24 900/=
Duel Core 2.4(1 yr War), DDRIII 2GB, 500GB, LED 14"(6 Mon.War), KB & Mouse

(45043)(5.6.3)

**Micro Dgitel**
146, Ponnalai Road, Manipay Tel : 021 3200 999, 07779 3333 8

**Motor Cycle விற்பனைக்கு**
LML Scooter (Select II Japan) உடன் விற்பனைக்கு. விலை 40,000/=
தொடர்பு: 077 977 3533
(45042)(11.3.6)

**அரிசி ஆலை தேவை**
குத்தகைக்கு அரிசி ஆலை தேவை.
தொடர்பு: 075 643 3153
(45045)(3.6.3)

**வீடு வாடகைக்குண்டு**
யாழ்ப்பாணம், நல்லூர் சூழலில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:077 867 0735 (45040)(3.6.4)

**பெருந்தெருக்களில் கோடு கீறுதல்**
அனுபவம் உள்ள தொழிலாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளுங்கள்
நளீன்
0777 416720



(சி/12244)

**தையல் பயிற்சி வகுப்பு**
சாறி பிளவுஸ் 10 விதமான கட்டிங் (இந்தியமுறையிலான) சல்வார் கட்டிங் என்பன பயிற்றுவிக்கப்படும்.
வயது எல்லை இல்லை.
தொடர்பு:077 191 2085 (45036)(3.6.4)

### மாந்தை மேற்கு பிரதேச சபையில் நிலவும் அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் -2014

முகாமைத்துவசேவைகள் திணைக்களத்தினால் சீரமைக்கப்பட்ட01.01.2013 ஆம் திகதிமுதல் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காவலாளி | 03 |
| 2 | வீதி/வெளிக்களத்தொழிலாளி | 03 |

1.காவலாளி - சம்பளதொகுதி
- PL1-2006A-11730-10x120-10x130-10x145-12x160-17600

**சேவைநிபந்தனைகள்:**
1. பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியஉரித்துடையதும் ஆகும்.
2. ஊழியர் விதவைகள்/அனாதைகள் ஓய்வூதியத்திற்கு அளிப்புச்செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்றுவருடதகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத்தகைமைகள்:**
1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
2. விண்ணப்ப முடிவு திகதியின்போது 18வயதுக்கு மேற்பட்டவராகவும் 45வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்
3. எமது அதிகாரப் பிரதேசத்திற்குள் குறைந்தது 5 வருடங்களாவது நிரந்தரமாக வசித்திருந்ததற்குரிய கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழ் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு பெறப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது வாக்காளர் இடாப்புப் பட்டியலின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**கல்வித்தகைமை-காவலாளி:**
1. க.பொ.த.சா/த பரீட்சையில் 2அமர்வுகளுக்கு மேற்படாதவகையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 2 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஒரு அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வேறுதகைமைகள்:**
1. மேலதிகதகைமைகள், அனுபவம் விசேட தகைமையாகக் கருத்தில் கொள்ளப்படும்.
2. **வீதி/வெளிக்களத்தொழிலாளி - சம்பளதொகுதி -PL1-2006A-11730-10x120-10x130-10x145-12x160-17600**

* இப்பதவிக்கான தகைமைகள் 30.01.2014 ஆம் திகதிய விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டவை ஏற்புடையதாகும்.

**தெரிவுசெய்யப்படும் முறை**
1. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு தெரிவுகள் இடம்பெறும்.

**விண்ணப்பிக்கும் முறை**
1. மாந்தை மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா.100 ஐ செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று உரிய திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் **செயலாளர்,மாந்தைமேற்கு பிரதேச சபை, அடம்பன்** எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.
3. பதவிக்கு தேவையான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவு திகதியன்று பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. வழங்கப்படும் தகவல்கள் பொய்யானதென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

**விண்ணப்பமுடிவு திகதி -12.03.2014**

**ச.ஜெனிங்ஸ்,**
**செயலாளர்,**
**மாந்தை மேற்கு பிரதேச சபை, அடம்பன்.** (C/12600)(2.6.3)

### முடிவு திகதி மாற்றம்

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் -2013
25.02.2014 ஆம் திகதி பத்திரிகையில் பிரசுரமாகிய மேற்படி காவலாளி வெற்றிடம் நிரப்புவதற்கான விளம்பதரத்தில் **முடிவு திகதி 10.03.2014** என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆ.மிதிலைநாதன்,
செயலாளர்.
பிரதேச சபை
புதுக்குடியிருப்பு.
(சி/12301)(5.6.3)



### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் புதிய அறங்காவலர் சபைத் தெரிவு -27.02.2014

மேற்படி விடயம் தொடர்பாக **17.02.2014** ஆம் திகதிய நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு மேலாக பின்வருவனவற்றை அறியத்தருகின்றேன்.

- வாக்கெடுப்பு: 27.02.2014 மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை நடைபெறும்.
- வாக்காளர்கள் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு-24.02.2014

ந.மோகனரூபன்
செயலாளர்,
அறங்காவலர் சபை.
(சி/12302)(3.6.4)

### சாவகச்சேரி இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

காலம்: 09.03.2014 ஞாயிறு காலை 9.00 மணி
இடம்: கல்லூரி அருணாசலம் மண்டபம்
தலைவர்: அ.கயிலாயபிள்ளை (அதிபர்)

பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தி.முருகதாசன்
செயலாளர்.
அ.கயிலாயபிள்ளை
தலைவர்.
(சி/7652)(3.6.4)

**மதுரா** அழகுக்கலை பயிற்சி நிலையம்
(கோப்பாய், நாவலர் பாடசாலை அருகில்)

மதுரா அழகுக்கலை நிலையத்தில் ஒரு புதிய பயிற்சி பிரிவு ஆரம்பம்.
தொழில் பயிற்சி (Professional Course) பயிற்சி விவரம்
கிளீனப், பேஷியல் 25, மேக்கப் 06, சாறி றெஸ்சிங் 10, திரெட்டிங், வக்சிங், மெகந்தி, நெயில் ஆட், நீபொன்டிங், பேசிங், கேளிங், பூட்ஹெயா, ஹெயர் ஸ்ரைல் மெசினரி மூலமும் பயிற்சி அளிக்கப்படும்.
பிம்பிள் ரீட்மென்ட், ஸ்பா ரீட்மென்ட் பிளக்ஸ்பொட் ரீட்மென்ட், கறுப்பு காய் அகற்றுதல்.
பயிற்சி முடிவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சிக்கட்டணம் ரூ.8000.00 மட்டும்.
தையல், கான்ட் வேர்க், சாறி வேர்க், கேக் ஐசிங் ஆகிய பயிற்சிகளும் உண்டு.
01.03.2014 ஆம் திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.



தொழில் முயற்சிக்கு ஓர் அரியவாய்ப்பு மகளிர் மட்டும்
தொடர்பு: 077 936 2642
கோப்பாய், பழைய வீதி, கோப்பாய்
(45041)(12.3.5)



திருகோணமலையில் மீன் வளர்ப்பு முறை ஒன்றை அறிமுகம் செய்துள்ள ஓசன்பிக் நிறுவனத்தின் திட்ட ஆரம்ப நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் மீன்பிடி மற்றும் கடல் வளங்கள் அபிவிருத்திஅமைச்சர் ராஜித சேனாரத்ன, கிழக்குமாகாணமுதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், கடற்படைஅதிகாரி றியல் அட்மிரல் றொகான் அமரசிங்க உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-40)

# பதவி உயர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்

## வடக்கு முதல்வரிடம் வேண்டுகோள்

வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளிலுள்ள ஊழியர்களுக்கான பதவி உயர்வுத் திட்டத்தை உடன் நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சரென்ற வகையில், குறித்த பதவி உயர் வுத் திட்டத்தை நடைமுறைப்படுத் துவதற்கு வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்களுக்குக் கண்டிப்பான உத்தரவு வழாங்க வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள மாநகர சபை, நகரசபை மற்றும் பிரதேச சபைகளில் கடமையாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களுக்கான பதவி உயர்வுத் திட்டம் வடமாகாண ஆளுநரினால் 21.12.2011 ஆம். திகதி வெளியிடப்பட்டிருந்தது.

இதன்படி 01.01.2013 இலிருந்து பதவி உயர்வுக்கான ஆள்சேர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் அறிவுறுத்தி சேவைப் பிரமாணக் குறிப்பு அனுப்பப்பட்டிருந்தும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமை வருந்தத்தக்க விடயமாகும்.

இதனால் 25 வருடங்களாகக் கடமை புரிந்து வரும் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்கள் கூட பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனரென்பதைத் தங்களது மேலான கவனத்துக்கு தெரியப் படுத்துகின்றோம்.

இதேவேளை வட, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளில் குறித்த பதவி உயர்வுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு அங்குள்ள ஊழியர்கள் நன்மை அடைந்துள்ளநிலையில் எம்மவர்களுக்கு மட்டும்தான் மாற்றாந் தாய் மனப்பாங்கு காட்டப்படுகிறது.

குறித்த பதவி உயர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததனால் உள்ளூராட்சி சபைகளில் செயலாளர்களின் தன்னாதிக்கம் அதிகரித்து ஊழியர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த விடயத்தில் ஊழியர்களின் நலன் கருதி கடந்த 20 வருட காலமாக எமது தொழிற் சங்கம் போராடி வரும் நிலையில், தங்களுக்கும் ஏற்கனவே கோரிக்கையை முன் வைத்திருந்தோம்.

பதவி உயர்வுத் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துவதற்கு தாங்கள் வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு உத்தரவு வழ்ங்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-30)

# திறமையை வெளிக்காட்ட போட்டி

## நடத்துகிறது மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு

மட்டக்களப்பு,பெப்.26

நாடு முழுவதும் அமைந்துள்ள மத்தி யஸ்த சபைகளின் குழாம் உறுப்பினர்களது ஆக்கத் திறமைகளை வெளிக் கொணரும் நோக்குடன் நிர்மாணப் போட்டித் தொடரொன்று நடத்தப்பட விருக்கின்றது.

நீதி அமைச்சினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் தேசிய மத்தியஸ்த தினத்துக்கு சமாந்தரமாக, இந்த வருட நிகழ்வையொட்டி தமிழ், சிங்கள மொழிகளில் குறித்த நிர்மாணப் போட்டித் தொடரை நடத்துவதற்கு மத்தி யஸ்த சபைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

மத்தியஸ்த எண்ணக் கருவை அடிப்படையாகக் கொண்ட ஆக்கங்களை இந்தப் போட்டிக்கென மத்தியஸ்தர்கள் அனுப்பி வைக்கலாமெனவும்-

அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன் னர் தமது ஆக்கங்களை மத்தியஸ்தர் களிடமிருந்து பெற்று தவிசாளரதும், பிரிவின் பிரதேச செயலாளரதும் பரிந்துரையுடன் மத்தியஸ்த சபைத் தவிசாளர்கள் அனுப்பிவைக்கவேண்டுமெனவும் மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவின் செயலர் வாசனா பீ.குண ரத்ன அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி கவிதை, பாட்டு, சிறுகதை, திறனாய்வுக் கடிதம், சிறு நாடகம் (சிறுவர்) கைப்பிரதி, சிறுநாடகம் கைப்பிரதிப் போட்டிகள் மத்தியஸ் தர்களுக்காக நடத்தப்படவுள்ளன.

ஆக்கங்கள் அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செயலர், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, நீதி அமைச்சு, கொழும்பு-12 என்ற முகவரிக்கு "நிர்மாணப் போட்டித் தொடர் -2014" எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லையா கைலாயநாதன்

தோற்றம் 23★09★1950

மறைவு 18★02★2012

திதி: அபரபக்க துவாதசி

ஆண்டுகள் இரண்டு மறைந்து விட்டன அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய்
அநாதையாய்ப் பரிதவிக்க விட்டு விட்டு
எங்கு சென்றீர்கள்?
காலங்கள் ஆயிரம் போனாலும் மறக்க
முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

அம்மன் றோட்,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

(45048)(3.6.4)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் பர்வதம் சுப்பையா

தோற்றம் 05.03.1903

மறைவு 27.01.2014

கடந்த 27.01.2014 சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி பர்வதம் சுப்பையா
அவர்களின் மரணச் சடங்கில் கலந்து
கொண்டவர்களுக்கும், உள்நாடு,
வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலமாக
அனுதாபம் தெரிவித்தோருக்கும், எமக்குப்
பலவழிகளில் உதவியவர்களுக்கும்
எமது நன்றிகளைத்
தெவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
இன்று (26.02.2014) புதன்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் அனைவரும் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
யிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

குடும்பத்தினர்.
021 321 8823
புதுவீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

(45045)(2.3.5)

## மரண அறிவித்தல்

### திருமதி வாலாம்பிகை யோகராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, இரத்மலானை இந்துக்கல்லூரி)



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வாழ்விடமாகவும் கொண்ட திருமதி வாலாம்பிகை யோகராஜா நேற்று முன்தினம் (24.02.2014) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்- நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - இராசம்மா தம்பதியரின் மருமகளும், யோகராஜாவின் அன்பு மனைவியும், வள்ளிநாயகி, காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் மற்றும் நீலாம்பிகை, காலஞ்சென்ற சர்வலோகநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr. பாலராஜன் (அமெரிக்கா), மஞ்சுளா (லண்டன்), கௌசலா தேவி (Ceyline) ஆகியோரின் அன்புத் தாயும், பூங்கோதை (சுமி), குகேந்திரன் வருணா ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிராமி, மதுரா, லக்ஷ்மி, தர்ஷன், கஜோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.02.2014) புதன்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் முற்பகல் 10 மணிதொடக்கம் இரவு 7 மணிவரை அஞ்சலிக்காகவைக்கப்பட்டு, நாளை (27.02.2014) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கௌசலாதேவி (மகள்)
077 741 5279/
011 271 6624

இல.18, இன்ன பொலைன் வீதி,
தெகிவளை.

(சி.12246)(45.6.3)

**Royally Rest (Pvt) LTD**

873, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அரச அனுமதிப்பத்திரத்துடன் கூடிய தொடர்ந்தும் நடைமுறைப் பாவனையிலுள்ள களிரூட்டப்பட்ட (2) குளிர்சாதனப் பெட்டிகளுடன் கூடிய கட்டில், மெத்தை, போர்வைகள், உடுப்பு துவைக்கும் இயந்திரம், தற்காலிக மின்னிணைப்பு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரத்துடனான மேலும் பல பொருள்களுடன் சகல வசதிகளுடன் கூடிய Guest House விற்பனைக்கு உண்டு. (45107) (10.14)

077 476 6147, 021 221 9220

## வாடகைக்கு

யாழ். நகரில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தில் A/C, சுடுநீர் வசதி, சேவ்டி அலாம், கார்பாக் அனைத்து வசதியும் கொண்ட கீழ்மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு : 077 7656918
காலை 7 மணிமுதல் 12 மணி வரை
மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரை
தொடர்பு : 077 0611416

## பெயர் மாற்றம்

மணல் தரை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகஸ்திரநாதன் சுதாகரன் ஆகிய நான் இன்றிலிருந்து (26.02.2014) எனது பெயரை சகஸ்திரநாதன் ரமணாகரன் என பெயர்மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(45050)(2.6.4) சகஸ்திரநாதன் ரமணாகரன்

# மோசமான நிலையில் பிரதான வீதிகள்

## வவுனியாவில் அவலநிலை

வவுனியாவில் உள்ள பல வீதிகள் இன்னமும் மோசமான நிலையில் உள்ளதைக் காண முடிகின்றது. பல வருடங்களாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படாததால் இவற்றில் பயணிக்கும் மக்கள் இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர். பூந்தோட்டம் சந்தியில் இருந்து மகாறம்பைக்குளம் வரையான வீதி, கோவிற்குளம் வீதி யூடாகச் செல்லும் கல்நாட்டிய குளம் வீதி என்பன மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. இந்த வீதிகள் ஊடாகப் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பொது மக்கள் பலரும் பயணிக்கின்றனர். மேலும் விறகு வியாபாரிகள் உட்பட பலரும் சைக்கிளில் சென்று வருவதைக் காண முடிகின் றது. வீதிகள் குன்றும் குழியு மாகக் காணப்படுவதால் இவர்கள் விழுந்து எழும்புவதைக் காணமுடிகின்றது.

கல்நாட்டியகுளம் வீதி ஊடாக கல்நாட்டியகுளம் அ.த.க.பாடசாலை, கோமரசன்குளம் மகாவித்தியாலயம், முருகனூர் சாரதா வித்தியாலயம், சமளங்குளம் அ.த.க.பாடசாலை ஆகிய முக்கிய பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனைப் போன்று மகாறம் பைக்குளம் வீதியூடாக மகாறம்பைக்குளம் அ.த.க. பாடசாலை, சிறிராமபுரம் அ.த.க. பாடசாலை, மதீனா நகர் பாடசாலை போன்றவற்றுக்கும் செல்ல வேண்டியுள்ளது எனவே, இந்த வீதிகளைப் புனரமைத்து வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-421)

# வவுனியாவில் சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, பெப். 26

வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராமங்களுக்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதை அவதானிக்க முடி கின்றது.

குறிப்பாக சிதம்பரபுரம், திருப்பழனி முருகன் மலைப்பகுதி, சமளங்குளம் மலைப்பிள்ளையார் கோயில், கல்நாட்டிய குளம் மலைப் பகுதி ஆகிய இடங் களை சுவிஸ், நோர்வே, கனடா போன்ற நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டுச் செல்லுகின்றனர்.

இவர்கள் இங்குள்ள கிராமங்க ளின் எழில் தம்மைமிகவும் கவர்ந்துள்ளதாகவும் தெரிவித்தனர். (க-421)

## அமைதியின் சொற்கள்

**With all the movement in this world, there is a magnificent stillness inside of you.** (45109) (10.14)

மேலும் அறிந்து கொள்ள:

dvd
இலவசம்


0117 250001

3 P.M - 10 P.M வரை

# மரண அறிவித்தல்

## முருகன் இரத்தினம்

(கவிஞர் முருகு இரத்தினம், ஓய்வுபெற்ற ஆசிரியர், அளிஞ்சியன்குளம் அ.த.க.பாடசாலை, முல்லைத்தீவு)



கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாவி, சுதந்திரபுரம் மற்றும் தென் இந்தியா, திருச்சி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட முருகன் இரத்தினம் 20.02.2014 வியாழக்கிழமை திருச்சியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தப்பு மற்றும் தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திரப்பிரபா அவர்களின் அன்புக் கணவரும், பிரதீபன் (ஜேர்மனி) அவர்களின் அன்புத் தந்தையும், மார்க்கண்டு, யோகசக்தி, காலஞ்சென்ற தங்கத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணசேகரம் (டென்மார்க்), ஞானசேகரம் (டென்மார்க்), மகேஸ்வரன் (டென்மார்க்), சந்திரசேகரம் (டென்மார்க்),குலசேகரம் (டென்மார்க்), காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் பவானி (முகாமைத்துவ உதவியாளர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2014) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக நண்பகல் 12 மணியளவில் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
T.P.077 435 8182

(2.6)(33383)

தகவல்:
பிரதீபன் (மகன் -ஜேர்மனி)

# மரண அறிவித்தல்

## முத்தையா பேரம்பலம்

[முன்னாள் இருபாலை விநாயகர் வெதுப்பக உரிமையாளர்]



இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா பேரம்பலம் நேற்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஞானாம்பிகையின் பாசமிகு கணவரும், சிவபாக்கியம், காலஞ்சென்ற சுந்தரராஜா மற்றும் கமலா, குணபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விஜயகாந்தன் (கொங்கொங்), சிறிகாந்தன் (பிரான்ஸ்), விஜயசிறி (சுங்கா-லண்டன்), சுவர்ணசிறி (யமுனா) ஆகியோரின் அன்புமிகு தந்தையும், சந்திரராணி (கொங்கொங்), நளாயினி (பிரான்ஸ்), விஜயகுமார் (லண்டன்), தர்சன் (பிரதேச செயலகம்-செட்டிக்குளம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமனும், சானியா, நிக்சன், கிசோரி (கொங்கொங்), விக்னன், விதுனன் (பிரான்ஸ்), சுவேதா (கீர்த்து-லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.02.2014) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் முழக்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சுவேத வாச"
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
T.P: 077 935 3189

(45102)(7.6.3)

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாக்கியம் கந்தையா



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கந்தையா நேற்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மயில்வாகனம் கந்தையாவின் (சாவகச்சேரி, வாரிவளநாதர் சிவன் கோயில் முன்னாள் கணக்காளர்) அன்பு மனைவியும், சரஸ்வதி, இராஜபூபதி, காலஞ்சென்ற கமலாவதி மற்றும் கருணாநிதி, பத்மாவதி, திலகவதி, மங்களேஸ்வரி (ஆசிரியை, கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், வித்தியானந்தன், வைத்தீஸ்வரன், ஸ்கந்தபூர்வயா, சங்கநிதி, ரவிராஜ், ஜெயக்குமார் (சாவகச்சேரி தபாலகம்) ஆகியோரின் அன்பு மாமியும், வைத்திலிங்கத்தின் அன்புச் சகோதரியும், கேதீஸ்குமரன் (பாம்கெமி - விற்பனை முகாமையாளர்), காலஞ்சென்ற கிசோக்குமார் மற்றும் மதனகுமார், விநோதன் (பொருளாதார அபிவிருத்தி அலுவலர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), அகிலன் (நியூசிலாந்து), சுகந்தன் (நியூசிலாந்து), ஜன்சன், குமுதினி (பிரான்ஸ்), தக்ஸனா (பொறி யியலாளர், இந்தியா), திலகராஜ் (இந்தியா), ஐங்கரன் (ஸ்ரீ ஜெய வர்த்தனபுர பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன்), குருபரன் (பாம்கெமி - உத்தியோகத்தர்), நிசாயினி (சம்பத் வங்கி, நுவரெலியா), முரளிதரன் (விற்பனைப் பிரதிநிதி - சன்லைட்), கிரிதரன் (மேற் பார்வையாளர், எலிபன்ட் ஹவுஸ்), தர்சனா, தர்சிகன், டோகி, விஜித்தா, சங்கீதா, கிரியா, இராஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டெபோறா, அபிநாத், அபிஷா, அக்ஷிதா, மிதுனன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.02.2014) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் தெற்கு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(2.6.3)(C/7653)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மாணிக்கம் கதிரன்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் கதிரன் நேற்று (25.02.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மூத்ததம்பி கதிரனின் அன்பு மனைவியும், தம்பிராசா, பூமணிஅம்மா (லண்டன்), சிவராசா(றோயல் வைன் ஸ்ரோர்ஸ் யாழ்.), குணசிங்கம், (குணம் கடை தபாற்கட்டைச் சந்தி, அரியாலை), செல்வராணி, சிவஞானம், தேவராசா (பிரான்ஸ்), குபேரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், ராஜேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் (C.T.B) மற்றும் சியாமளா, மாலினி, காலஞ்சென்ற தவராசா (கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச் சபை) மற்றும் சுதாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலரமணி(லண்டன்), பாலகுமார் (கனடா), தவறஜனி (பிரான்ஸ்), தவறாஜினி, ராஜ்குமார்(லண்டன்), றெஜிக்குமார் (பிரான்ஸ்), றஞ்சித்குமார் (பிரான்ஸ்),தவநிதா, தவலக்ஷி,பிரசன்னா (பனை அபிவிருத்திச் சபை), மிதுலா, கோகுலன், நிரோசன் (பிரான்ஸ்), நியூறன் (பிரான்ஸ்), நிலக்ஷன், நிவோஷன், டிலுக்சனா, பிரணவன் (பிரான்ஸ்), கீர்த்திகன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திவ்சனா, சபரிகிறிஸ்ணன், மதுமிதா(லண்டன்), மதுஷன், டிலக்ஷன், தனுசன் (பிரான்ஸ்), நீனா(கனடா),திவிங்சன்,சாருஜன்,கர்சனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.02.2014) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் இல.684, கண்டிவீதி,அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

751, கண்டி றோட்,அரியாலை.

(45106)(5.6)

தகவல்: பிரசன்னா (பேரன்)



முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாததால் அவ் வீதி போக்குவரத்துக்கு உதவாத நிலையில் இவ்வாறு காட்சியளிக்கின்றது. (வ-415)

# தீர்வுக்கு வந்தது

## அதிபர்களுக்கான சம்பளச் சீராக்கம்

அச்சுவேலி,பெப் .26
இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களுக்கு 14 வருடங்களாக சீராக்கம் செய்யப்படாமல் இருந்து வந்த வருடாந்த சம்பள உயர்வு தொடர்பான பிரச்சினைக்கு கல்வி அமைச்சு தீர்வு கண்டுள்ளது.

**சம்பள அதிகரிப்பு சீராக்கம் தொடர்பாக சுற்றறிக்கையை கல்வி அமைச்சு சகல வலயக் கல்வி பணிப்பாளர் களுக்கும் அனுப்பி வைத்துள் ளது. இதன் மூலம் நூற்றுக் கணக்கான அதிபர்கள் சம்பள அதிகரிப்பையும் சம்பள நிலுவையையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.**

சம்பள அதிகரிப்பு சீராக்கம் தொடர்பாக சுற்றறிக் கையை சகல வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. இதன் மூலம் நூற்றுக்கணக்கான அதிபர்கள் சம்பள அதிகரிப்பையும் சம்பள நிலுவையையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.
இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்தவர்களுக்கு வருடாந்த சம்பள உயர்ச்சி 645 ரூபா என்ற அடிப்படையில் மாதாந்தம் வழங்கப்படும். இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்தவர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வு 330 ரூபா. இலங்கை அதிபர் சேவை தரம் 2:II ஐச் சேர்ந்தவர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வு 400 ரூபா என்ற அடிப்படையில் வழங்கப்படும்.
நிதிப்பிரமாணத்தின் அடிப்படையில் ஒரு சேவையில் இருந்து அடுத்த சேவைக்கு பதவி உயர்வு பெறுபவர்கள் பெற்றுக்கொண்ட மாதாந்த சம்பளத்தை அதே நிலையில் தொடர்ந்து பெற்றாலும் வருடாந்த சம்பள உயர்வை குறித்த சேவைக்கு உரிய சம்பளத் திட்டத்தின் பிரகாரமே பெற்றுக் கொள்ள முடியும். இந்த நிபந்தனையின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I இல் இருந்து இலங்கை அதிபர் சேவைதரம் 3 க்கு பதவி உயர்வு பெற்றவர்கள் வருடாந்த சம்பள உயர்வில் மாதாந்தம் 315 ரூபாவையும்; இலங்கை அதிபர் சேவை தரம் 2:II இற்கு பதவி உயர்வு பெற்றவர்கள் வருடாந்த சம்பள உயர்ச்சியில் மாதாந்தம் 245 ரூபாவையும் இழக்க வேண்டி ஏற்பட்டது.
2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி முதற் தடவையாக பதவி உயர்வு வழங்கப்பட்ட காலப் பகுதியில் இருந்து இன்று வரை இந்தக் குறைபாடு இருந்து வந்தது. இதனால் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I இல் இருந்து அதிபர் சேவைக்கு பதவி உயர்வு பெற்றவர்களில் நூற்றுக் கணக்கானோர் பதவி உயர்வை ஏற்றுக்கொள்ளாமல் புறம்தள்ளினர். பதவி உயர்வை ஏற்றுக் கொண்டவர்கள் குறிப்பிடத்தக்களவு வருமான இழப்புடன் மன அழுத்தத்துடன் கடமை புரிந்து வந்தனர்.
இந்த குறைபாட்டை நிவர்த்தி செய்யுமாறு அதிபர் தொழிற் சங்கங்கள் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் வலியுறுத்திய போதிலும் கல்வி அமைச்சு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த 14 வருடங்களாக நில[illegible]விவந்த பிரச்சினைக்குத் தீர்வாக புதிய சுற்றறிக்கையை கல்வி அமைச்சு தற்போது அனுப்பிவைத்துள்ளது. (வ-11)

## திருப்பழனி முருகன் ஆலயத்துக்கு இனி இலகுவாகச் செல்லலாம்


### படிகள் அமைக்கப்படுவதால் இந்த நிலை

வவுனியா . பெப்.26
வவுனியா சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆலயத்துக்குச் செல்லும் மலைப் பகுதிகளில் படிகளை அமைக்கும் முயற்சியில் வவுனியா பிரதேச செயலர் தலைமையிலான உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.
பிரசித்தி பெற்ற இந்த ஆலயத்தை பக்தர்கள் மலையூடாக நடந்து சென்று தரிசிக்க வேண்டிய நிலை உள்ளதால் படிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.
நிலப் பகுதியில் இருந்து மலைப் பகுதியின், அரைவாசித் தூரம் வரை சிமெந்தினால் படிகள் அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதிக்கும் படிகள் அமைக்கப்படவேண்டியுள்ளதால், இது தொடர்பாகஆலயநிர்வாகத்தினர் வவுனியா பிரதேச செயலர் கா. உதயராசாவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.
இதனைத் தொடர்ந்து பிரதேச செயலர் சகிதம் அங்கு சென்ற உத்தியோகத்தர்கள் படிகள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மலையின் கீழ்ப் பகுதியில் இருந்து கல் , மண் ஆகியவற்றை மிகுந்த சிரமத்தின் மத்தியில் இவர்கள் எடுத்துச் சென்று படிகள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இந்த வேலைத்திட்டத்தில் பிரதேச செயலகத்தின் அனைத்துப் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டுள்ளதாகவும்தெரியவருகின்றது. (க-421)

## பொய்ப் பரப்புரைகளை நிராகரிக்க வேண்டும்

### ஜனாதிபதி வேண்டுகோள்

கொழும்பு,பெப்.26
நட்பு நாடுகளுடனான எமது உறவுகளைச் சீர்குலைப்பதற்காக எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் பொய்ப் பரப்புரைகளையும் விமர்சனங்களையும் அந்த நாடுகள் நிராகரிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.
நுரைச்சோலையில் பாலாவி-கற்பிட்டிக்கான வீதியை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு கிழக்கு உட்பட நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் தற்போது சுதந்திரமும் தொழில் செய்வதற்கான சிறந்த சூழலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த காலங்களைப் போலன்றி தற்போது குடும்பத்தோடு நிம்மதியாக எப்பகுதியிலும் எவ ரும் வாழமுடியும்.
எதிர்வரும் காலங்களில் மக்களின் ஆதரவு எமக்குக் கிடைப்பது உறுதி. இன, மத, குல, கட்சி பேதமின்றி அனை வருக்கும் அனைத்து உரிமைகள், சலுகைகளை சமமாக வழங்குவதே அரசின் நோக் கமாகும். அதனைத் தொடர்ந் தும் அரசு முன்னெடுக்கும். அபிவிருத்தியில் நாம் ஒரு போதும் பாரபட்சம் காட்டுவ தில்லை. -என்றார். (ச)




புங்கன் குளம் வீதியின் சில பகுதிகளில் காணப்படும் குழிகள்

## புங்கன்குளம் வீதியில் இலகுவான பயணம் எப்போது?

கொழும்புத்துறை - புங்கன் குளம் வீதி வாகனங்கள் பயணிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்து குன்றும் குழிகளுடன் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
ஈச்சமோட்டைச் சந்திக்கும் கண்டி வீதிக்கும் இடைப்பட்ட வீதியில் மோசமான குழிகள் ஏற்பட்டு போக்குவரத்தில் அபாயம் விளைவிக்கும் நிலையில் காணப்படுகிறது. குறித்த வீதியின் ஒரு பகுதி யாழ். கொழும்புத்துறை பஸ் போக்கு வரத்துப் பாதையாக பயன் படுத்தப்பட்டு வருகின் றது. அத்துடன் இந்த வீதியில் உள்ள வண்ணாங் குளத்தடியில் உள்ள பழைமை வாய்ந்த மதகு உடைந்து விழும் நிலையில் காணப்படுகிறது.
பொதுமக்கள் தமது அன்றாட அவசிய தேவைகளான சந்தை, பாடசாலைகள், ஆலயங்கள் என்பவற்றுக்கு சென்றுவரும் குறித்த வீதியைப் புனரமைப்பு செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

## தந்தையும் மகளும் விபத்தில் காயம்



கோப்புப்படம்

வலி.வடக்கு,பெப் .26
தமது மகளை பாடசாலை பஸ்ஸில் ஏற்றிவிடுவதற்காக மகளுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற தந்தை, நாயுடன் மோதுண்ட தில் இருவரும் காயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.
நேற்று முன்தினம் கீரிமலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.
வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவியான தமது மகளை பஸ்ஸில் ஏற்றி விடுவதற்காக வந்த வேளையில் இந்த விபத்து எதிர்பாராத விதமாக ஏற்பட் டுள்ளது.
விபத்தில் குண்டு மணி உதயராசா (வயது-44) அவரது மகள் உதயராசா அலக்சியா (வயது-15) ஆகிய இருவருமே காயங்களுக்கு உள்ளாகியவர்களாவர். (வ-86)


## மரண அறிவித்தல்



### நவரத்தினம் வரதராஜன்
(யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்)

1ஆம் வட்டாரம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், சிவன் கோயில் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும், தற் போது ஜேர்மனியை வசிப் பிடமாகவும் கொண்ட நவரத்தினம் வரதராஜன் ஜேர்மனியில் கடந்த (23.02. 2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-சிவபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சண்முகதாசன்-சௌபாக்கியம் (அம்மா ரீச்சர்) தம்பதியரின் பெறாமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், மாதங்கியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வரலட்சுமி, அருள்நந்திநாதன் மற்றும் விஜயலட்சுமி, பங்கயசெல்வி, நவநீதகல்யாணி, நவநீதநாதன், சிவசுதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (26.02.2014) புதன்கிழமை ஜேர்மனியில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி வீதி, கோண்டாவில் கிழக்கு.

தகவல் : சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள்.
0212053968


## நூலகங்களுக்கான புத்தகங்கள் அனுப்பிவைப்பு

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சால் வட மாகாண உள்ளூராட்சிச் சபை களின் பொது நூலகங்களுக் கான புத்தகங்கள், சுவரொட்டி கள் மற்றும் இறுவட்டுகள் போன்றவை அந்தந்தப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.
உள்ளூராட்சி சபைகள் தத் தமது நூலகங்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள நூல்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (வ-9)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## விற்பனைக்கு

பாவித்த குளிர் சாதனப் பெட்டி, கணினி, அலுமாரி, கதிரை வாங்கு, மேசை, DVD Player, Orbitrack, 12அடி தகரம் , scooty pep+
தொடர்பு - 17/2, சந்நவ மாதா கோயில் ஒழுங்கை, கண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
T.P: 077 3988633

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தனித்

கைத் தமிழர் விவகாரம் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து அ.தி.மு.கவின் தெளிவான நிலைப்பாட்டை அவர் இந்தத் தேர்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை உள்நாட்டுப் போரின் போது, சர்வதேச விதிமுறைகளை மீறிப் போர்க் குற்றங்கள் நிகழ்த்தியவர்களை- இனப்படுகொலை செய்தவர்களைச் சர்வதேச நீதிமன்றம் முன்நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுக்கவும், இலங்கை வாழ் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழீழம் மலர்ந்திட இலங்கை வாழ் தமிழர்கள் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தவும் அ.தி.மு.க உறுதி பூண்டுள்ளது.

தமிழக மீனவர் நலன்

சட்டவிரோதமாக அப்பாவித் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுவதை நிறுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்தவும், தமிழக மீனவர்களின் நலன் களைக் காக்கும் வகையில், இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கிடையேயான பேச்சுக்களை நடத்துவதற்குரிய சூழ்நிலையை உருவாக் கிக் கொடுக்கவும் தேவை யான நடவடிக்கைகளை அ.தி.மு.க எடுக்கும்.

கச்சதீவு மீட்பு

தமிழக மீனவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், கச்சதீ வைத் திரும்பப் பெறுவதற் கான அனைத்து நடவடிக்கைகளையும் அ.தி.மு.க மேற்கொள் ளும்-என்றுள்ளது. (த-5)

### நவியின்

கொண்ட அறிக்கையின் விவரங்கள் வெளியாகி உள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அவர் வழங்கியுள்ள அறிக்கையின் முக்கியமான பரிந்துரையில், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டதான இலங்கை அரசின் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து, மேற்கொண்டும் புலனாய்வுகளை மேற்கொள்வதற்குச் சர்வதேச விசாரணை பொறி அமைப்பு ஒன்றை நிறுவுமாறு வலியுறுத்தி உள்ளார். இலங்கை அரசு நிறைவேற்றும் வகையில் 12 அம்சங்களைக் கொண்ட இன்னொரு பரிந்துரையும் அதில் அடங்கியுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள பரிந்துரை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பல்வேறு விடயங்களில், யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகை மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றியும், சண்டே லீடர் இணை ஆசிரியர் தாக்கப்பட்டமை குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளர் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

பத்திரிகையாளர்கள் மீதும் ஊடக வெளியீட்டகங்கள் மீதும் நடத்தப்படும் தாக்குதல்கள் 2013ஆம் ஆண்டிலும் தொடர்ந்துள்ளன. தமிழ் நாளிதழான 'உதயன்' மீது பல சமயங்களில் குறிவைக்கப்பட்டுள்ளது. ஜனவரி 10 ஆம் திகதி இரண்டு விநியோகத்தர்கள் தாக்கப்பட்டுள்ளனர். பத்திரிகை பிரதிகள் எரிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 13 ஆம் திகதி ஆயுதம் தரித்த நபர்கள் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் அதன் பணிமனையில் உள்ள பிரதான அச்சு இயந்திரங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

"சண்டே லீடர்"
ஊடகவியலாளர்
மீதான தாக்குதல்

ஒகஸ்ட் 24 ஆம் திகதி 'சண்டே லீடர்' பத்திரிகையின் இணை ஆசிரியர் அவரது வீட்டில் வைத்து முகமூடி தாரிகளால் தாக்கப்பட்டுள்ளார். பின்னர் அவரது வீடு உடைக்கப்பட்டுச் செப்ரெம்பர் 8 ஆம் திகதி அவருடைய கணினி திருடப்பட்டுள்ளது.

பொறுப்புக் கூறல் மற்றும் நம்பகமான விசாரணைகளை மேற்கொள்வதில் அரசு தவறிவிட்டமை குறித்து குறிப்பிட்டுள்ள ஆணையாளர் பல தடவைகளில் ஆணையாளராலும் மனித உரிமை நிறுவனங்களினாலும் மனித உரிமை ஆணைக்குழுவின் கவனம் இந்த விடயத்தில் திருப்பப்பட்டதுண்டு. இவைகளில் பலவும் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல குறித்தும் முன்னைய விசாரணைக் குழுக் களில் ஆராயப்பட்டுள்ளன. மேலும் இது விடயத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று நிபுணர் குழுவும் பரிந்துரைத் திருந்தது. பல விடயங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக இலங்கை அரசு, மனித உரிமைகள் ஆணைக்கு முவுக்கு மீண்டும் மீண்டும் அறிவித்திருந்தது. எதுவானாலும் இந்தச் சம்பவங்களுக்கு பொறுப்பானவர்கள் எவரும் நீதியின் முன் நிறுத்தப்பட்டதாகக் காணப்படவில்லை.

இவை அங்கு - அரசினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஒரு சிறு உதாரணங்கள் மட்டுமே. இவைகள் மேலும் ஆராயப்பட்டு தீர்க்கப்படவேண்டும் - என்று தெரிவித்துள்ளார். (அ-ப)

### நாட்டை

காலக் கசப்புணர்வுகளை மறக்குமாறும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் மாவட்ட செயலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஒருவருக்கு அவருடைய தாய் மொழியில் கருத்துச் சொல்லும்போதே அந்தக் கருத்து அவரை முழுமையாகச் சென்றடையும். நான் உங்கள் தாய் மொழியில் பேசமுடியாமைக்கு வருந்துகின்றேன். இந்த மொழிப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டே கடந்த காலத்தில் பல்வேறு பிணக்குகள் தோன்றின.

இந்த அடிப்படைக் காரணி கண்டறியப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகவே, ஜனாதிபதியால் மொழிக்கொள்கை தொடர்பிலான தனியான அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது. கடந்தகாலக் கசப்பான வரலாறுகள் தவறுகள் காரணமாக ஏற்பட்டன. பின்னோக்கிப் பார்த்து ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டுவதை விட எதிர்காலத்தில் ஒற்றுமையாக இருப்பது தொடர்பில் பார்க்கவேண்டும்.

நாம் பகைமை பாராட்டிக் கொண்டிருந்தால், வெளிநாடுகளினால் எங்களுக்கு அச்சுறுத்தல்கள் வந்து கொண்டேயிருக்கும். சர்வதேச சமூகம் - மேற்கு நாடுகள் மனித உரிமைகள் என்ற கோஷத்தை முன்வைத்துக் கொண்டு இலங்கையினுள் மீண்டும் பிளவை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன.

தமிழ் - சிங்கள முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருந்தால் எந்த வெளிநாட்டுச் சக்திகளும் தலையிடமுடியாது. நாங்கள் எங்களுக்குள்ளேயே எங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

நாங்கள் இன்று வழங்கும் நட்டஈடு உங்கள் இழப்புகளுக்கு ஈடாகாது. அது எங்களுக்கும் தெரியும். இந்த நட்டஈடு உங்கள் இழப்பை நியாயப் படுத்தும் விடயமல்ல. உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே இவை வழங்கப்படுகின்றன- என்றார்.

இதேவேளை இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமகன் ஒருவர், வடக்கு மாகாண சபை முதலமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நிகழ்வுக்கு ஏன் அழைக்கவில்லை என்று பகிரங்கமாகக் கேள்வியெழுப்பினார்.

போரினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த, காயமடைந்த, சொத்துச் சேதமடைந்த அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் புனர்வாழ்வு அதிகார சபையினால் நட்டஈடு வழங்கப்பட்டது. வடக்கு மாகாணத்துக்கு 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 20 மில்லியன் ரூபா 285 பேருக்குப் பகிர்ந்து நட்டஈடாக வழங்கப்பட்டது. உயிரிழப்புக்கு ஆகக் கூடியது ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் பேசுவதற்காக அழைக்கப்பட்டார். அப்போது பொதுமகன் ஒருவர் எழுந்து, வடக்கு மாகாண சபை முதலமைச்சர், உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏன் இந்த நிகழ்வுக்கு அழைக்கவில்லை என்று பகிரங்கமாகக் கேட்டார்.

ஆனால் இதற்குப் பதில் வழங்கப்படவில்லை. அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உரையாற்றினார். இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் வித்தானகே மற்றும் புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் சமரசிங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (த-5)

### ஏற்கவே

டும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள பரிந்துரையையே இலங்கை அரசு அடியோடு நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரகம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது அறிக்கை பக்கச் சார்பானதாகவும், இறைமையுள்ள ஒரு நாட்டின் அரசின் உள் விவகாரங்களில் தேவையின்றித் தலையீடு செய்வதாகவும் அமைந்துள்ளது என்று ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கையானது முன்கூட்டிய தீர்ப்பை வழங்கக் கூடிய வகையிலும், திட்டமிட்ட வகையில் இலங்கைக்கு எதிராகவும் அமைந்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-5)

### சர்வதேச

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அமர்வில் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்க உள்ள இலங்கை குறித்த அறிக்கை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியானது.

இந்த அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

உள்ளக விசாரணைகளை கண்காணிக்கவும், சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைக்கவும் வேண்டுமென்ற நவநீதம்பிள்ளையின் கருத்து நியாயமானதே எனக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதித்தல் தொடர்பில் அரசு தொடர்ந்தும் தயக்கம் காட்டி வருகின்றமையினால், சர்வதேச விசாரணைப் பொறிமுறை அவசியமானது எனக் கூட்டமைப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கச் சர்வதேச விசாரணைகளை அரசு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கூட்டமைப்பு மேலும் கூறியுள்ளது. (த-5)

### குர்ஷித்துடன்

ஜெனிவாவுக்குச் செல்வதற்கு முன்னர், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தைச் சந்தித்துப் பேசவுள்ளார். வங்காள விரிகுடா நாடுகளின் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்புத் தொடர்பாக மியன்மாரில் அடுத்த மாதம் முதலாம் திகதி நடக்கவுள்ள கூட்டத்தில், இலங்கை மற்றும் இந்திய வெளி விவகார அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போதே, இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை மீண்டும் ஒரு முறை தனியாகச் சந்தித்துப் பேச இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் திட்டமிட்டுள்ளார். கடந்த வாரம் மாலைதீவில் நடந்த சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தின் போதும் சல்மான் குர்ஷித்துடன் பீரிஸ் தனியாகச் சந்தித்துப் பேசியிருந்தார்.

மியன்மாரில் முதலாம் திகதி சல்மான் குர்ஷித்தைச் சந்தித்துப் பேசிய பின்னரே, வெளி விவகார அமைச்சர் பீரிஸ் அங்கிருந்து ஜெனிவா செல்லவுள்ளார்.

ஜெனிவாவில் மார்ச் 3 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இதில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் 5 ஆம் திகதி உரையாற்றவுள்ளார்.

அதன் பின்னர், எதிர்வரும் 9 ஆம் திகதி லண்டனுக்குச் செல்லவுள்ளதாகவும், அங்கு கொமன்வெல்த் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தில் தாம் பங்கேற்கவுள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (த-5)

### நவநீதம்பிள்ளை

கக்கேடான செயல் என்று சாடியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, நவநீதம்பிள்ளையின் அறிக்கையின் பிரகாரம் சர்வதேச சமூகம் செயற்படவேண்டும் என்று கோரியுள்ளது.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை, மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணைக்கு இனியும் காத்திருக்க முடியாது என்ற மற்றொரு அவசரமானதும், கசப்பானதுமான நினைவூட்டல் ஆகும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிரதிப் பணிப்பாளர் பொலி ட்ரஸ்கொட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத் தூவி, மனித உரிமை மீறல்களுக்கு நியாயமான பொறுப்புக்கூறல் முயற்சிகளைத் தடுப்பதற்காக இலங்கை எல்லாவற்றையும் செய்தது. இந்த அறிக்கை ஒரு கண் திறப்பதாக இருக்கும் என்பதுடன், அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சர்வதேச விசாரணை கோரும் ஒரு வலுவான தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

நவநீதம்பிள்ளையின் கண்டறிவுகள் எமது கருத்தை எதிரொலிக்கின்றன. நாம் இன்னும் புதிய, நேரில் கண்ட சாட்சிகள், அரச படைகள் மற்றும் விடுதலை புலிகளின் பயங்கரமான மீறல்கள் குறித்த ஏனைய குற்றச்சாட்டுக்களையும் பெற்று வருகிறோம் என்றும் பொலி ட்ரஸ்கொட் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

### கோபிராஜின்

றேன். சிறைச்சாலை அதிகாரிகளின் பேச்சின் மூலம் எனது மகன் உயிரிழந்துள்ளதாக அறிந்துகொண்டேன். சுகயீனத்துக்கு மருந்தைக் கொண்டு போய்க் கொடுத்தாலும் அதிகாரிகள் அதனை எனது மகனிடம் வழங்க மாட்டார்கள். அவ்வாறான ஓர் அரசே இந்த நாட்டில் உள்ளது - என்றார்.

இவரை விடுவிக்க தூதரகம் ஊடாக 7 வருடமாக முயற்சி செய்தேன். எனினும் இன்று எனது கணவரை இவர்கள் கொலை செய்துள்ளனர், என்றார் கோபிதாஸின் மனைவி.

தமது நாட்டுப் பிரஜை ஒருவரின் மரணம் தொடர்பில் தமக்குப் பதிவாகியுள்ளதாகவும், அது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பிரிட்டன் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

கோபிராஜ் மாரடைப்பினாலேயே உயிரிழந்துள்ளதாகவும், அவரது உடலில் எந்த அடிகாயங்களும் இல்லை என்றும் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் தம்மிடம் தெரிவித்தாக உறவினர்கள் தெரிவித்தனர்

மகஸின் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை மலசலகூடத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட கோபிராஜின், உடற் கூற்றுப் பரிசோதனைகள் நேற்று மாலை இடம்பெற்றன. இதன் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

பிரிட்டன் பிரஜையான விஸ்வலிங்கம் கோபிராஜ் (வயது 42) 2007 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பிரிட்டனில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சாட்டிக் கைது செய்யப்பட்ட அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 2011 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் படுகாயமடைந்த கோபிராஜ், அதன் பின்னர் மகஸின் சிறைச்சாலைக்கு இடமாற்றப் பட்டிருந்தார். மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்திருந்தார்.

அவரது உடலைப் பிரிட்டனுக்குக் கொண்டு செல்வதற்கு உறவினர்களால் முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை பிரிட்டனிலிருந்து அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதனால் கோபிராஜின் சொந்த ஊரான வடமராட்சிக்கு இன்று சடலம் எடுத்து வரப்படுகின்றது. எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இறுதிக் கிரியைகள் இடம்பெறவுள்ளதுடன், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சடலம் புதைக்கப்படவுள்ளது.

இதேவேளை, மகஸின் சிறையில் உயிரிழந்த கோபிராஜ் மாரடைப்பினாலேயே உயிரிழந்துள்ளதாகவும், அவரது உடலில் எந்த அடிகாயங்களும் இல்லை என்றும் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் தம்மிடம் தெரிவித்தாக உறவினர்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தனர்.

மகஸின் சிறைச்சாலையின் 'சி' தளத்தின் மேல்மாடியிலுள்ள மலசல கூடத்திலிருந்தே கோபிராஜ் மர்மான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை மகஸின் சிறைச்சாலையினுள் தமிழ் அரசியல் கைதிகள் மீது சிறைக்காவலர்களாலும், சிங்களக் கைதிகளாலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் திருகோணமலையைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதி ஒருவரும் காயமடைந்திருந்தார்.

இந்த நிலையில் கோபிராஜ் சடலமாக மீட்கப்பட்டமை சந்தேகங்களை உருவாக்கியிருந்தது.


நேற்று மாலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கோபிராஜின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் இடம்பெற்றன. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கைகள் மார்ச் மாதம் 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர், இதயத்துக்குச் செல்லும் நரம்பு வெடித்ததாலேயே உயிரிழப்பு சம்பவித்ததாகத் தெரிவித்ததாக கோபிராஜின் உறவினர்கள் தெரிவித்தனர். (த-5)

# வீரர்களின் போர் இன்று ஆரம்பம்



தெல்லிப்பழை மகாஜனா அணி



சுன்னாகம் ஸ்கந்தா அணி

வலி.வடக்கு,பெப்.26

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே 14 ஆவது ஆண்டாக நடைபெறும் இரண்டு நாள் துடுப்பாட்டப் போட்டி இன்று புதன்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இரு அணிகளும் இந்த ஆண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளன.

குறிப்பாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியில் சதம் அடித்த வீரர்கள், அரைச் சதங்கள் பெற்ற வீரர்கள், வேகப்பந்து வீச்சாளர்கள், சுழல் பந்து வீச்சாளர்கள் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இந்த அணி அனுபவம் மிக்க ஜே.ஜனந்தனை அணித் தலைவராகவும், ரி.சாரங்கனை துணைத் தலைவராகவும் கொண்டு களம் இறங்கு கிறது.

அணியில் பலம் சேர்க்கும் ஏனைய வீரர்களாக ரி.டிலோசன்,ஜே.மயூரதன்.எஸ்.கஜந்தன் பி.ரிசோத்,எஸ். பிரசாந், எ.நவராஜன்,எம்.பவன்,வி. நிஷாந்தன்.இரட்ணகுமார், எஸ்.கபிலன், கே.பிரணவன், கே.சிந்துஜன், எஸ்.ஜெயராஜ், எஸ்.நிவாஸ், எஸ்.டினேஸ் ஆகியோர் காணப்படுகின்றார்கள்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் அரைச்சதம் அடித்த வீரர்கள் உட்பட வேகப்பந்து வீச்சாளர்கள்.சுழல் பந்து வீச்சாளர்கள்,சகலதுறை வீரர்கள் ஆகியோரைக் கொண்ட அணியாகக் காணப்படுகின்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஜே.ஜனக்சனை அணித் தலைவராகவும் பி.சுஜிதரனை துணைத் தலைவராகவும் கொண்டுள்ளது.

அணி யில் பலம் சேர்க்கும் வீரர்களாக க.தூவரகன், கே.கதியோன்,கே.சயந்தன், பா.பாலபிரசாத், ரி.சரத்குமார், வி.மிதுசாந்,எம்.மதுசன் ,கே.பிரசாத், யூ.ஜெயபிரதாப்,எ.றொசான், ரி.நிறோஜன், வி.டிசோத், கே.ரசிகரன் ஆகியோர் காணப்படுகின்றார்கள்.

இதுவரை இடம்பெற்ற 13 போட்டிகளில் இரு அணிகளும் தலா மூன்று போட்டிகளை வெற்றி பெற்றுள்ளதுடன் ஏழு போட்டிகளைச் சமப்படுத்தியுள்ளார்கள். ஆனாலும் கடந்த ஆண்டு மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது. .(த-86)

## சம்பியனானது ஞானம்ஸ்

யாழ்ப்பாணம், பெப்.26

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான கரம் போட்டியில் ஞானம்ஸ் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

இறுதியாட்டத்தில் ஞானம்ஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து வளர்மதி இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் ஞானம்ஸ் இளைஞர் கழக அணி வீரன் பிரக்ாஷ், வளர்மதி இளைஞர் கழக அணி வீரன் வசந்தகுமாரை 16:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டார்.

இரட்டையர் ஆட்டத்தில் ஞானம்ஸ் இளைஞர் கழக அணி வீரர்கள் அபாரமாக ஆடி 11:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

— — — — —

தொடர்ந்து இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் ஞானம்ஸ் இளைஞர் கழக அணி வீரர்கள் அபாரமாக ஆடி 11:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

இதன் அடிப்படையில் ஞானம்ஸ் இளைஞர் கழக அணி 2:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (த-23)

## போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள்



சைக்கிளோட்டத்தில் வென்ற மாணவிகள்



வீதியோட்டத்தில் வென்ற மாணவர்கள்

காரைநகர் பெப். 26

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஓர் அங்கமாக வீதியோட்டம் மற்றும் பெண்களுக்கான சைக்கிளோட்ட நிகழ்வு என்பன இடம் பெற்றன.

வீதியோட்டப் போட்டியைப் பாடசாலையின் பகுதித் தலைவர் தெ.லிங்கேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

வீதியோட்டப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

முதலாமிடம் செல்வன் சி.கோகுலன் (தரம் 11 தியாகராசா இல்லம்), இரண்டாம் இடம் செல்வன் அ.அஜந்தன் (தரம் 11- சயம்பு இல்லம்), மூன்றாம் இடம் செல்வன் பா.பிரசாந்தன் (தரம் 11 -தியாகராசா இல் லம்), நான்காம் இடம் செல்வன் கோ.அஜித்குமார் (தரம் 11 -நடராசா இல்லம் ) ஐந்தாம் இடம் செல்வன் பே.அலக்சன் (தரம் 10 -சயம்பு இல்லம்)

பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகளின் விவரம் வருமாறு:

முதலாமிடம் செல்வி நா.விஜயகுமாரி (தரம் 11 பாரதி இல்லம்) இரண்டாம் இடம் செல்வி லோ.ஜோதிகா (தரம் 10 நடராசா இல்லம்) மூன்றாம் இடம் செல்வி செ.தேனுஜா (தரம் 11 பாரதி இல்லம்).

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப் .26

யாழ்.மாவட்டக் கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டச் .சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வரு கின்றன.




இதில் இன்று புதன்கிழமை மூன்றாமிடத்துக்கான ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பட்டபிளை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான போட்டியில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.26

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் லீக் அணிகளுக்கு இடையே நடத்தப்படும் சீனியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்களில் இன்று புதன்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து குருநாகல் உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (த-23)



யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் உற்சாகத்துடன் பங்கு கொள்ளும் வீரர்கள். (த-20)

## நல்லூர்க் கோட்ட தடகளப் போட்டி



யாழ்ப்பாணம், பெப்.26

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டி எதிர் வரும் மார்ச் மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை யாழ்.கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டி 5ஆம், 6ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)

# கிண்ணம் வெல்லுமா இலங்கை?



இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 5 நாடுகளின் கிரிக்கெட் அணிகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் பங்களாதேஷில் ஆரம்பமாகியுள்ள நிலையில், இலங்கை அணி கிண்ணத்தைக் கைப்பற்றுமா என்ற ஆர்வம் ரசிகர்களிடையே உருவாகியுள்ளது.

ஆசியக் கிண்ணத்தில் அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான இலங்கை அணி ஏற்க னவே பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒரு நாள் தொடர், டெஸ்ட் தொடரை கைப்பற்றியுள்ளதுடன் சந்திமல் தலைமையில் 20/20 தொட ரையும் கைப்பற்றிய நிலையில் உள்ளது.

மூன்று தொடர்களையும் வென்ற உற்சாகத் துடன் இலங்கை அணி உள்ளதால் கிண்ணத்தை கைப்பற்றும் முனைப்புடன் போட்டியிடும். இதே வேளை எதிரணிகளுக்குச் சவால் அளிக்கும் வகையில் இலங்கை அணி அனைத்து வியூகங்களை அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்றைய 4 அணிகளுடன் தலா ஒரு முறை மோதுகின்றன. இந்தச் சுற்றின் முடிவில், புள்ளிப் பட்டியலில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் மார்ச் 8ஆம் திகதி இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

ஆசியக் கிண்ணத்தை இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் முறையே 5,4,2 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளன. இந்நிலையில் இலங்கை அணியில் சிரேஷ்ட வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த் தன மற்றும் டில்சான் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளதால் அணியின் பலம் நன்றாக அமையும்.

# குளிர்கால ஒலிம்பிக் முதலிடத்தில் ரஷ்யா



ரஷ்யாவின் சோச்சி நகரில் கடந்த 7 ஆம் திகதி தொடங்கிய குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நிறைவடைந்தன.

சுமார் 50 பில்லியன் யூரோக்கள் செலவில் வெகு பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து 16 நாள்கள் நடைபெற்றன.

2900 வீரர்-வீராங்கனைகள் போட்டியிட்டனர். இந்த போட்டிகளை நடத்திய ரஷ்யா அதிக பதக்கங்களை வென்று பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளது. 13 தங்கம், 11 வெள்ளி, 9 வெண் கலம் என மொத்தம் 33 பதக்கங்களை ரஷ்ய வீர, வீராங்கனைகள் கைப்பற்றியுள்ளனர்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் களமிறங்கிய அமெரிக்க விளையாட்டு வீர-வீராங்கனைகள் பெரிதாகச் சோபிக்க முடியாமல் நோர்வே மற்றும் கனடாவுக்கு அடுத்து மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது.

11 தங்கம், 5 வெள்ளி, 10 வெண்கலம் என 26 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடத்தை நோர்வே தக்கவைத்து கொண்டது.

10 தங்கம், 10 வெள்ளி, 5 வெண்கலம் என 25 பதக்கங்களை பெற்ற கனடா மூன்றாவது இடத்தைபெற, அதற்கு அடுத்த நான்காவது இடத்தை 9 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலம் என 28 பதக்கங்களை வென்ற அமெரிக்கா பிடித்துள்ளது. இதற்கு அடுத்த நிலைகளில் 8 தங்கம், 7 வெள்ளி, 9 வெண்கலம் என 24 பதக்கங்களை பெற்ற நெதர்லாந்தும், 8 தங்கம், 6 வெள்ளி, 5 வெண் கலம் என 19 பதக்கங்களை வென்ற ஜேர்மனி யும், 6 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் என 11 பதக்கங்களைக் கைப்பற்றிய சுவிட்சர்லாந் தும் உள்ளன.

## தொடர்ச்சி...

### வடக்கு

நீங்கள் எமக்கு வாக்களிக்கவில்லை. ஆகவே உங்கள் மாகாண சபையை நடத்த விடமாட்டோம் என்பதுபோல், சட்டம் எமக்குத் தந்த உரித்துக்களையும் தராது எம்மை மத்திய அரசு முடக்கி வருகின்றது. இவ்வாறு முடக்குவது ஜனநாயகத்துக்குப் புறம்பான செயல். அத்துடன் எமக்குத் தரப்பட்ட 'காப்பெற்' தெருக்களும் மற்றைய கட்டமைப்புக்களும், வெளிநாடுகளும், வெளிநாட்டு நிறுவனங்களும் எமக்குத் தந்துதவிய கொடையே அன்றி அரசு தானாக எதையும் எங்களுக்குச் செலவு செய்யவில்லை' என்று மத்திய அரசைக் கடுமையாகச் சாடினார் முதலமைச்சர்.

மாந்தை கிழக்குப் பிரதேச சபை நட்டாங்கண்டல் பொதுச் சந்தையின் திறப்பு விழா நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச் சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உங்கள் இயற்கையான விவசாய பூமியில் நவீன வசதிகள் கிடைக்கப் பெற்றாலும், இயற்கை வாழ்விலிருந்து விடுபடாது அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் மேம்பட்ட வாழ்க்கை மேலும் மேம்படும்.

இன்று எங்கள் பாரம்பரியங்கள் மறக்கப்படுகின்றன. உதாசீனப் படுத்தப்படுகின்றன. புதிய வாழ்க்கை முறைகள் உட்புகுத்தப்பட்டு வருகின்றன. உழைத்துப் பணம் பெற வேண்டும் என்ற எண்ணமே எங்களை விட்டு ஓடிப் போய் விட்டது. அதற்குப் பதிலாக உழைக்காமல் எவ்வாறு பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் மேலோங்கி வருகின்றது.

#### சுமைகளை சுமக்க வேண்டும்

இது துரதிர்ஷ்டவசமானது. உழைப்பது சுமையுடையது தான். ஆனால் அந்தச் சுமையைச் சுமப்பதில்தான் எமது உழைப்பின் மதிப்பும், மரியாதையும், மகிழ்வும் தங்கி இருக்கின்றது. ஆனால் சுமைகளைக் குறைக்கப் பார்ப்பதில் பிழையேதும் இல்லை.

நகர மக்கள் நாகரிகம் உடையவர்களாகவும், கிராம மக்கள் நாகரிகத்தில் குறைந்தவர்களாகவும் கருதுகின்ற ஒரு எண்ணம் இன்றும் நம்மிடையே இருந்து வருகின்றது. இது மேல்வாரியாகப் பார்ப்பதால் வரும்தவறானஎண்ணம்.

#### இடர்களை எதிர்கொண்டுள்ளீர்கள்

ஏனென்றால் உண்பதற்கு உணவு கிராமத்திலிருந்து தான் வருகின்றது. நகரத்து மக்கள் நடப்பாக நடந்து கொண்டாலும், நாகரிகமானது நகரத்தில் தான் இருக்கின்றது என்று நாங்கள் எண்ணினாலும் அவர்களுக்கு உணவுக்கு வாய்ப்பில்லை என்றால் நகர மக்களால் வாழ முடியாது. ஆகவே தான் உழவர் பெருமக்களா கிய நீங்கள் பெருமைப்படவேண்டும்.

நீங்கள் பல இடர்களுக்குள் இன்னலப்படுவதை அவதானித்தே முடியுமான வரை நாங்கள் உங்களுக்கு உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளோம். முக்கியமாக இவ் வருடம் மழை பெய்யாததால் ஏற்பட்டிருக்கும் இடர் நிலைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

#### மத்தியில் குவிந்துள்ள அதிகாரம்

சென்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் உங்கள் மத்தியில் இருந்து எவருமே தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற ஒரு ஆதங்கம் உங்களிடத்தில் இருந்து வருவதை நான் அறிவேன். ஆனால் எனது செயலாளர் திருவாகரன் இங்கு முன்னர் கடமை புரிந்துள்ளார். அவர் ஊடாக நீங்கள் யாவரும் உங்கள் குறைகளை எனக்குத் தெரியப்படுத்தலாம். நாங்கள் எம்மால் ஆனவற்றைச் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கையின் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பானது மத்தியில் அதிகாரத்தைச் செறிவாக வைத்திருப்பதால் உள்ளூராட்சிச் சபைகள் போதிய அரசியல் அதிகாரத்தைக் கொண்டிருப்பதில்லை. உள்ளூராட்சிச் சபைகள் அந்தந் தப் பிரதேசங்களின் வரி அறவீடுகள் மூலமாகத்தான் குறுகிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

#### எதேச்சாதிகாரமே உருவெடுக்கும்

உங்கள் உள்ளூராட்சிச் சபைகளில் பெண்களின் பங்களிப்பு குறைவாகவே இருப்பதாக அறிகின்றேன். இன்றைய கால கட்டத்தில் பெண்களைக் குடும்பத் தலைவிகளாகக் கொண்ட குடும்பங்கள் பல இருக்கின்றன. எனவே உளளூராட்சிச் சபைகளில் பெண்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகத் தேவைப் படுகின்றது.

நாங்களாக நினைத்து எது சரியோ, எது முறையோ அதைச் செய்வது தான் ஜனநாயகம். அதாவது மக்களுக்கு, நாம் நாயகர்களாக வரும் விதத்தில் ஆட்சி பரிணாமம் பெறுவதே ஜனநாயகம். எமது மக்களின் ஆசைகளையும், அபிலாசைகளையும் நாம் பூர்த்தி செய்ய முன்வரவேண்டும். அதை விட்டு எமக்கு நலன்களைப் பிரத்தியேகமாகப் பெறும் பொருட்டு மக்களை அடக்கி ஆள முற்பட்டால் அங்கு எதேச் சாதிகாரமே உருவெடுக்கும்.

#### எங்களை முடக்குகின்றனர்

இலங்கையில் மத்திய அரசு இருக்கும் அதே நேரம் மாகாண சபைகளுக்கும், உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்திருக்கின்றது சட்டம். அவ்வாறு பகிர்ந்துகொடுத்துள்ள அளவுப் பிரமாணம் எமக்குப் போதுமானதாக இல்லாதிருப்பினும் சட்டம் எமக்குத் தந்துள்ளதைக் கூடப் பறித்தெடுக்க அல்லது தராது பறிக்க அரசு முயன்று வருகின்றது.

எனவே மேலிருந்து எம்மை முடக்கப் பார்க்காமல் கீழிருந்து எம்மை நாமே ஆண்டு வருவதை மேலிருந்து பார்த்து மகிழ்வடையும் ஒரு அரசியல் சித்தாந்தமே ஜனநாயகம் என்பதை நாம் எல்லோரும் மறந்து விடக் கூடாது.

அதிகாரங்களை நாங்கள் மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளோம் என்ற எண்ணத்துடன் எமது கடமைகளை ஆற்றுவதே இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது.

மாகாணசபை உள்ளூ ராட்சிச் சபைகளின் உறவுகளும், அரசு - மாகாணசபை ஆகியவற்றின் உறவுகளும் சுமுகமாக இருந்தால்தான் மக்கள் பயனடைவார்கள். சுபீட்சம் பெறுவார்கள். அதற்காக மூன்று கட்ட ஆட்சிமுறைகளும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துத் தத்தமது ஆட்சிகளைச் சிறப்புடன் ஆற்ற முன்வர வேண்டும் - என்றார். (த-5)

### ஐரோப்பாவில்

டுள்ள் வழக்கு நாளை புதன் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. எனவே அன்றைய தினம் தமிழ் உணர்வாளர்களை நீதிமன்றம் முன்பாகத் திரளுமாறு நீதிக்கான நடைபயணக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

தமிழர்களுடைய தேசிய விடுதலை இயக்கமாகத் திகழ்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி லக்ஸம்போர்க்கில் அமைந்துள்ள ஐரோப்பாவினுடைய உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நாளை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

எனவே நாளை காலை 8 மணிக்கு முன்பாக அனைத்துத் தமிழ் மக்களும் ஐரோப்பாவினுடைய உயர்நீதிமன்றத்தின் முன் சமுகமளித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுடைய ஏகப் பிரதிநிதிகள் மட்டுமன்றித் தமிழினத்தின் நீதிக்காகப் போராடிய விடுதலை இயக்கமுமாகும் என்று கூற வேண்டியது புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரதும் வரலாற் றுக் கடமையாகவும் காலத்தின் கட்டாயமாகவும் திகழ்கின்றது.

இதேவேளை நீதிக்கான நடைபயணத்தை முன்னெடுக்கும் எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள ஐந்து அம்சக் கோரிக்கையில் ஐந்தாவது கோரிக்கையாக, மூன்று தசாப்த காலமாக எமது மக்களையும் எமது மரபுவழித் தாயகத்தையும் பாதுகாத்து, அனைத்துலகச் சட்டங்களை மதித்து, நடைமுறை அரசை நிறுவிய எமது விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் மட்டுமே தொடர்ந்தும் எமது மக்களையும் எமது நிலத்தையும் பாதுகாக்க முடியும். ஆகவே இவ் வமைப்பை எமது விடுதலை இயக்கமாக அனைத்துலக சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

எனவே இவற்றுக்கு வலுச் சேர்க்கும் வகையில் நாளை தமிழ் மக்கள் திரள வேண் டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-5)

# முதல் வெற்றியைப் பதிவு செய்தது இலங்கை அணி

பாகிஸ்தானுக்கு எதிரான ஆசிய கிண்ண லீக் போட்டியில் திரிமன்னே சதம் அடித்த போதும் இலங்கை அணி 12 ஓட்டங்களால் போராடி வெற்றி பெற்றது.

12ஆவது ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் நடக்கிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 5 நாடுகள் பங்கேற்கின்றன. இதில் நேற்று நடந்த முதல் லீக் போட்டியில் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதின.



நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. இலங்கை அணியில் அறிமுக வீரராக சதுரங்க டி சில்வா இடம் பெற்றார். இலங்கை அணிக்கு பெரேரா (14) ஏமாற்றினார். ஆனாலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய திரிமான்னே ஒரு நாள் அரங்கில் தனது2 ஆவதுசதம் அடித்தார். இவர் 102 ஓட்டங்கள் எடுத்தபோது, அஜ்மல் பந்தில் போல்டானார். சங்ககார 67ஓட்டங்கள் எடுத்து அணிக்கு வலுசேர்த்தார். அப்ரிடி சுழலில் ஜெயவர்தன (13), திஸர பெரேரா (6) ஆட்டமிழந்தனர்.

சதுரங்க டி சில்வா (2) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினார். கடைசி நேரத்தில் அதிரடியாகஓட்டங்கள் சேர்த்த அணித் தலைவர் மத்தியூஸ், ஒருநாள் அரங்கில் தனது 18 ஆவது அரைசதத்தை பூர்த்தி செய்தார். இவர்களின் துணையுடன் இலங்கை அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 296 ஓட்டங்கள் எடுத்தது. இதன்மூலம் பாகிஸ்தான் அணிக்கு 297 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. மத்யூஸ் 55ஓட்டங்களுடனும், சண்டிமால் 19ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந் தனர். பந்து வீச்சில் உமர் குல், சயீட் அவ்ரிடி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் சயிட் அஜ்மல்ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இதனை அடுத்து 297 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு களமிறங்கிய பாகிஸ்தான் ஆரம் பத்தில் இலங்கையின் துல்லியமான பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது. 12.3 பந்துப்பரிமாற்றங்களில் 83 ஓட்டங்களுக்கு 3இலக்குகளை இழந்து தடுமாறிய பாகிஸ் தான் அணிக்கு அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் உமர் அஜ்மல் இணை பொறுப்புடன் விளையாடி அணியை சரிவில் இருந்து மீட்டனர். இருவரும் 121 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். மிஸ்பா உல் கக் 73 ஓட்டங்களுடனும் உமர் அஜ்மல் 74 ஓட்டங் களுடனும் ஆட்டமிழந்து வெளியேற பாகிஸ் தானின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இறுதியில் 48.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்கு களையும் இழந்து 284 ஓட்டங்களைப் பெற்று 12 ஓட்டங்களால் பரிதாபகரமாக தோல்வியைத் தழுவியது. இலங்கையின் பந்து வீச்சில் மலிங்க 5 இலக்குகளையும் லக்மல் 2 இலக்குகளையும் சேனாநாயக்க டி சில்வா, மத்தியூஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப் பற்றனர். இப் போட்டியின் ஆட்ட நாயகனாக மலிங்க தெரிவு செய்யப்பட்டார். இதே வேளை இன்று நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் இந்திய பங்களாதேஷ் ஆகிய அணிகள் மோதவுள்ளன. (400)



திரிமன்னே

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவன மான திசைகாட்டியின்

## துன்னாலைப் பிரதேச இலவச அறநெறிப் பாடசாலை

### ஆரம்ப விழா அழைப்பிதழ்

பிரதம விருந்தினர் :
உயர்திரு அன்னலிங்கம் பிரேம்சங்கர் அவர்கள்
(மேல் நீதிமன்ற நீதிபதி)
தலைவர் : திரு S. சிவகணேசன் (இணைத்தலைவர் துன்னாலைப்பிரதேச கல்வி சமய அபிவிருத்தி மன்றம்)
ஆசிகள் : நல்லை ஆதீனமுதல்வர்
சிறப்பு விருந்தினர் : Dr.T.கலாமணி (தலைவர் திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்)
காலம் : 03.03.2014 பி.ப. 3 மணி
இடம் : யா/துன்னாலை வடக்கு மெ.மி.த பாடசாலை மண்டபம்

தங்கள் வாழ்த்தும் வரவும் அவசியமானதே

அழைப்போர் : திசைகாட்டியின் துன்னாலைப்பிரதேச கல்வி சமய அபிவிருத்தி மன்றம்
தவிர்க்கமுடியாத காரணத்தால் ஆரம்ப விழா திகதி மாற்றமடைந்தது

Ms.v. இந்துஜா
பொதுமுகாமையாளர் (கௌரவ இயக்குநர் சபைக்கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறை) லிமிற் 175, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம் 021 2219016

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை கணேசன்



காளுவன், சுழிரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை கணேசன் நேற்று முன் தினம்(24.02.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அராலியைச் சேர்ந்த தர்மலிங்கம்-நாகம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், மனோன்மணி யின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் நடராசா (லண்டன்), காலஞ்சென்ற தவராசா மற்றும் பூபதி (சுவிஸ்), ஞானாம்பிகை, அன்னபாக்கியம், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பாக்கியலச்சுமி, காலஞ்சென்ற விஜயபாலன் மற்றும் செல்வராசா (சுவிஸ்), காலஞ் சென்ற பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நஞ்சிதமலர் (ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி),மாலினி(ஆசிரியர், யா/சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாசாலை), சுமதி (கனடா),மனோகரன் (ஆசிரியர்,மு/இருட்டுமடு தமிழ் வித்தியாலயம்,உடையார்கட்டு),தர்மினி ஆகியோரது பாசமிகு தந்தையும், சிவகுமார் (சிவகுமார் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்), மனோச்குமார்(மனோ போட்டோ சுழிபுரம்), நந்தராஜ் (கனடா), நந்தினி, கிருஸ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனும்,மதுசன், மதுசாயினி, டிரோசினி, டிரோசன்,மேருசன், கிருசாந்,கேசாயினி, டிசானன், உசாங்கன், தஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2014) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளுவன்,சுழிபுரம். (45049)(5.6) தகவல்: குடும்பத்தினர்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## இந்திய யாத்திரை

நாள்கள் 12, யாத்திரீகர் 10,
ஆரம்பம்: 05.03.2014 முடிவு: 17.03.2014
தரிசிக்கும் ஆலயங்கள்:
சென்னை, திருப்பதி, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், கும்பகோணம், பிரம்மாகோவில், 9 நவக்கிரக ஆலயங்கள் பஞ்சபூதத்திருத்தலங்கள், பொற்கோவில், இராமேஸ்வரம், மேல்மருவத்தூர் உட்பட 40இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். சகல செலவுகளும் அடங்கலாக கட்டண விவரம் கேட்டு அறிந்து பதிவுசெய்க.
59C 3/3, செட்டியார் தெரு, சிற்றி சொப்பிங் கொம்பிளக்ஸ், கொழும்பு-11.
மேலதிக விவரங்களுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
0777 680 102
(C/12063)(10.6.3)

## பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் (Only Official Centre) Alliance Française de Jaffna (AF) மட்டுமே. திருமணம் மூலம் France செல்பவர்களுக்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது Certificates மட்டுமே Embassy இல் அங்கிகரிக்கப்படுகிறன.
புதிய வகுப்புகள; விரைவில்... 021 222 8093
வடமாகாணத்தில் ஒரே முகவரி 61, Kachcheri-Nallur Road, Jaffna
(கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் /Racca வீதியில் British Council அருகில்)

## GMATH Abacus மனக்கணிதம்

GMATH
யாழ் மாவட்டத்தில் 500 இற்கும் மேற்பட்ட சிறுவர்களின் பெற்றோர்கள் எம்மைத் தெரிவு செய்துள்ளார்கள்
உங்கள் சிறார்களும் தற்கால யுகத்திற்கு ஏற்ப மிகவும் சிறந்த செயற்திறன் மிக்கவராக ஒளிர்ந்திட... இன்றே எம்முடன் இணையுங்கள்.
இக்கற்கை நெறி முற்று முழுதாக 4 முதல் 14 வயது வரையுள்ள சிறுவர்களின் வலது மற்றும் இடது பக்க மூளையின் செயற்திறனை தூண்டும் பயன் மிக்கதொன்றாகும்.
இதன்மூலம் அவர்கள் கற்றல், கணித்தல், சிந்தித்தல், கவனித்தல், முடிவெடுத்தல்... போன்ற பற்பல செயற்பாடுகளில் மிகவும் சிறந்து விளங்குவர்.
தலைமை நிர்வாகி: சதீஸ் 0774122934
யாழ்ப்பாணம் : துஷ்யந்தன் 0772908584
மானிப்பாய் : பார்கவி 021 3 200 555
வடமராட்சி : செபமாலை 0773848004
தென்மராட்சி : நேசரூபன் 0774122934
லண்டன் (UK) : மயூரன் 00447536693591
ஆசிரியர்களுக்கான வெற்றிடமும் உண்டு
தொடர்புகளுக்கு : 0773848004

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்
Batch1: 01.03.2014
Batch2: 03.03.2014
Batch3: 08.03.2014
Batch4: 10.03.2014

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கண்களால் காண்பவனுக்கு வாழ்க்கை ஒரு சோக நாடகம். அறிவின் துணை கொண்டு சிந்திப்பவனுக்கு அது ஓர் இன்ப நாடகம்.

-லாபுரூயர்

புதன் பொய்கை A

உதயன் | பெப்ரவரி 26 2014 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு


ராஜராஜன்



# தொலைந்து போகும் உறவுகள்

> வெளிநாட்டுத் தொடர்புள்ள குடும்பங்களின் வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுக்க முடியாத ஏனைய குடும்பங்கள் ஒருவித தாழ்வு மனப்பான்மைக்குள் தம்மை ஆழ்த்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

முன்னெரல்லாம் வெளிநாடு செல்வது என்பது அரிதானதொரு விடயமாகவே தமிழர் பகுதிகளில் கருதப்பட்டது. அந்தஸ்தில் உயர்வான நிலையில் இருந்தவர்களும், மேற்படிப்பை மேற்கொள்வதற்கெனச் சென்றவர்களுமே வெளிநாடுகளைத் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். அப்போதெல்லாம் வெளிநாடுகளிலிருந்து திரும்பி வருபவர்களுக்கு இருந்த மரியாதையே தனியானது. ஊரே திரண்டு அவர்களை வரவேற்கும். ஊரவர்கள் அவர்களைப் பார்ப்பதைப் பெருமையாகவும் நினைத்தனர். அதிலும் கிராமப்புறங்களிலிருந்து வெளிநாடு செல்லும் வாய்ப்புக்கிடைத்தவர்கள் அதிசயப் பிறவிகளாகவே கருதப்பட்டனர்.

ஆனால் போர் ஆரம்பித்ததன் பின்னர் இதில் பெருமாற்றம் ஏற்பட்டுவிட்டது. தகுதி வேறுபாடின்றி எவரும் வெளிநாடு செல்ல முடியுமென்ற நிலை இங்கு உருவாகிவிட்டது. கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்ட எம்மவர்கள் இங்கிருந்து பறந்து சென்று வெளிநாடுகளில் நிரந்தரமாக வாழ்வதற்குரிய வாய்ப்புக்களைத் தேடிக்கொண்டு விட்டனர். தற்போது வெளிநாடு செல்வது என்பது ஒரு மோகமாகவே எம்மவர் மனங்களில் உருவெடுத்துள்ளது. ஆரம்பத்தில் அங்கு சென்றவர்கள் உழைத்து அனுப்பி வைத்த பணம் இங்குள்ளவர்களின் வாயைப் பிளக்க வைத்ததால் இந்த நிலை கட்டுக்கடங்காமல் பெருகி விட்டது.

ஒருவேளை உணவுக்குக் கூட வழியின்றி இருந்த பல குடும்பங்கள் ஏதோ ஒரு வகையில் வெளிநாட்டுப் பணத்தைக் கண்டு துளிர் விட்டதைக் காண முடிகின்றது.

கடுமையான குளிர் காலத்தில் குளிரில் உறைந்து போய்க் கிடக்கும் சைபீரியா போன்ற இடங்களிலிருந்து லட்சக் கணக்கான பறவைகள் பல்லாயிரம் கிலோ மீற்றர் தூரம் பறந்து வெப்பமான காலநிலை நிலவும் ஆசிய நாடுகளுக்கு வந்து சேருகின்றன. அவை இங்கேயே முட்டையிட்டு, குஞ்சுகளைப் பொரித்து அவை ஓரளவு வளர்ச்சி பெற்றதும் தமது சொந்த இடங்களின் காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டதை அவதானித்து மீளவும் அங்கேயே சென்று விடுகின்றன. ஆனால் எம்மவர்கள் குளிர் தேசங்களை நாடிச் சென்று அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடுகின்றனர். தாம் பிறந்த மண்ணுக்குத் திரும்பி வருவதை இவர்களில் பலர் எண்ணிக் கூடப் பார்ப்பதில்லை;

கொடிய போரினால் ஏராளமானவர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்ள அதனையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு தம்மை உயர்த்திக் கொண்டவர்கள்தான் இங்கு அதிகளவில் காணப்படுகின்றனர். போர் ஓய்ந்துவிட்டால் தமது பிழைப்பில் மண் விழுந்து விடுமோ என்ற அச்சத்தில் உறைந்து நின்றவர்களையும் இங்கேதான் காணமுடிந்தது. ஆனால் எது எப்படி இருந்த போதிலும் ஈழத் தமிழர்களின் காலடி படாத மண் இந்த உலகில் இல்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. பல நாடுகளின் அரசியல் தலைவிதியை மாற்றும் அளவு சக்தி படைத்தவர்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர். தமிழர் என்றால் அது ஈழத்தமிழரையே குறிப்பதாகத் தெரிவிக்கும் அளவுக்கு எமது இனத்தவர் முக்கியத்துவம் பெற்று விட்டனர்.

அகதி என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு வெளிநாடு சென்றவர்கள் எந்தெந்த நாடுகளில் அதிகம் சம்பாதிக்கலாம் என்பதை நாளடைவில் புரிந்து கொண்டு தம்மை உயர்த்திக் கொள்வதிலேயே தற்போது ஆர்வமுடன் காணப்படுகின்றனர்.

ஆனால் இங்குதான் ஏற்றத் தாழ்வுகளும், வேறுபாடுகளும் தோன்றி விட்டன.

வெளிநாட்டுத் தொடர்புள்ள குடும்பங்களின் வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுக்க முடியாத ஏனைய குடும்பங்கள் ஒருவித தாழ்வு மனப்பான்மைக்குள் தம்மை ஆழ்த்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.


இந்த மண்ணில் தொடர்ந்து 30 ஆண்டுகளாக இடம்பெற்ற கொடிய போரின் தாக்கங்களிலிருந்து ஓரளவு விடுபடுவதற்கு வெளிநாட்டுப் பணமே உதவியுள்ளது. இந்தப் பணம் கிடைக்காதிருந்தால் பலரது வாழ்க்கை அவல நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கும். ஆனால் குடும்ப உறவுகளில் பெரும் தாக்கமும், விரிசலும் ஏற்பட்டு விட்டன. தமது பிள்ளைகளைப் பல ஆண்டுகளாகக் காணாது அவர்கள் அனுப்பி வைக்கும் பணத்தைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் வடிக்கும் பல பெற்றோர்களை இங்கு காண முடிகின்றது. பணத்துக்கும் பாசத்துக்கும் இடையேயான போராட்டமே இங்கு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எமக்குப் பணம் வேண்டாம். எமது பிள்ளைகளே வேண்டும் எனக் கதறும் பலர் எமது மண்ணில்தான் உள்ளனர். தனிமை வாழ்க்கை இவர்களின் மனநிலையில் மட்டுமல்ல உடல் நிலையிலும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விட்டன. பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் சீராடி, உறவாடி மகிழ்ந்திருக்க வேண்டியவர்கள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதைப் போன்றதொரு உணர்வுடன் தமது காலத்தைக் கடத்தி வருகின்றனர். அயலவர்கள் கூட இவர்களிடம் உள்ள பணத்தைக் கணக்கிடுகின்றார்களே ஒழிய அவர்களின் மன உணர்வுகளைக் கணக்கில் எடுப்பதில்லை.



வெளிநாடுகளில் ஆழமாக வேர் ஊன்றி நிற்கும் எம்மில் பலர் இங்கே திரும்பி வருவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. அதிலும் அங்கேயே பிறந்து அந்தச் சூழலில் வளர்ந்த இளம் சந்ததியினர் தமது பெற்றோரில், பிறந்த மண்ணில் பாசம் கொள்வார்களென எதிர்பார்க்கவே முடியாது ஏனென்றால் அவர்களின் வாழ்க்கை முறைகள் யாவும் அவர்கள் தற்போது வாழும் நாடுகளை ஒட்டியனவாகவே அமைந்து விட்டன. அவர்கள் இங்கு வந்து இங்குள்ள சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளவே மாட்டார்கள். கடுமையான குளிருக்கும் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்ட அவர்கள் இங்கு காணப்படும் தூசியையும், வழிந்தோடும் வியர்வையையும், குடி தண்ணீர்க் கிணறுகளில் காணப்படும் தவளைகளையும், வேற்றுக்கோணத்திலேயே பார்க்கின்றனர். உறவுகளையும் ஒருபோதுமே சகித்து ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள்.

ஆகவே வெளிநாடு சென்ற எமது இனத்தவர்களை சைபீரியப் பறவைகளுக்கு நாம் ஒப்பிடவே முடியாது. அவை என்னதான் இருந்தாலும் தமது சொந்த மண்ணை மறக்காது மீண்டும் தேடிச் செல்கின்றன. அந்த மண்ணின் மணம் அவற்றுக்குஎப்போதுமே சுகந்தத்தை அள்ளி வீசக் காத்திருக்கின்றது.

ஆனால் எம்மவர்கள் எம்மை விட்டு எங்கோ வெகு தொலைவு சென்று விட்டார்கள். தற்போது இடைக்கிடையாவது தொடரும் பந்தம் எதிர்காலத்தில் முற்றாகவே துண்டிக்கப்பட்டுவிடப் போகின்றது. இன்றைய மூத்த தலைமுறையினரான நாம் இங்கிருந்து இறுதிப் பயணத்தை ஆரம்பித்த பின்னர் எல்லாமே மறந்துவிட்ட கனவாகவே மாறிவிடப் போகின்றன.



அப்பிளில் நீர்ச்சத்து, புரதச்சத்து, குளோரோபில், மாலிக் அமிலம், சிட்ரிக் அமிலம், பொஸ்பரஸ் மற்றும் பல ஓர்கானிக் அமிலங்கள் உள்ளன.

# அப்பிள் தரும் ஆரோக்கியம்

அன்றாடம் உடல் ஆரோக்கியம் மேம்படவும் நாம் உண்ணும் உணவிலுள்ள நச்சுகளை நீக்கவும், பழங்களை உண்ணுதல் சிறந்தது.

அவற்றில் முதலிடத்தைப் பிடிப்பவை அப்பிள் பழங்களே. பைரஸ் மேலஸ் என்ற தாவரவியல் பெயர் கொண்ட போமேசியே குடும்பத்தைச் சார்ந்த அப்பிள் மரங்கள் குளிர்ச்சியான பிரதேசங்களில் ஏராளமாக விளைகின்றன.

கருஞ்சிவப்புநிறத்தோலைஉடைய அப்பிள் பழங்களே உண்ணத் தகுந்த பழங்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அப்பிளில் நீர்ச்சத்து, புரதச்சத்து, குளோரோபில், மாலிக் அமிலம், சிட்ரிக் அமிலம், பொஸ்பரஸ் மற்றும் பல ஓர்கானிக் அமிலங்கள் உள்ளன.

இவை செரிமானப் பாதையில் ஏற்படும் என்சைம்கள் குறைபாட்டை சீர் செய்வதுடன் பலவிதமான வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுவதைத் தடுக்கின்றன.

மது அருந்துபவர்களுக்கு ரத்தத்தில் அல்கஹோலின் அளவை குறைக்க அப்பிள் பெருமளவு உதவுகிறது.

தோல் நீக்காத அப்பிளிலிருந்து தயாரிக்கப்படும் பழச்சாறு ரத்தத்தைச் சுத்தம் செய்து ரத்தத்தில் கலந்துள்ள அதிக அமிலத்தன்மையை நடுநிலைப்படுத்துகிறது.

வயிற்றுத் தொல்லை உள்ள பொழுது இனிப்புச் சேர்க்காத அப்பிள் பழச்சாற்றை அருந்தி வர வயிற்றிலுள்ள ஹைட்ரோகுளோரிக் அமிலம் கார்பானிக் அமிலமாக மாற்றப்பட்டு நெஞ்சுக்கரிப்புக் கட்டுப்படுகிறது.

அப்பிளிலுள்ள மாலிக் அமிலம் மலச்சிக்கலை நீக்கி குடற்பாதையிலுள்ள நுண்கிருமிகளைக் கொல்கிறது.

அப்பிளை நன்கு மென்று சாப்பிட வாய் மற்றும் தொண்டைப் பகுதியிலுள்ள நுண்கிருமிகள் அழிந்து விடுகின்றன. வயதானவர்களுக்கு அப்பிள் மேற்தோலானது செரிக்கக் கடினமாக இருக்குமென்பதால் மேற் தோலை நீக்கி உட்கொள்வது சிறப்பாகும்.

நீர்ச்சத்து ஏராளமாக உள்ள அப்பிள் பழத்தை கோடை காலத்தில் அதிகம் உட்கொள்ளலாம்.

# நாயும் மனிதனும் கவனிப்பதில் ஒற்றுமை



மனிதனின் செல்லப் பிராணியான நாயும், மனிதனும் மூளையளவில் ஏராளமான ஒற்றுமைகளோடு ஆச்சரியப்படத்தக்க வகையில் காட்சியளிப்பதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

மனிதனின் வீடுகளில் செல்லப் பிராணியாக வளர்க்கப்படும் நாய்களின் குரல்களை வைத்து, அவை என்ன உணர்கின்றன என்பது குறித்து அவற்றை வளர்ப்பவர்களால் உணர முடிகிறது.

இது தொடர்பாக, ஹங்கேரிய நாட்டைச் சேர்ந்த கரெண்ட் பயாலஜி என்ற பத்திரிகை ஆய்வு ஒன்றை நடத்தியது. அந்த ஆய்வின் முடிவில் பிறரது உணர்ச்சிகளைப் புரிந்து கொள்வதில் மனிதனின் மூளையும், நாயின் மூளையும் பல விதங்களில் ஒற்றுமையுடன் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.



நாய்கள் மத்தியில் உள்ள மனிதன் அவைகளின் குரல்களில் தெரியும் உணர்ச்சிகளை சுலபமாகத் தெரிந்து கொள்கிறான். அது போலவே மனிதர்கள் மத்தியில் வாழும் நாய் எப்படியோ மனிதர்களின் குரல்களை சுலபமாக உணர்ந்து விடுகிறது என்றும் ஆராய்ச்சி கூறுகிறது.


ஆனால், இருவருக்கும் இடையிலான சுவாரசியமான வேறுபாடும் இருக்கிறது. குரல்களை விடவும் மற்ற ஓசைகளை நாய்களின் 48 சதவீத மூளை நரம்புகள் வலுவாக உணர்கின்றன. ஆனால் குரல்களைத் தவிர மற்ற ஓசைகளை மனிதனின் 3 சதவீத மூளை நரம்புகளே உணர்கின்றன. இந்த விதத்தில் நாய்களே முதலிடம் வகிக்கின்றன.

இந்த ஆராய்ச்சிக்காக 11 நாய்களின் ஓசைகள் பதிவு செய்யப்பட்டன. அது போலவே, மனிதர்களின் ஓசைகளும் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு கிட்டத்தட்ட 200 ஓசைகளும், குரல்களும் பதிவு செய்யப்பட்டதாக ஆராய்ச்சியை மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.


## தெரிந்து கொள்ளுங்கள்



* ஒட்டகச்சிவி... ன் நாக்கு கரு நீல நிறத்தில் இரு...
* புலிகளின் ...மங்களில் இருக்கும் கோடுகள் ... அதன் தோலிலும் கோடுகள் இருக்கும். ஒரு புலி மீது இருக்கும் கோடுகள் போல வேறு எந்த புலிக்கும் இருக்காது. ஒவ்வொரு புலிக்கும் வெவ்வேறு அமைப்பில் தான் கோடுகள் இருக்கும்.
* யானைகளால் 3 மைல்கள் தொலைவில் இருக்கும் தண்ணீரை முகர்ந்து உணர முடியும்.
* கை ரேகைகளை வைத்து மனிதர்களைக் கண்டறிவதைப் போல, நாய்களின் மூக்கில் இருக்கும் ரேகைகளை வைத்து அவற்றை கண்டறியலாம்.
* எறும்புகள் தூங்குவதே இல்லை.
* நாய்களால் மனிதனின் முகத்தை பார்த்தே அவர்கள் எந்த மனநிலையில் இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியும்.



# இரண்டு கால்களுடன் சாகசம் புரியும் பூனை



விபத்தொன்றில் முன்னங்கால்கள் இரண்டையும் இழந்த 4 வயதுடைய பூனையொன்று பின்னங்கால்களை மட்டும் கொண்டு பல்வேறு விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு வருகின்றது.

இந்தப் பூனையின் சாகசங்களை அதனது உரிமையாளரான ஜொவியல் பெலினி தனது முகத்தள பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

புற்களை வெட்டும் இயந்திரத்துக்குள் கால் வைத்து தனது முன்னங் கால்களை இந்தப் பூனை இழந்துள்ளது. குறித்த விபத்தில் உயிராபத்தின்றித் தப்பிக் கொண்ட இந்தப் பூனையை அநாதரவான நிலையில் விட்டுவிட மனமின்றி வீட்டு உரிமையாளர் மெர்கரி என அதற்குப் பெயரிட்டு வளர்த்து வருகிறார். விபத்தில் கால்களை இழந்தாலும் அதனைப் பொருட்படுத்தாத அந்தப் பூனை மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த நிலையில் தற்போது அந்தப் பூனை சராசரிப் பூனைகளைப் போன்று விளையாட்டுச் சாகசங்களிலும் ஈடுபட்டு வருகின்றது. இந்தப் பூனை விளையாடுவது, குதிப்பது, மற்ற பூனை, நாய்களுடன் சேர்ந்திருப்பது என அனைத்தையும் செய்கின்றது.

# ஒவ்வொரு மாணவனும் நிச்சயம் தேடிப் படிக்கவேண்டிய நூல்கள்

தட்சா. ஜோ
ச. தரசன்

பாடசாலைகளில் ஊடகத்துறை தனியாக கற்றல் அலகாக தடம் பதித்து சில ஆண்டுகள்தான் ஆகின்றன. ஆனால் படிக்கும் மாணவர்களுக்குப் போதுமான உசாத்துணை நூல்களின் வரவு மிகக் குறைவானதே. பழைய வினாத்தாள்களையும் விடைகளையும் தொகுத்து வெளியிடுவ தில் காட்டும் ஆர்வத்தைப் புதிதாக எழுதி வெளியிடுவதில் எம்மவர்கள் காட்டுவது மிகக் குறைவு. அந்த வகையில் புதிய வரவாக ஊடகத்துறை மாணவர்களை இலக்காக் கொண்டு வெளிவந்திருக்கின்றன 'செவ்வி' மற்றும் 'செய்தி' என்ற இரு சிறு நூல்கள்.




இதுவரை காலமும் ஊடகத்துறை சார்ந்த நூல்களே வெளிவரவில்லை எனக் கூறமுடியாது. பலதும் வெளி வந்திருக்கின்றன. இருப்பினும் அவை பெரிதும் பல்கலைக்கழக மட்டங்களிலும் பட்ட மேற்படிப்பு படிப்பவர்களையும் இலக்காகக் கொண்டவை. பாடசாலை மாணவர்களுக்கு உரியதும் அதற்கு அப்பாலும் இந்தப் புத்தகங்களில் கிடைக்கின்றன.

'செய்தி'யும் 'செவ்வி'யும் முதல் முறையாகப் பாடசாலை மாணவர்களை முதன்மை இலக்காகக் கொண்டு ஏனையவர்களுக்கும் பயன்தரத்தக்க வகையில் வெளிவந்திருக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும்பயிற்சி நிலையத்தின் வெளியீடாக வந்துள்ள இந்த நூல்கள் அதன் பணிப்பாளர் தே. தேவானந்தால் எழுதப்பட்டுள்ளன.

ஊடகங்கள் பற்றிய விழிப்புணர்வும் புரிதலும் மிக மக்கள் மத்தியில் தீவிரம் பெறவேண்டும் என்ற எண்ணக்கரு வளர்ந்து வரும் நிலையில் இந்த நூல்கள் அனைத்து மக்களுக்குமே மிகப் பயனுள்ளவைதான். ஒரு செய்தி என்றால் என்பதையும் ஒரு செய்தி எப்படி வடிவமைக்கப்படுகிறது என்பதையும் செய்தியாளர்கள் எப்படிச் செயற்படுகிறார்கள், அவர்களுக்கு எங்கிருந்தெல்லாம் செய்திகளைப் பெறுகிறார்கள் என்பதையும் 'செய்தி' நூல் விரிவாகச் சொல்கிறது. ஒரு மனிதன் ஊடகத்தை அடிப்படையாக விளங்கிக் கொள்வதற்கு இந்த நூல் பெரிதும் உதவுகிறது.


'செவ்வி' ஊடகத்துறை சார்ந்த மாணவர்களுக்குத்தான் பெருமளவில் உதவும் நூலாக உள்ளது. ஒரு நேர்காணலை எப்படிச் செய்வது. அதற்கு முன்னர் நேர்காண்பவர் எப்படித் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்வது போன்ற விவரங்களை விரிவாக தரும் நூல் அது. நேர்காணலின் வகைகளையும் அதன் விரிவையும் பட்டியலிட்டுள்ளது அது. "ஊடக கற்கைகள் வெறும் புத்தகங்கள் ஊடாக மட்டும் படிப்பதில் இல்லை. செய்முறையிலும் தங்கியுள்ளது. அவ்வாறான செயன்முறை விளக்கங்களை ஆசிரியரின் நூல்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடிகின்றது" என்கிறார்கள் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் முன்னாள் மாணவர்களும் தற்போது இளம் பத்திரிகையாளர்களாகத் தொழில்புரிபவர்களுமான ஊடகவியலாளர்கள்.


"பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் தமிழ் மொழி மூலம் ஊடகக் கற்கையை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அவர்களுக்கான துணை நூல்கள் தமிழில் மிக இயல்பான மொழி நடையில் வெளிவந்துள்ளமை வரவேற்கத்தக்கது" என்று நூலை மதிப்பீடு செய்த யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் விசாகரூபனின் கருத்துக்கள் சாலப் பொருத்தமானவை.

"மொழிக் குழைவு அற்ற நிலையில் உள்ளன இந்த நூல்கள். பல்கலைக்கழகத்தில் பெரும் பீடமாக கலைப்பீடம் காணப்படுகின்றது. பெருந்தொகை நிதிகள் நூல்களுக்காக ஒதுக்கப்படுகின்றது. துரதிஸ்டவசமாக எமது மாணவ சமுதாயம் வாசிப்பதை குறைத்துவிட்டது. ஆசிரியர்கள் தரும் குறிப்புக்களையும் மற்றம் தமது மூத்த நண்பர்களின் குறிப்புக்களையும் மட்டுமே அவர்கள் படிக்கின்றனர். அதனைப் பாடமாக்குவதற்கான இடமாகவே நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். அரிய நூல்களை வாசிப்பதற்கு தவறுகின்றனர். அதற்கு அவர்கள் சொல்லும் குற்றச்சாட்ட நூல்கள் பெரும்பாலும் ஆங்கிலத் தில் உள்ளன என்பதே. ஆனால் தமிழிலுள்ள நூல்களையும் அவர் கள் படிப்பதில்லை. அப்படிப் படித் தாலும் நூலகங்களில் உள்ள ரமணிச் சந்திரன் போன்ற கிளர்ச்சி நிலை எழுத்தாளர்களின் நூல்களையே வாசிக்கின்றார்கள். ஆய்வு நிலை நூல்களை வாசிக்கத் தவறுகின்றார்கள். மொழி என்ற விடயத்தில் யாழ்ப்பாணத்தை அடிக்க ஆள் இல் லாத நிலை இருந்தது. இன்று தென்னிந்திய சாயல் எங்கும் பரவுகின்றது. கடிதம்கூட எழுத முடியாத நிலையில் மாணவர்கள் உள்ளனர். மொழி விடயத்தில் ஆங்கிலம், தமிழ் என இரண்டும் கெட்டான் நிலையிலேயே உள்ளோம் நாம். தமிழில் வரும் இப்படியான நல்ல நூல்களை மாணவர்கள் தேடி வாங்கிப் படிக்கவேண்டும்" என்கிறார் பேராசிரியர் விசாகரூபன். மாணவர் களுக்கு இலவசமாகவே இந்த நூல்கள் வழாங்கப் படுகின்றன என்பது மேலும் சிறப்பு.




# மக்களோ கஷ்டத்தில் ஜனாதிபதியோ சொகுசு வாழ்க்கை






பொருளாதார நெருக்கடியில் நாடே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும்போது, உக்ரைன் ஜனாதிபதி மிகச் சொகுசாக வாழ்க்கை நடத்தி வந்துள்ளார்.

4ட கோடி சனத்தொகை கொண்ட உக்ரைன், பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. எனவே இந்த சரிவில் இருந்து மீள ஐரோப்பிய யூனியன் பக்கம் சாய்வதா? அல்லது ரஷ்யா பக்கம் சாய்வதா? என்ற நிலை ஏற்பட்டது.


ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சோ, ரஷ்யாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டார். இதற்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்தது. கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த கலவரத்தில் 75 பேர் உயிரிழந்தனர்.

உக்ரைனின் அடக்குமுறையை எதிர்த்து சர்வதேச நாடுகள் குரல் கொடுத்து வருகின்றன. இந்நிலையில் கீவ் நகரில் உள்ள ஜனாதிபதியின் மாளிகையை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளனர். இதுகுறித்த புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன. ஆனால் ஜனாதிபதி எங்கிருக்கிறார் என்பது இதுவரையிலும் மர்மமாகவே இருந்து வருகிறது.



தமிழ்த் திரையுலக இயக்குநர் பாலு மகேந்திராவின் நினைவஞ்சலி நிகழ்வு கடந்த சனியன்று இமையாணன் ஆகாயம் பதிப்பகத்தில் தி.செல்வமனோகரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஜீ.கேதாரநாதன், குப்பிளான் ஐ.சண்முகம் ஆகியோர் நினைவுச் சுடரை ஏற்ற, கலந்து கொண்டோர் மலரஞ்சலி செலுத்தினர். நினைவுரையை அ.யேசுராசா, சி.விமலன் ஆகியோர் நிகழ்த்தினர். குறும்படக் காட்சிகளும் இடம்பெற்றன. (ஓ-9)

# பெண்களின் மார்பகத்தில் சூடுவைக்கும் கொடுமை



மார்பக சூடு (breast ironing) என்று அழைக்கப்படும் உடல் உருச்சிதைவு (body mutilation) வன்கொடுமை ஆபிரிக்கக் கண்டம் கேமரூன் நாட்டில் பரவலாக நடைபெற்று வருகிறது. இங்கு வசிக்கும் நான்கில் ஒரு பெண்ணுக்கு இந்தக் கொடுமை நடக்கிறது. இது வரை புள்ளி விவரப்படி 3.8 மில்லியன் பெண்களுக்கு இந்தக் கொடுமை இழைக்கப்பட்டிருக்கிறது. இந்த மிருகத்தனத்தை பெற்ற தாய்மார்களே தங்கள் குழந்தைகளுக்கு விரும்பிச் செய்கின்றனர்.

கேமரூனில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் இந்தக் கொடுமையான பழக்கம் நடைமுறையில் உள்ளது. கேமரூனின் தென் கிழக்குப் பகுதியில் இவ் வழக்கம் ஐம்பத்து மூன்று சதவிகிதம் அண்மையில் அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் இளவயது பருவமடைதல் என்று கண்டறியப்பட்டுள்ளது. மேம்பட்டுவரும் உணவுப் பழக்கம் பெண் குழந்தைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது என்பதே அதற்குக் காரணம்.

சுமார் ஒன்பது வயதுப் பெண் குழந்தைகள் பருவமடையும் தறுவாயில் இக்கொடுமையைச் சந்திக்கின்றனர். சூடான கல், தேங்காய் ஓடு, வாழைப்பழம், கிழங்குகளை மசிக்கும் மர உலக்கைக் கட்டை, சாணைக் கற்கள், மரக்கரண்டி மற்றும் சுத்தியல் போன்றவற்றை நிலக்கரி மேல் வெப்பமூட்டி உபயோகிக்கின்றனர். சூடு ஏற்றப்பட்ட பொருள்களைக் கொண்டு பெண் குழந்தைகளின் வளரும் மார்பகங்களை அழுத்திப் பட்டையாக்க அல்லது மறைந்து போகவைக்க முனைகின்றனர்.

மார்பகச் சூடு அவர்களின் பெண் குழந்தைகளை இளம் வயது பாலியல் கொடுமைகளை தடுக்கும் அரணாகவே கேமரூன் நாட்டுத் தாய்மார்கள் கருதுகின்றனர். இதன் மூலம் மார்பக வளர்ச்சி தள்ளிப் போடப்படுகிறது. அதனால் ஆண்கள் ஈர்க்கப்படுவது தடுக்கப்படுகிறது என்று நம்புகின்றனர். இளமைக்கால பாலியல் தாக்குதல் மற்றும் பதின்ம வயது கருவுறுதலைத் தடுக்க முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றனர். குடும்பப்பெயர் கெட்டு விடக்கூடாது என்பதற்காக இதைச் செய்கிறோம். எங்களுக்கும் எங்கள் தாய்மார்கள் இதையே தான் செய்தார்கள். மேலும் கல்வி கற்க எவ்வித தடையும் இல்லை, இவ்வாறு செய்வதால் பால்ய திருமணமும் தடுக்கப்படுகிறது என்று தாய்மார்கள் பெருமையாகக் கூறுகின்றனர். எங்கள் குழந்தைகளைக் காப்பாற்றவே இவ்வாறு செய்கிறோம் என்று அறியாமையுடன் நியாயப்படுத்துகின்றனர்.


இந்தக்கொடுமைக்குப் பின் அக்குழந்தைகள் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். தீக்காயங்கள் மற்றும் உருச்சிதைவு போன்ற பல உடல் ரீதியான பிரச்சினைகளுக்கு இது வழிவகுக்கும் என்று மருத்துவ ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மார்பகப் புற்று நோய், நீர்க்கட்டி, மன அழுத்தம், மார்பகத் தொற்று, உருக்குலைந்த மார்பகம், முழுமையடையாத ஒரு அல்லது இரு மார்புகள் வர வாய்ப்புள்ளது.

பல பெண்கள் பிற்காலத்தில் அவர்களின் குழந்தைகளுக்குப் பால் புகட்ட முடியாமல் போய் முடியக்கூடிய சூழ்நிலையை இது உருவாக்கிவிடுகிறது என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர். ஒரு குழந்தையின் உடல் வளர்ச்சியைக் கொண்டு அந்தக்குழந்தை பாலியல் உறவுக்குத் தயாராகி விட்டாள் என்று முடிவு செய்யும் உலகத்தை நினைத்தால் பதறுகிறது உள்ளம். இவை அனைத்துக்கும் கல்வி இன்மை மற்றும் விழிப்புணர்ச்சிக் குறைவு தான் காரணம்.

ஜெர்மன் மேம்பாட்டு நிறுவனம் (GTZ) நடத்திய ஆய்வில், கடந்த 2006 ஜூன் மாதத்தில் இருந்து சுமார் பத்து வயது முதல் 82 வயது வரை உள்ள பெண்களில் ஐயாயிரம் பேர்கள் இக் கொடுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மை காலமாக இக்கொடுமை அதிகரித்து உள்ளதால் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் .விழிப்புணர்வுப் பிரசாரங்களை நாடு முழுவதும் செய்கின்றன.

அரசு சார்பற்ற நிறுவனங்கள் இளம் தாய்மார்களுக்கு ஊக்கமளித்து மார்பகச் சூட்டுக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றன. பல பாதிக்கப்பட்ட பெண்களும் விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்கின்றனர். பாடசாலைகளிலும், கல்விக் கூடங்களிலும் இளம் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முயலுகின்றனர். முந்தைய தலைமுறையினர் இக்கொடுமையான பழக்கத்தை ஏற்றுக்கொண்டு விட்டாலும், இளைய தலை முறையினர் இதைக் கடுமையாக எதிர்க்கின்றனர்.

சிறு வயதுத் திருமணம் மற்றும் தாய்மையைத் தடுப்பதற்கு சூடு வைப்பது ஒரு தீர்வில்லை என்றும், அதற்கு மாறாக உடலமைப்பைப் பற்றியும் குழந்தை உருவாகாமல் எப்படித் தடுப்பது என்பதைப் பற்றியும் விளக்குவதே தீர்வாகும் என்று இளைய தலைமுறையினர் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர்!



# நாய் எவ்வாறு மோப்பம் பிடிக்கின்றது?

உலகம் முழுவதும், பிலட்த் ஹௌந்து எனப்படும் நாய்தான் துப்பறிவதற்கு அதிகம் பயன்படுத்தப்படுகிறது. காணாமற் போன குழந்தைகளைக் கண்டு பிடிப்பதற்குப் பேர் போனது. பொதுவாக நாய்கள் மனிதனைவிட 50 மடங்கு மோப்ப சக்தி மிக்கவை என்றாலும், பிலடு விடம் ஏராளமான மோப்ப செல்கள் உள்ளன. மனிதனிடம் 10/ச.செ.மீ. அளவிலும் பிலடுக்கு 170/ச.செ.மீ. பரப்பிலும் மோப்ப செல்கள் உள்ளன.

நீங்கள் அடுப்பங்கரையில் நுழையும்போது கறிவாசனை வந்தால் அது சிறிது நேரத்தில் எமக்குத் தெரியாமல் போய் விடுகிறது. ஆனால் மோப்ப நாய்க்கு அப்படி இல்லை. எப்படி இவை மோப்பம் பிடிக்கின்றன தெரி யுமா..? எமது உடலிலிருந்து விழுந்த செல்களின் மூலம்தான்.

உங்கள் உடலிலிருந்து தினமும் சுமார் 5,00,0000, 00000000 செல்கள் ஏராளமான வியர்வையுடன் கொட்டுகின்றன. ஆனால் வியர்வை / தோலுக்கு அவ்வளவு வாசனை கிடையாது. வாசனையைத் தானம் செய்பவை செல்களில் படிந்துள்ள பக்ரீரியாக் கள்தான். 1.1.செ.மீ. பரப்பிலுள்ள தோலில் 10000 முதல் 100,000000 வரையான பாக்டிரியாக்கள் உள்ளன. இவைதான் உங்களுக்கான தனி மணத்தை உரு வாக்குபவை. உங்களின் வாசனை, உங்கள் கைரேகை போல்தான். இதுவும் தனித்துவம் மிக்கது.

# விடைதெரியா மர்மங்கள்

வேற்றுக்கிரக வாசிகள், பறக்கும் தட்டுக்களில் உலகின் பல பகுதிகளுக்கும் வந்து போனதாக பல செய்திகளைப் படிக்கிறோம். (ஏலியன்ஸ் இருக்குதா? இல்லையா?)




நேபாள கல் தட்டு

மாயன்கள் காலத்தில் (இன்கா), முற்கால எகிப்து, பெரு ஆகிய நாடுகளில் ஆதாரங்கள் (கற்சிலை) இருப்பதாக அறிகிறோம். நேபாளத்தில் என்கின்ற போது இன்னும் ஆச் சர்யம் மிகுதியாகிறது. 12000 வருடங்கள் பழைமையான கல் தட்டு (The Lolladoff plate) மர்மங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. பார்ப்பதற்குப் பறக்கும் தட்டுப் (UFO) போலவே இருக்கிறது. இவ் வட்டத் தட்டில் சுருள் வடிவ உடுமண்டலம் (spiral galaxy) வடிவம் ( பால்வெளியா?) சுற்றுப்பதையில் ஒரு பறக்கும் தட்டு, சூரியன், இரு கைகளை நீட்டிய வேற்றுகிரக வாசி (நம்மை முறைப்பது போல் உள்ளது), சித்திர எழுத்துகள். விசித்திர விலங்கு, ஓணான், சிலந்தி. இப்படிப் பல வடிவங்கள் உள்ளன.

அக்கால விண்வெளி அறிவாற்றல், வேற்றுக்கிரகவாசி, பறக்கும் தட்டு, என்பதெல்லாம் உண்மையா? மேலே சொன்ன நாடுகளோடு அக்காலத்திய தொடர்புகள். இப்படி பல்வேறு வினாக்களை எழுப்பி விடை தெரியா மர்மங்களாக உள்ளன.

## ராட்சதனின் படிமம்

1895 இல் பிரிட்டன் ஸ்டேண்டேர்ட் சஞ்சிகையில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது. 12 அடி உயரமுள்ள ஓர் இராட்சத மனித உருவத்தின் படிமம் அயர்லாந்தில் கண்டறியப்பட்டது என்பது தான் அந்தச் செய்தி. அந்த உருவத்தின் உயரம் 12 அடி இரண்டு அங்குலம், மார்பின் சுற்று ஆறு அடி ஆறு அங்குலம், கைகளின் நீளம் நான்கடி ஆறு அங்குலம், வலது காலில் ஆறு விரல்கள் (பைபிளில் சொல்லப்படும் ராட்சதனோ ? என்று விளக்கம் அளிக்கபபட்டது. விடைதெரியா மர்மம்) இது.





புனித உடற்போர்வை

யேசு கிறிஸ்துவின் இறப்பின் பின் அவர் மேல் போர்த்தப் பட்டிக்கலாம் என்று சொல்லப்படும் லினன் துணியின் காலத்தைக் கணிக்க ரோடியோ கார்பன் பரிசோதனை 1988 இல் செய்யப்பட்டது. ஒரு சாரார் இவ்வகைத்துணி 1260 மற்றும் 1390 களில் நெய்யப்பட்டிருக்கலாம் என்றனர். பின்னர் 2005 இல் நியூ மெக்ஸிகோவைச் சேர்ந்த ரைமான் ரோஜர் என்ற ஓய்வு பெற்ற வேதியல் ஆராய்சியாளர் இது குறித்த மற்றுமொரு பரிசோதனையைச் செய்தார். அவரது ஆய்வுப்படி குறிப்பிட்ட துணி 1300 மற்றும் 3000 ஆண்டுகள் பழைமையானது என்று தெரிவித்தார். செக்கோந்தோ பீயா என்பவரால் எடுக்கப்பட்ட புகைப்படத்தின் நெகட்டிவ் மூலமாகவே முதன் முதலில் உருவம் தெளிவாக தெரிந்தது. 1898 இல் அது உலகுக்கு அறியக்கிடைத்தது. இரத்தம் உறைந்த பகுதிகளில் கைகள் சிலுவையில் அறையப் பட்டதற்கான தடயம் உள்ளது. இப்புனிதத் துணி, நெருப்பில் எரிவதிலிருந்து தப்பியதாகவும் அறிகிறோம். கருப்பு வெள்ளை ஒளிப் படம் சுவிற்ஸர்லாந்தின் லோசான் நகரக் காட்சியகத்தில் உள்ளது. கிறிஸ்துவின் உருவம் எப்படி இந்தத் துணியில் மெல்லியதாகத் தெரிகிறது என்பது ஆச்சரியமானது. இந்த ஆய்வு மதத்தவரை புண்படுத்தும் என்பதாலோ? அல்லது பரிசோதனை பிரயோசனம் இல்லை என்பதாலோ கைவிடப்பட்டிருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.

## உயிர்வளிச் சிந்தனை



ஒரு மனிதன், ஒரு நாளில் சுவாசிக்கும் உயிர்க்காற்று (oxygen), மூன்று பிராணவாயு சிலிண்டர்களுக்குச் சமன். ஒரு சிலிண்டரின் விலை 5,000 ரூபாய் ஆகும். சராசரியாக 65 ஆண்டுகள் வாழும் ஒரு மனிதனுக்கான உயிர்வளியின் மதிப்பு சுமார் 10 கோடி ரூபாவிலும் அதிகம். இவ்வளவு மதிப்புள்ள உயிர்க் காற்றை மரங்கள் நமக்குத் தருகின்றன. மரங்களை வளர்ப்பதும் நேசிப்பதுமே இயற்கைக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடன்.

கி.நிரோஷா,
விபுலாநந்தாக் கல்லூரி.



அரசரை வணங்கிய அவர், "அரசே! என் நிலத்தில் இரண்டு இடங்களில் மண் எடுத்தேன். என்ன வியப்பு! இரண்டு மண்ணும் வெவ் வேறு வகையாக உள்ளன" என்றார்.

யோ.அபிசன்

# மணம் வீசுது

மகிழ நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் யாருடைய அறிவுரையையும் கேட்காமல் தமது விருப்பம் போலவே நாட்டை ஆட்சி செய்து வந்தார்.

இதனால் மக்கள் துன்பம் அடைந்தனர். நாட்டில் குழப்பம் நிலவியது. அரசரை எப்படி நல்வழிப்படுத்துவது என்று அமைச்சர்கள் கலந்து பேசினர். அவர்களில் ஒருவர், நாம் அறிஞர் நம்பியிடம் செல்வோம். அவர் இதற்கு நல்வழி காட்டுவார், என்றார்.

அதன்படியே அவர்கள் அனைவரும் அறிஞர் நம்பியிடம் சென்றனர். எங்கள் அறிவுரையைக் கேட்டு அரசர் நல்லாட்சி புரிய வேண்டும். அதற்கு நீங்கள் தான் வழி சொல்ல வேண்டும், என்று வேண்டினர்.

சிந்தனையில் ஆழ்ந்த அவர், நாளை அரசவைக்கு வருகிறேன். உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்கிறேன், என்றார்.

மறுநாள் அவர் இரண்டு மூட்டைகளுடன் அரசவைக்கு வந்தார்.

அரசரை வணங்கிய அவர், அரசே! என் நிலத்தில் இரண்டு இடங்களில் மண் எடுத்தேன். என்ன வியப்பு! இரண்டு மண்ணும் வெவ்வேறு வகையாக உள்ளன, என்றார்.

ஒரு மூட்டையைப் பிரித்தார். அதில் இருந்த மண்ணை அரசரிடம் காட்டினார். அதைப் பார்த்த அரசர், இது சாதாரண மண், என்றார்.

அடுத்த மூட்டையை அவிழ்த்தார் அவர். அதில் இனிய மணம் பரவியது. அந்த மண்ணை வாங்கி முகர்ந்து பார்த்தார் அரசர்.

மண்ணுக்கா இவ்வளவு மணம்? என்னால் நம்ப முடியவில்லையே. அந்த மண்ணும், இந்த மண்ணும் உமது நிலத்தில் தான் எடுக்கப் பட்டனவா? என்று வியப்புடன் கேட்டார்.

அரசே! மணம் மிகுந்த ரோஜாச்செடிகளுடன் இந்த மண் நீண்ட காலம் இருந்தது. ரோஜாவின் இனிய மணம் இந்த மண்ணையும் [illegible] கொண்டது. நான் முன்னர் காட்டிய மண் ரோஜாவின் தொ[illegible] லாதது. இந்த இரண்டு வகை மண்ணும் நமக்கு நல்ல அறிவு[illegible] கின்றன என்றார் அவர். என்ன அறிவுரை? என்று கேட்டார் அரசர்.

அரசே! ரோஜாச் செடிகளின் தொடர்பினால் இந்த மண் மணம் வீசுகிறது. அதைப் போன்று நல்லோர் தொடர்பினால் ஒருவர் நல்லவராகி விடுவார். நீங்களும் அமைச்சர்கள், பெரியவர்களின் அறிவுரையைக் கேளுங்கள். அதன் படி நடந்தால் நாடு வளம் பெறும். உங்கள் புகழ் எங்கும் பரவும், என்றார் அவர்.

அறிஞரே! உம்மால் நல்லறிவு பெற்றேன். இனிப் பெரியவர்களின் அறிவுரையைக் கேட்டு நல்லாட்சி செய்வேன் என்றார். அரசர் தாம் சொன்னது போலவே, அவர்கள் அறிவுரையைக் கேட்டு நல்லாட்சி செய்தார்.

## கிளிகளுக்கு மாரடைப்பு வராதாம்



வான மண்டலத்தில் பறந்தபடி, மரக்கிளைகளில் வாசம்புரியும் கிளிகளுக்கு மாரடைப்பு நோயே வராது. ஏனென்றால், அவைகள் சூரியகாந்தி விதைகளை அதிக அளவில் உணவாக உண்ணுகின்றன. சூரியகாந்தி விதைகளில் உள்ள 'லினோலீக்' என்ற அமிலத்துக்கு இரத்தக் குழாய்களில் படிந்துள்ள கொழுப்பைக் கட்டுப்படுத்துகின்ற சக்தி இருப்பதாக அறிவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். இதைச் சாப்பிடுபவர்கள் மாரடைப்பு ஏற்படாமல் தவிர்க்கலாம்.

ர.ஆகாஷ்

# இங்கிலாந்தின் இலக்கிய மேதை


வாழ்க்கையின் அடித்தளத்தில், வறுமையின் கோரப் பிடியில் சிக்கி அல்லற்பட்டார் ஒருவர். இளமையில் அவர்பட்ட துயரங்களை எழுத்தில் வடித்து விட முடியாது. குழந்தைப் பருவத்தில் வந்த கண்டமாலை என்னும் நோய் அவரைக் கொள்ளை கொண்டது. ஒரு கண் பார்வையும் பறி போனது. பலராலும் ஒதுக்கப்பட்ட அவர், பிறர் கண்டு தலை வணங்கும் வகையில் புலமையும் திறமையும் பெற்று விளங்கினார். இத்தகைய புகழோடும் பெருமையோடும் திகழ்ந்த பெரியவரின் பெயர் சாம்யூயல் ஜோன்சன்.

ஜான்சன் இங்கிலாந்தில் லிச்ஃபீல்ட் என்னுமிடத்தில் 1709 ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு புத்தக வியாபாரி. ஆதலால் ஜான்சனுக்கும் படிக்க ஏராளமான புத்தகங்கள் கிடைத்தன. எல்லாவற்றையும் அவர் படித்தார். அவரது உள்ளத்தில் இலக்கிய தீபம் சுடர்விட்டது.

கோரமான உருவத்தோடு, வறுமையான நிலையில் இருந்த ஜான்சனை மற்றவர்கள் எள்ளி நகையாடும் போக்குக் காணப்பட்டதால், அவரிடம் ஒரு முரட்டுத்தனமான போக்கு வளர்ந்தது. அவர் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகாமல் தற்பெருமையோடு வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் திருமணம் செய்து கொண்டது அவரை விட இரண்டு பங்கு வயதாயிருந்த ஒரு மங்கையை. அந்த அம்மையாரின் அன்புத் துணையில் அவர் இலக்கியக் கடலில் மேல் நோக்கிச் சென்றார்.

முதலில் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆனால் அதனைத் தொடர்ந்து செய்ய அவரால் முடியவில்லை. 1732 இல் லண்டனுக்குச் சென்று எழுத்துப் பணியை மேற்கொண்டார். அவரது முதல் சொல்லணிக் கவிதை நூலான "மனிதனின் ஆசைச் செருக்கு" என்பது அவருக்குச் சிறந்த பெயரை வாங்கிக் கொடுத்தது.

ஜோன்சனின் மிகப்பெரிய இலக்கியச் சேவை என்று குறிப்பிடக்கூடியது 1755 இல் அவர் ஆங்கிலப் பேரகராதியைத் தொகுத்து வெளியிட்டதாகும். அவருக்குத் தொடக்கத்தில் உதவ மறுத்தவர்கள் கூட, பின்பு உதவ முன்வரும் நிலை ஏற்பட்டது. இங்கிலாந்து மன்னர் 1762 இல் ஜோன்சனுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்தார். ஜோன்சன் சிறந்த இலக்கிய வழிகாட்டியாகவும், விமர்சகராகவும் இருந்தார். 1784 இல் ஜோன்சன் இயற்கை எய்தினார். ஜோன்சனின் வாழ்க்கை வரலாற்றை மிகவும் சுவையோடு ஜேம்ஸ் பாஸ்வெல் என்பவர் எழுதியிருக்கிறார்.



த.நாராயணன்



## கண்களைப் பாதுகாப்போம்


படிக்கும் போது நல்ல வெளிச்சம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பதினைந்து அடி தூரத்துக்கு அப்பால் அமர்ந்திருந்தே தொலைக்காட்சி பார்க்க வேண்டும். வாகனங்களில் செல்லும் போதும், குறைந்த வெளிச்சம் உள்ள போதும், புத்தகங்களைப் படிக்கக் கூடாது. கரட் ,கீரை, அப்பிள், முட்டை, பப்பாளி போன்றவை கண்களுக்குச் சிறந்த ஆரோக்கியத்தைக் கொடுப்பதால் அவற்றை விரும்பி உண்ண வேண்டும்.

அதிக நேரம் சூரியனையோ, அதிக வெளிச்சம் உள்ள இடத்தையோ பார்க்கக் கூடாது. கணினியை உபயோகிக்கும் போது அதன் ஒளி அளவைக் குறைத்து வைத்துப் பயன்படுத்த வேண்டும்.

கத்தி, ஊசி போன்ற கூர்மையான பொருள்களை வைத்து விளையாடக் கூடாது.

செ.வேணுகா,
ஆண்டு 11

# டாவின்சி ஓவியத்தின் மூன்று வாயில்களின் இரகசியம்...





இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தின் சிறப்பான படைப் பாகவும், இயேசு அருந்திய இறுதி விருந்தைச் சித்தரிக்கும் ஓவியங்களுள் முதன்மை யானதாகவும் கருதப்படுகிறது.

இணையவன்

15 ஆம் நூற்றாண்டின் சிறப்புத் தன்மை வாய்ந்த ஓவியமாக டாவின்சி வரைந்த சுவர் ஓவியம் தி லாஸ்ட் சப்பர் (கடைசி இரவு விருந்து) திகழ்கிறது. 1495 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இல்லாமல் வெவ்வேறு கால கட்டத்தில் இதனை அவர் வரைந்திருக்கிறார். 1498 இல் இது முற்றுப்பெற்றிருக்கிறது. இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தின் சிறப்பான படைப்பாகவும், இயேசு அருந்திய இறுதி விருந்தைச் சித்தரிக் கும் ஓவியங்களுள் முதன் மையானதாகவும் இது கருதப்படுகிறது.

கட்டடக்கலை ப்ரஸ்பெக்டிவ் என்று சொல்லக்கூடிய நுணுக்கமும் இந்த ஓவியத்தில் உள்ளது. இதைப் பார்வையிட்ட அறிஞர்களும் ஆர்வலர்களும் இந்த ஓவியம் பற்றி பல்வேறு கருத்துக்கள், அபிப்பிராயங்கள் சொல்கின்றனர். (தத்துவ விளக்கம், ஜோதிடம், விண்ணியல், கணிதவியல், கலாசாரம் இப்படி)

1726-1954 வரையிலும் பல கால கட்டங்களில் , பல ஓவியர்களால் இந்த ஓவியம் சிதையாமல் (ரீ கலரிங் / பேட்ச்) பாதுகாக்கப்பட்டது. பார்ஸிலோன் என்பவர் சுமார் 20 ஆண்டுகாலம் (1979-1999) துல்லியமான முறையில் இதை மறு




சீரமைப்புச் செய்து பழைய வடிவத்தைத் கொடுத்தார். இந்த ஓவியம் இருக்கும் சுவரின் மறுபக்கம் சமையலறை. அதனாலும் ஈரம் காரணமாக இந்த ஓவியம் பொலிவிழந்தது. 1943 இல் உலகப் போரின் போது கட்டடத்தின் அருகில் குண்டு விழுந்தது. அப்போது அதிர்ஷ்டவசமாக இந்த ஓவியம் தப்பியது. ஓவியம் இருந்த அறை சிறையாகவும் இருந்திருக்கிறது.

யேசு தன் சீடர்களுடன் விருந்துண்ணும் காட்சி தி லாஸ்ட் சப்பர். பைபிளில் இந்தக் காட்சி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (as it is told in the Gospel of John, 13:21. Leonardo has depicted the con sternation that occurred among the Twelve Disciples when Jesus announced that one of them would betray him.)



# ஒரே மரத்தில் 250 வகை அப்பிள்கள்

கலைமதி

ஜேர்மனியில் ஒரே மரத்தில் 250 வகையான அப்பிள்களை காய்க்கச் செய்து தோட்டக்காரர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

ஜேர்மனியில் உள்ள வெஸ்ட் சஸ்சக்ஸ் பகுதியில் சித்ஹாம் என்ற இடத்தைச் சேர்ந்தவர் பவுல் பார்னெட் (வயது 40). இவரது தோட்டத்தில் வினோத மரம் ஒன்றை வளர்த்துள்ளார். அதில் உலகில் உள்ள பல்வேறு வகையான 250 ரக அப்பிள்கள் ஒரே மரத்தில் காய்க்கின்றன.

இந்த மரம் தற்போது ஜெர்மனியில் மிகவும் பிரபலமடைந்துள்ளது. இதுகுறித்து பவுல் பார்னெட் கூறுகையில்,

"நான் ஆரம்பத்தில் ஒரு முன் பள்ளியில் தோட்டக்காரனாக பணி புரிந்தேன். அந்த முன் பள்ளி பல ஏக்கர் பரப்புடைய நிலப் பரப்பில் அமைந்திருந்தது. அதில் ஒரு வரிசை யில் சுமார் 90 அப்பிள் மரங்கள் நடப்பட்டிருக்கும். அப்போதிருந்தே நான் அப்பிள் மரங்களை வளர்க்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அவ்வளவு மரங்களை வளர்ப்பதற்கு ஏற்ற பரந்த நிலபரப்பு என்னிடம் இல்லை. எனவே எனது வீட்டின் தோட்டத்தில் இருக்கும் அப்பிள் மரத்தையே பல்வேறு ரகங்களைக் கொண்ட அப் பிளை காய்க்கும் மரமாக வளர்க்கத் திட்டமிட்டேன்.

கடந்த 20 வருடங்களாக மிகவும் கவனத்தோடு பல்வேறு ரக அப்பிள் மரங்களின் ஒட்டு ரகங்களை ஒட்டி எனது அப்பிள் மரத்தை வளர்த்து வருகிறேன். தற்போது 20 அடி உயரம் வளர்ந்துள்ள எனது ஒரே அப்பிள் மரத்தில் சமையலுக்கு பயன்படும் அமெரிக்க அப்பிள் முதல் 1883 ஆம் ஆண்டு ரகத்தைச் சேர்ந்த வித்திங்டன் பில்பாஸ்கெட், 1908 ஆம் ஆண்டைச் சேர்ந்த எட்டீஸ் மேக்னம் போன்ற பல்வேறு ரகங்களும் காய்த்துக் குலுங்குகின்றன என்கிறார் பெருமையுடன். இவரது மரத்தில் காய்க்கும் அப்பிள்களை பொதுமக்கள் வந்து ஆர்வத்துடன் பார்த்து வாங்கிச் சுவைத்து நன்றாக இருப்பதாகப் பாராட்டுகின்றனர்.



## சொற்களைச் சொல்லும் முன்...

தமிழினில் சொற்கள்
பற்பல வகையுண்டு!
கவிதையிற் சொல்பவை
சிற்சில வகைகளே!!

அன்பாய் அணைக்கும்
சொற்களும் உண்டு!
அம்பாய் உறுத்தும்
சொற்களும் உண்டு!!

தேன்போல் இனிக்கும்
சொற்களும் உண்டு!
தேள் போல் வருத்தும்
சொற்களும் உண்டு!!

நெருப்பெனக் கொதிக்கும்
சொற்களும் உள்ளன!
கரும்பெனச் சுவைக்கும்
சொற்களும் உள்ளன!!

இணக்கத்தை வளர்க்கும்
சொற்களும் உள்ளன!
பிணக்கத்தை வளர்க்கும்
சொற்களும் உள்ளன!!

சிவவகைச் சொற்கள்
உறவை வளர்க்கும்!
சிலவகைச் சொற்கள்
உறவைப் பிளக்கும்!!

துணிவை வளர்த்திடும்
சொற்களும் உண்டாம்!
துணிவைக் கெடுத்திடும்
சொற்களும் உண்டாம்!!


சிலவகைச் சொற்களால்
நட்பு வளர்ந்திடும்!
சில வகைச் சொற்களால்
பகைமை வளர்ந்திடும்!!

பயனுள்ள சொற்களெம்
மதிப்பினை உயர்த்தும்!
பயனற்ற சொற்களெம்
மதிப்பினைக் குறைக்கும்!!

பிறரெம்மை மதிப்பதெம்
சொற்களைக் கொண்டே!
பிறரெம்மைப் பழிப்பதெம்
சொற்களைக் கொண்டே!!

சொற்களைச் சொல்லுமுன்
சிந்தித்தால் பயனுண்டாம்!
சொற்களைச் சொன்ன பின்
சிந்திப்பதால் பயனுண்டோ?

"முருகு"



# சமய சமூக தொண்டாற்றிய கனவான்

## லயன் சி.பத்மநாதன்

லயன் சி.பத்மநாதன் யாழ். மாவட்ட கட்டடத் திணைக்கள எந்திரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். 1990 ஆம் ஆண்டு மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தை உருவாக்கி, அதன் ஆரம்பத் தலைவராக சேவையாற்றிய அவரது திறமையையும் சேவையையும் அவதானித்த லயன்ஸ் கழக ஆளுநர்கள், வலயத் தலைவராக, பிராந்திய தலைவராக, மாவட்டத் தலைவராக, மாவட்ட இணைப்பாளராக, இவரை நியமித்ததினால் யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களை சுறுசுறுப்பாகச் சேவை செய்ய ஊக்குவித்து வழி நடத்தியவர். ஆளுநர் உபாலி சமரசிங்கவின் யாழ். மாவட்டத்துக்கான உத்தியோக வருகையை திட்டமிட்டு சிறப்புற ஒழுங்கு செய்து லயன்ஸ் கழக நிகழ்வுகளில் அவரைப் பங்கேற்க வைப்பித்துப் பெருமைப் படுத்தியவர். மலிக் சவீரின மாவட்ட ஆளுநராக இருந்த வேளையில் இவரது தன்னலமற்ற சிறப்பான சேவையை மெச்சி நீதி அமைச்சருக்கு பரிந்துரை செய்ததன் பேரில் நீதி அமைச்சால் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் நியமிக்கப்பட்டார்.

மயிலிட்டி மக்கள் இடம்பெயர்ந்து நாகர்கோயில் முகாம்களில் இருந்த போது முகாம்களில் உள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கு உயிர்ச்சத்துக் குறைபாட்டல் மாலைக் கண் நோய் பரவுகின்றது என்று செஞ்சிலுவைச் சங்க மருத்துவர் தெரிவித்ததையடுத்து அவர்களுக்கு உயிர்ச்சத்து வில்லைகளை வழங்க ஏற்பாடு செய்து மாணவர்களின் மாலைக் கண்பார்வைக் குறைபாட்டைக் குணப்படுத்த உதவினர்.

2000 ஆண்டின் இடப்பெயர்வின் போது, சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தையும் அங்கத்தவர்களையும் ஊக்குவித்து சிறப்பாக செயற்பட வைப்பித்தவர். இடம் பெயர்ந்த நிலையிலும் இடம் பெயர்ந்த மக்களுக்கு சேவை செய்ய ஊக்குவித்தவர். 2000 ஆம் ஆண்டு இடம் பெயர்வின் போது படிப்பை விட்டு விட்டு, இடம்பெயர்வில் தொலைத்த பொருள்களை உழைத்துச் சேகரிக்க வேண்டும் என்ற அவாவில் இருந்த மகனை படிப்பின்பால் ஈர்க்கச் செய்து கணினி எந்திரியாக்கிய பெருமகன். மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி என்பவற்றின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் அரும்பாடுபட்டவர். புக்கை தின்னி பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாசபைத் தலைவராய் இருந்து ஆலயப் பராமரிப்பு வளர்ச்சிக்காகச் செயற்பட்டவர்.

## நீத்தார் நயப்புரை

இத்தனைக்கும் அவரது துணை வியார் தென் இந்திய திருச்சபையைச் சேர்ந்தவர். இருவரும் வெவ்வேறு மதங்களைப் பின்பற்றிய போதிலும் அவர்கள் மத்தியில் மத இணக்கப்பாடும் சேவை மனப்பான்மையும் காணப்பட்டன. அன்னார் மருதடிப் பிள்ளையார் ஆலய ஆரம்ப கால தலைவராயும் இருந்தவர். மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை வளர்ச்சியிலும் அக்கறை காட்டியவர்.

இவ்விதம் சமய சமூக பணிகளைஅர்பணிப்புஉணர்வுடன் முன்னெடுத்து தாம் சார்ந்த தமிழ்ச் சமுதாயத்துக்குப் பெருந் தொண்டாற்றி இவ்வுலக வாழ்வை நீத்த லயன் சி.பத்மநா தனின் ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திப்போம்.

லயன்,
Dr.எஸ்.எஸ்.அருளானந்தம்.

உதயன்
26.02.2014



# கடமை உணர்வுடன் செயற்படுவோம்

(மது)

மனிதனின் கடமை என்று எதைக் குறிக்கின்றோம்? ஒருவனுக்குப் பிறரால், விதிக்கப்பட்ட அல்லது தனக்குத் தானாகவே விதித்துக் கொண்ட ஓர் இலக்கின் செயலாக்கத்தைத் தான் கடமையாகக் கருதுகின்றோம். ஒரு அலுவலகத்தில் பணிபுரியும் ஒரு நபருக்கு மாதம் ஒரு தொகை ஊதியமாக வரையறுக்கப்பட்டு அதற்காக அவர் செய்ய வேண்டிய பணிகள் யாவை என்று விளக்கப்படுகின்றது. அவரும் அன்றாடம் அந்தப் பணியைத் தங்கு தடையின்றி செய்வது அவரது கடமை ஆகின்றது. ஒரு பெற்றோர் தமது குழந்தைகளைப் பேணி வளர்த்து ஆளாக்கி அவர்களுக்குத் தகுந்ததொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதைத் தமது கடமையாகக் கொள்கின்றனர்.

முதலில் கூறிய அலுவலரே பெற்றோராகவும் இருக்கலாம். இரு விதமான பணிகளைச் செய்வது அவருக்கு இருவேறு கடமைகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் பெற்றோராய் செய்யும் கடமைக்கு சம்பளம் எதுவும் நிர்ணயிக்கப்படுவதில்லை. இதனால் கடமை என்பது ஓர் பொறுப்புணர்வு என்று கூற லாம். வாழும் வாழ்வுக்கு ஒரு பிடிப்பு, ஓர் அர்த்தம், ஓர் இலக்கைக் கொடுப் பதாகக் கொள்ளலாம். அலுவலகத்தில் அதாவது வெளியுலகில் ஆற்றும் கடமைக்குக் கால வரையறை உண்டு. காலை ஒரு குறிப்பிட்ட நேரம் ஆரம்பித்து மாலை ஒரு குறிப்பிட்ட நேரம் வரை அலுவலகப் பணிகளைச் செய்வது அந்த நபருக்கு அவர் எந்த நிலை ஊழியராய் இருப்பினும் கடமை ஆகின்றது. ஆனால் குடும்பத்தில் அவ்விதமாகக் காலவரையறை ஏதும் வகுத்துக் கொள்வதில்லை.

அவற்றிலிருந்து எமக்குத் தெரிவது - கடமை என்பது மனிதன் தனக்குத் தானே வரையறுத்துக் கொள்ளும் இலக்கணம் கொண்ட செயற்பாடு. தனக்கு முன்பாக வைக்கப்பட்ட ஒரு பணியை நிறைவேற்றுவதாகவும் இருக்கலாம். தானே வகுத்துக்கொண்ட வரையறையை அடைவதற்கு முயலுவதாகவும் இருக்கலாம். எது எப்படி ஆயினும் அந்தப் பணியை ஓர் ஒழுங்கு முறையாக செயற்படுத்துதல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. மேலே கூறிய இரண்டு விதமான கடமைகளுக்கும் சில ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் உள்ளன. நாம் வெளியுலகில் பணியாற்றும்போது அதாவது எமது கடமைகளை நிறைவேற்றும் போது அதற்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. காலம் தவறாமை, விதிகளை மீறாமை, இட்ட பணிகளைச் செவ்வனே செய்தல், மேலதிகாரிகளுக்குப் பணிந்து நடத்தல், உடன் பணிபுரிவோருடன் சுமுகமாகவும் அன்பாகவும் பழகுதல் அவற்றுள் சில. சுயமாகத் தொழில் செய்வோருக்கு இப்பண்புகள் அனைத்தும் பொருந்தும். தமது பணிகளில் ஓர் இலக்கை நிர்ணயம்செய்து இலட்சியங்களைக் குறித்து கடுமையாக உழைத்து முன்னேறத் துடிப்பதும் ஒரு சாரார் இயல்பு. தமது கடமைகளை நேர்மையாக ஒழுங்காகச் செய்பவர்களுக்கே இப்பாதை சாத்தியம் ஆகின்றது. பொருள் ஈட்டுவது ஒன்றே இலட்சியமாய் இருப்பதைக் காட்டிலும் தனக்கு மட்டுமின்றி தன்னைச் சார்ந்தவர்களுக்கும் சமுதாயத்துக்கும் சேர்ந்து ஒரு பரந்த நோக்குடன் சிந்தித்துச் செயற்படுவோரே வாழ்க்கையில் சாதனையாளர்கள் ஆகின்றனர்.

கீதையில் கடமையைச் செய். பலனை எதிர்பாராதே என்று கூறியிருப்பதற்குப் பல அறிஞர்கள் பலவிதமான விளக்கங்களை அளிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். மனச்சாட்சிக்கு மாறுபாடு இல்லாமல், நேர்த்தியாக உண்மையாக சத்திய வழியில், ஒழுங்காகச் செய்யப்படும் ஒவ்வொரு பணி யும் நமக்கே தெரியாமல் நிச்சயம் ஒரு பலனை அளிக்கும். அது கண்ணுக்கே புலப்படாத எம்மால் உணரக்கூட முடியாத ஒரு பலனாகவும் இருக்கலாம். மறைமுகமாக அந்த பலன் நிச்சயம் எம்மை வரவேண்டிய நேரத்தில் வந்து அடையும். ஓர் எதிர்பார்ப்பு இல்லாமல் செய்யும் நிறைவேற்றும் எந்தக் கடமையும் என்றும் தோல்வியில் முடியாது. எதிர்பார்ப்பின் இலக்கே வெற்றி.

எதிர்பார்ப்பின்மை வெற்றி தோல்வி என்ற பலன்களுக்கு அப்பாற்பட்டது. எதிர்பார்ப்பு, பலன், விளைவு என்ற உணர்வுகளை முழுவதுமாக ஒதுக்கி வைத்துவிட்டு தனக்கு முன்னால் உள்ள ஒரு பணியை அல்லது தான் வகுத்துக் கொண்ட பணிகளைத் தனது கடமை என்று உணர்ந்து ஒருவன் செயற்பட்டால் நிச்சயம் அவனது வழிமுறைகளில் அணுகும் விதங்களில் குழப்பங்கள் இருக்காது, ஒழுக்கமின்மை இருக்காது, அது சீரிய செயலாகத் தான் இருக்கும்.

சில பணிகளில் கடமையைச் சரியாகச் செய்தார்களா என்பதை அளக்கும் அளவுகோல் கிடையாது. மருத்துவர் ஒருவரின் பணி நோயாளியின் நோய் குணம் பெறுதலில் அறியப்படுகின்றது. வாகனச் சாரதியின் பணி அவர் குறித்த நேரத்தில் விபத்துக்கள் இன்றி பத்திரமாகச் சென்றடைய வேண்டிய இடத்தை அடைந்ததைக் கொண்டு அறியப்படுகின்றது. ஒரு தச்சன், சிற்பி, கலைஞன் என இப்பணிகளில் ஈடுபடுவோரது செயற்றிறன்களும் கடமை உணர்வும் அவர்களது படைப்புகளில் பிரதிபலிக்கின்றது. ஒரு சில பணிகளில் உதாரணமாக ஆசிரியப் பணியில் இந்தக் கட்டுப்பாட்டை அளக்கும் அளவுகோல் துல்லியமாகக் கிடையாது. எவ்விதமான பணியாக இருப்பினும் உண்மையும் நேர்மையும் கலந்த கடமை உணர்வே என்றும் ஏற்றம் அளிக்கும் என்பதை நாம் அனைவரும் உணர்தல் வேண்டும்.

அத்தனைக்கும் ஆசைப்படு என்பதன் கருத்து. தன்னைச் சுற்றியுள்ள அத்தனை உயிர்களின் நன்மைக்கும் ஆசைப்படு என்பது எத்துணை நிதர்சன வாக்கு. ஒரு செயலைச் செய்யும் ஒருவன் தனக்கு மட்டும் பலன் தர வேண்டும் என்ற நோக்கினின்று மாறுபட்டுத் தன்னைச் சுற்றியுள்ளவர்களும் பயனடைதல் வேண்டும் என்ற பரந்த நோக்கில் சிந்தித்து செயற்பட்டால் எமது செயல்களில் தொய்வு என்பதற்கே இடமில்லை. பலன் என்ற சொல் பெரும்பாலும் செல்வம், பதவி, புகழ், வாய்ப்பு போன்றவற்றையே உணர்த்துவதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதற்கும் அப்பால் மனநிறைவு அதாவது ஆத்ம திருப்தி என்றும் ஒரு பலன் உள்ளது. தன்னலமற்ற கடமைகள் தரும் மனநிறைவால் வரும் மகிழ்ச்சி அதனை அனுபவிக்கும்போதுதான் உணர முடியும். பணத்தைக் கொண்டு தனதாக்கிக் கொண்ட ஒரு பொருளால் இந்த மகிழ்ச்சியை நிச்சயம் பெற முடியாது.

ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள ஒவ்வொருவரும் தத்தம் கடமையை உணர்ந்து செயற்பட்டால் நிச்சயம் அந்தக் குடும்பத்தில் குழப்பங்கள் இருக்காது. உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் வாழ்க்கைத்தரம், செல் வம், கல்வி, பதவி போன்றவை ஒன்று போல அமைவதில்லை இது உலக நியதி. தனக்கென உள்ள வட்டத்துக்குள் முழு மனதுடன் தனக்கு முன்னால் உள்ள கடமைகளைத் தெளிவாக உணர்ந்து செயற்பட்டால் நிச்சயம் சுபிட்சமான எதிர் காலத்தைக் காணலாம். முயற்சி, திருப்தி, சகிப்புத்தன்மை, பொறுமை, பிறருடன் ஒப்பிடாது இருத்தல் பொறாமை இன்மை போன்ற முக்கிய பண்புகள் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது கடமையைச் செய்யும் போது அரணாக அமைதல் மிகவும் அவசியம். எந்தச் சூழலானாலும் தனது கடமைகள் யாவை என்பதை முதலில் ஒரு மனிதன் உணர வேண்டும். பின்னர் அதன் செயலாக்க வழிமுறைகளைத் தெளிவாக வகுத்துக் கொள்ளுதல் வேண்டும். முன்னுரிமைப்படுத்தி பணிகளை வரிசைப்படுத்தி காலம் தாழ்த்தாது தெளிவான சிந்தனையுடன் செயலாக்க முனைதல் வேண்டும். செயற்படும்போது எதிர்வரும் சவால்களைச் சீரிய நெறிகள் கொண்டு உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் சமாளிக்க வேண்டும். கடமைகளை நிறைவேற்றுதல் அன்றி பிரதிபலன் எதிர்பாராது அயராது உழைக்கும் பலத்துடன் வாழ்க்கையை எதிர்கொள்ள வேண்டும். சிந்திப்போம், கடமை உணர்வுடன் செயற்படுவோம்.



## வேற்றுக்கிரக வாசிகளை 2040 இல் மனிதர்கள் கண்டறிவார்களாம்

2040 ஆம் ஆண்டில் வேற்றுக்கிரக வாசிகளை மனிதர்கள் கண்டறிவார்கள் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வேற்றுக்கிரக வாசிகள் இருக்கிறார்களா, அப்படி இருந்தால் எப்படி இருப்பார்கள் என்பது போன்ற கேள்விகள் எம் மனங்களில் எழக்கூடும். வேற்றுக்கிரக வாசிகள் உண்மையாகவே வசிக்கின்றனர் என இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

தோமஸ் ஹேறர் என்ற விஞ்ஞானி கூறுகையில், வேற்றுக்கிரக வாசிகள் எமக்கு அருகிலோ, வெகு தொலைவிலோ நம்மைப் போலவே ஒரு கூட்டம் உயிர் வாழ்வதற்கான சாத்தியக்கூறும் இருக்கிறது. ஆனால் அவர்கள் உணவு சாப்பிட்டு, தண்ணீர் குடித்து எம்மை போலவே இருப்பார்களா என்பது சந்தேகம்.

அவர்கள் வேறு மாதிரியாக இருக்கவும் வாய்ப்பு உள்ளது. ஒருவேளை, அப்படி யாராவது எங்காவது இருந்தால் நம்மைக் கண்டுபிடிப்பதும் சிரமம் அல்ல. அவர்களது இடத்தில் இருந்து பயணிக்க தொடங்கியிருந்தால் 500 ஆண்டுகளிலேயே எம்மை அடைந்திருக்கலாம்.

அதுபோன்ற சம்பவம் இதுவரை நடக்கவில்லை. அதனால், அனேகமாக அதுபோல யாரும் இல்லாமல் இருக்கலாம் அல்லது எம்மைக் கவனிக்காமல் அவர்கள் கடந்துபோயிருக்கலாம்.

மேலும் வேற்றுக் கிரக வாசிகள் இருந்தால் அவர்களை பார்த்து பயப்படவும் அவசியம் இல்லை. அவர்கள் எல்லா வளங்களும் நிறைந்தவர்களாகத் தான் இருப்பார்கள். பூமியில் இருந்து தண்ணீரோ, வேறு எதுவுமோ அவர்கள் எதிர்பார்க்கப்போவதும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.




இந்தநிலையில் வேற்றுக் கிரகவாசிகள் பற்றி ஆராய்ச்சி நடத்தி வரும் விஞ்ஞானி சேத் ஷோஸ்டாக் என்பவர், இன்னும் 25 ஆண்டுகளில் அவர்களை நேரில் சந்திக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

உதயன்
26.02.2014



# உலகின் முதலாவது சூரிய சக்தி விமானம் இந்திய நகரத்திலும் தரையிறங்கும்



99 சுவிற்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த சோலர் இம்பல்ஸ் நிறுவனம் தயாரித்த இவ் விமானத்துக்கும் நிறுவனத்தின் பெயரே இடப்பட்டிருக்கிறது. வான்வெளிகளில் கையொப்பம் என்ற பெயரில் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் உலகம் முழுவதும் பறந்து முடிக்கும் திட்டத்தை சோலர் இம்பல்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி ஆந்ரே போர்ஸ்ச் பெர்க் மற்றும் பெர்ட் ராண்ட் பிக் கார்டு ஆகியோர் வகுத்துள்ளனர்.

பி.விபிஷனா

பகலிலும் இரவிலும் பறக்கும் திறனுடைய, உலகின் முதலாவது சூரிய சக்தி விமானமான 'சோலர் இம்பல்ஸ்' இந்தியா வரவிருக்கிறது. தனது முதுகில் 12 ஆயிரம் சோலர் பேனல்களைச் சுமந்திருக்கும். இது முற்று முழுதாக சூரிய சக்தியால் மட்டுமே இயங்கக் கூடியது.

மத்திய கிழக்கு நாட்டில் உலகப் பயணத்தைத் தொடங்கும் இந்த விமானம், முதல் நாடாக இந்தியாவை நோக்கிப் பயணிக்கிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் புதிய இலக்கை 'சோலர் இம்பல்ஸ்' எட்டியிருக்கிறது.


முந்தைய சோலர் கண்டுபிடிப்புகளில் இரவில் பறப்பது சிரமமாக இருந்தது. அந்தத் தடையையும் தகர்த்து வெற்றிகரமாக வானில் உலாவரும் திறனை சோலர் இம்பல்ஸ் பெற்றிருக்கிறது.

சுவிற்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த சோலர் இம்பல்ஸ் நிறுவனம் தயாரித்த இவ் விமானத்துக்கும் நிறுவனத்தின் பெயரே இடப்பட்டிருக்கிறது. வான்வெளிகளில் கையொப்பம் என்ற பெயரில் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் உலகம் முழுவதும் பறந்து முடிக்கும் திட்டத்தை சோலர் இம்பல்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி ஆந்ரே போர்ஸ்ச்பெர்க் மற்றும் பெர்ட் ராண்ட் பிக் கார்டு ஆகியோர் வகுத்துள்ளனர்.

இந்தத்திட்டத்தின் ஒரு பகுதியாக எதிர்வரும் 2015 ஏப்ரலில் இந்தியாவுக்கு வரவிருக்கிறது இந்தச் சூரியசக்திப்பறவை.

இது குறித்து ஆந்ரே போர்ஸ்ச் பெர்க் கூறுகையில்

"இந்தியாவின் மேற்குக்கடற்கரை வழியாக ஆசியாவுக்குள் நுழையவிருக்கிறது சோலர் இம்பல்ஸ். எந்த இந்திய நகரத்தில் முதலில் தரையிறங்குவது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. இதற்காக இந்தியாவில் கூட்டாளிகளைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். இந்தியாவிலிருந்து மியன்மார் செல்லும்முன் இந்தியாவின் கிழக்குக் கடற்கரை விமான நிலையம் ஒன்றில் தரையிறங்கவும் திட்டமிட்டுள்ளோம்



**12 ஆயிரம் தகடுகள்**

புதிய தொழில்நுட்பத்தை உலகம் தெரிந்து கொள்ளும் வகையில் இப் பயணம் அமையும். விமானத்தின் எடை 2,740 கிலோ. மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் பறக்கும் திறனுடையது. 135 மைக்ரான் தடிமன் (மனித மயிரிழையின் தடிமன்) கொண்ட 12 ஆயிரம் சூரிய சக்தித் தகடுகள் இவ்விமானத்தில் பொருத்தப்பட்டுள்ளன. 144 பக்கவரிசைகளில் 50 செ.மீ. இடைவெளியில் நேர்த்தியாக இத் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. விமானத்தின் மேல்புறம் சூரியசக்தித் தகடுகளாலும். அடிப்பாகம் மிக இலகுவான செயற்கை இழைகளாலும் (அல்ட்ரா லைட் பேப்ரிக்) வடிவமைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் இறகுப்பகுதி முழுக்க காபன் பைபர் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

**உலகப் பயணம்**

உலகம் முழுவதும் சுற்றி முடிக்கும் திட்டம் இன்னமும் 3 மாதங்களில் தொடங்கி விடும். 20 - 25 இரவு மற்றும் பகல் என்ற அளவில் மொத்தப் பயண நாள்கள் அமைந்திருக்கும். மத்தியக் கிழக்கு நாடுகளில் ஏதாவது ஒரு பகுதியிலிருந்து இந்தப்பயணம் தொடங்கும். இந்தியாவில் இரு நகரங்களில் தரையிறங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பசுபிக் கடல் பகுதியில் பறக் கும் 5 பகல் 5 இரவுகள் என்பது தான் இவ் விமானத்தின் நீண்ட பயண நாள்களாக இருக்கும்.

தொழில்நுட்பத் திறனை அதிக பட்சம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பயன்படுத்த வேண்டும் என்ற இலக்கை நோக்கி இளம் தலைமுறையை ஈர்ப்பது தான் எங்கள் பயணத்தின் நோக்கம். புதுப்பிக் கத்தக்க எரி சக்தியை எம்மால் விமானத்தில் பயன்படுத்த முடியும் என்கிற போது அதனைத் தரையிலும் பயன்படுத்த முடியும். தரையில் அதனைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது இன்னும் எளிது" என்றார் அவர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் புதிய இலக்கை 'சோலர் இம்பல்ஸ்' எட்டியிருக்கிறது.


# மறைக்கப்பட்ட தமிழரின் வரலாறு

வலையவன்

திட்டமிட்டே தமிழரின் வரலாறு மறைக்கப்படுகின்றது என்பதற்கு கடந்த கால நிகழ்வுகள் சான்றுகளாக உள்ளன. பூம்புகாரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி,

பூம்புகாரின் ஒரு பகுதி கடலடியில் முழ்கியுள்ளது. இதன் கடற்கரையிலிருந்து 3கி.மீ. தூரத்தில் 75 அடி ஆழத்தில் கிரகாம் ஹான்காக் என்ற ஆழ்கடல் ஆய்வாளர்2012 இல் ஆய்வு மேற்கொண்டார். அங்குக் கடலடி நகரம் ஒன்றைக் கண்டார். அது 11 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று கூறினார். அவருடைய கருத்தை டர்காம் பல்கலைக்கழகப் பேராசிரியர் கிளன் மில்னே உறுதி செய்தார்.

பூம்புகார் நாகரிகம் சிந்துவெளி நாகரிகத்தைவிட மேம்பட்டது என்றும் ஹான்காக் தெரிவித்தார். அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்று, அன்டர்வேர்ல்டு' என்ற தலைப்பில், அவர் எடுத்த நிழற்படங்களை ஒளிபரப்பியது. அவருடைய ஆராய்ச்சி, Flooded Kingdom under the High Seas என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. (திரு நடன காசிநாதன் பூம்புகாரில் கடலடி ஆய்வு மேற்கொண்டார். சில காரணங்களால் அது தொடர்ந்து நடைபெறவில்லை).





1993 ஆம் ஆண்டில், இந்தியக் கடல் ஆய்வு நிறுவனம் (கோவா) மேற்கொண்ட முதல்கட்ட ஆய்வுகளிலேயே, பூம்புகார் நகரின் சிறப்பு வெளிப்பட்டது. இந்திய அரச நிறுவனங்களில் பணியாற்றும் சில தமிழ்ப் பகைவர்களால், இந்த ஆய்வுகள் நிறுத்தப்பட்டன. பணப் பற்றாக்குறை என்ற பொய்யான காரணம் சொல்லப்பட்டது. 1990களில், குசராத்தில் உள்ள துவாரகையை அகழ்வாய்வு செய்ய இந்திய அரசு பல கோடிகளைச் செலவிட்டது. அப்போதெல்லாம் நிதிப் பற்றாக்குறை பற்றிய பேச்சு எழவில்லை. பூம்புகாரின் ஆய்வுகள் தமிழர்களின் தொன்மையை வெளிப்படுத்தி விடும் என்று சிலர் கருதியதின் விளைவாகவே, ஆய்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன. திட்டமிட்டு மறைக்கப்பட்டு வரும் தமிழரின், தமிழ் மொழியின் சிறப்புகள் அண்மைக்கால ஆய்வுகளின்வழி வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

துவாரகைக்குக் கொடுக்கப்படும் சிறப்பு தமிழரின் தொன்மையை வெளிப்படுத்தும் பூம்புகாருக்கோ, சிந்துவெளிக்கோ உரிய அளவில் இந்தியஅரசாங்கத்தால் கொடுக்கப்படாமல் இருட்டடிப்புச் செய்யப்படுவது இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி காலத்தில் நடந்த காலப் பெட்டகம் (Time Capsule) என்ற ஒன்றை நாம் மறக்க முடியாது. ஆரியர்தாம் இந்தியாவின் மண்ணின் மைந்தர்கள் என்பதைப் போல் தவறாக எழுதி தயாரிக்கப்பட்ட செப்புப் பட்டயங்கள் வைக்கப்பட்ட பெட்டகம், மொரார்ஜி தேசாய் எழுப்பிய கேள்வியால் தோண்டியெடுக்கப்பட்ட போது பொய் வரலாறு அம்பலமானது. ஆரியர்கள் தம்மிடம் இருக்காத நாகரிகப் பழைமையைப் பொய்யாக உருவாக்கப் பெரும்பாடுபட்டு வருகின்றனர்.

ஆனால், தமிழர்களின் பழமையான பண்பாட்டுச் சிறப்பை வெளிப்படுத்துகின்ற பூம்புகாரோ, இந்திய அரசால் இன்று வரை உரிய கவனம் செலுத்தப்படாமல் இருப்பதோடு வெளிநாட்டார் இது குறித்து செய்த ஆய்வுகள் தமிழருக்கு மிகச் சிறப்பைக் கொடுக்கின்றன என்ற ஒரே காரணத்துக்காக இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருவது எவ்வளவு கொடிய நிலை.

மறைந்து கிடக்கும் தமிழின், தமிழரின் மாண்புகளை, தொன்மைச் சிறப்புகளை உலகிற்கு எடுத்துக்காட்ட ஆய்வாளர்கள் பலர் குரல் எழும்ப வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.